O23.38.2N55
N06

118640

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாயென்னும்

# மதுரைமான்மியம்.

ஸ்ரீமத்

சிதம்பரசுவாமிகளாற்

செய்தது

கடலூர் காலேஜிபண்டிட்

அ. சுந்தரநாதபிள்ளையவர்கள்

பரிசோதித்து

மதுரைவெள்ளிப்பாத்திரக்கடை

அ. சு. சபாபதிசெட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை:

ம. அழகர்சாமிபிள்ளையால்

மதுரை: ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1908.

Registered Copy Right.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாயென்னும்

# மதுரைமான்மியம்.

ஸ்ரீமத்

சிதம்பரசுவாமிகளாற்

செய்ததை

கடலூர் காலேஜிபண்டிட்

அ. சுந்தரநாதபிள்ளையவர்கள்

பரிசோதித்து

மதுரைவெள்ளிப்பாத்திரக்கடை

அ. சு. சபாபதிசெட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி

மதுரை:

அழகர்சாமிபிள்ளையால்

மதுரை: ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1908.

Registered Copy Right.

இப்புத்தகம் வேண்டுவோர் என்னிடத்தும் கீழ்க்கண்டவர்களிடத்தும் நேரிலும் வீ. பி. மூலமா பெற்றுக்கொள்ளலாம்.

அ. சுந்தரநாதபிள்ளை யவர்கள்
தலைமைத்தமிழ்ப்பண்டிதர், டவுண்காலேஜி கடலூர் N. T.

பொன்னு கனகசபைபிள்ளை யவர்கள்
புதுவைநேசன் பத்திராதிபர்,
புதுச்சேரி.

அ. சு. சபாபதிசெட்டியா ரவர்கள்
பெரியதெரு, 3-நெ. காசுக்கடை, கும்பகோணம்.

அ. சு. சபாபதிசெட்டியா ரவர்கள்
வெள்ளிப்பாத்திரக்கடை, வடக்குச்சித்திரைவீதி, மதுரை.

இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்கள்
புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

மு. கிருஷ்ணபிள்ளை யவர்கள்
பி. நா. சி. ஏஜண்டு புத்தகஷாப்
புதுமண்டபம், மதுரை.

இ. ராம. குருசாமிக்கோனு ரவர்கள்
புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

எஸ். முத்தையபிள்ளை யவர்கள்
புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

வ. மா. கோபாலகிருஷ்ணக்கோனு ரவர்கள்
புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

மு. கருப்பணபிள்ளை யவர்கள்
புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

வி. என். இராகவக்கோனு ரவர்கள்
புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

இங்ஙனம்.

**ம. அழகர்சாமிபிள்ளை.**

புத்தகஷாப், புதுமண்டபம்,
மதுரை.

118640



திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரங்கள்.

கடலூர் காலேஜி பண்டிட்

## அ. சுந்தரநாதபிள்ளையவர்களியற்றியது.

விதம்படு வினைமை நீக்கி வியன்பத மளிக்கும் ஐயன்
மதம்படு மதுரை தன்னில் பயில்திரு விளையாட் டெல்லாம்
இதம்பெறு 'மதுரை மான்மியம்' எனவருந் தனிநூல் போற்றும்
சிதம்பர சுவாமி யென்னுந் திருவுடைப் பெரிய னம்மா.

மதுரை வெள்ளிப்பாத்திரவியாபாரம்

## அ. சு. சபாபதிசெட்டியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சொல்லாரு மறைமுனிவ ரெல்லாரு புகழ்ந்துதினந் துதிக்கு நாடு
மல்லாரு புயத்தனிற்பொன் வில்லாரு மழகனிரு மதுரை வாக்கா
கல்லாருங் குழற்கயற்கண் ணல்லாரு மாசுபுரிந் தவிக்கு நாடு
செல்லாரு மலர்ப்பொழிற்செந் நெல்லாரும் வயலொளிருஞ் செல்வநாடு. (1)

நிலம்வளரு நாட்டினுக்கோர் திலகமென வளருமரு ணிறைந்த நாடு
நலம்வளருந் திருமகளு நாமகளு மனுதினமு நயமுற் றோங்கே
வலம்வளரு மொருநாடு வையையெனு நீணதியால் வளரு நாடு
குலம்வளரும் பாண்டியெனுங் குலம்வளருந் திருநாடித் தகைசா னாட்டின்

நாயகமாய்ச் சிறந்தபொரு ணையுறுஞ்செந் தமிழெனுமோர் நங்கையோங்குந்
தாயகமாய் முச்சங்கந் தழைக்குமொரு தனியகமாய் அவாத சாந்தத்
தூயகமாய் விளங்குமதி கங்கைகொன்றை தும்பைமுடித் துலங்குஞ்சோதி
வேயகமாய்க் கொண்டவரன் விளையாடு மதுரையெனு மேன்மைவாய்ந்த. (3)

அன்னகரிற் சிவபெருமான் றிருவிளையா டற்புரிந்த நலமும் பாரின்
முன்னமுறு மறங்கண்முறை முச்சங்கத் தமிழ்முறையு முதுநூ லாய்ந்த
பன்னரிய பாண்டியர்கள் வரிசமுறை காலவரைப் பலவுங் [illegible]
நன்னயமாய்ப் பலரறிய மான்மியமென் றரியதமிழ் நடையிற்செய்தான் (4)

செந்தமிழி னைந்துவித விலக்கணமு மிலக்கியமுந் தெளிந்த நாவோன்
சந்தமலி சித்தாந்த வேதாந்த புராணங்கள் சாத்திர மார்ந்தோன்
பந்தமறுஞ் சைவமெனுஞ் சற்சமயப் பொற்கடகம் படைத்த கையோன்
செந்தனமென் றிரதமென்றி னடங்கொளான் பாதமுறுஞ் சிந்தையோனே

தத்துவத்தி னிலையறிந்து மாயையெனும் பெருங்கடலைத் தாண்டி ஞால
மத்தனையும் பொய்யெனவே வெறுத்துமன மொருவழியி லொருமித்துமோனச்
சத்துவகுணம் படைத்துத் தகைமையுறு மிப்பெரியோன் றனதுநாமம்
இசைத்தொகுத்துச் சிதம்பரசுவாமியெனச் சிறக்கவாய்ந்தோன்.

அன்னவன்செ யிந்நூலி னருமையினை யாவர்களு மறிய வேண்டிச் [தான்
சொன்னயமும் பொருணயமுந் தோற்றிடவே சீர்திருத்தித் துலங்கச்செய்
பன்னரிய பலநூலிற் பயிற்சியொடு விளங்கியிடு பயனே கொண்டு
நன்மைதருங் கடலூர்சுந் தரநாத னெனுநாம நாவல் லோனே. (7)

வே று.

இவ்வகை யருமை யானநன் முயற்சி யால்வரு புண்ணியந் தன்னை
செவ்வனே யுலகி லியாவரு மடையச் செய்திடுங் கடன்றனக் கென்றே
முவ்வகை நாட்டி னேர்வள முதலா மொழிந்திடு நலமெலாம் பொருந்தி
பல்வமே யகற்றுஞ் சயயநற் குரவ ராற்பல பாடலுங் கொண்டு. (8)

அருண்முதற் பத்தி தன்னையே யளிக்கு மாலவாய்ச் சரிதமாமிந்த
பொருண்மிகு நூலை மிக்கதோ ரன்பாற் புகழொடு வெளியிடச் செய்தா
னிருண்மல மகற்றுங் கூடலம் பதியி னிணையடி மறந்திடா நியமன்
தருநிகர் காணும் வழங்கிய வழகர் சாமியென் றுரைப்பவன்றானே. (9)


மதுரை மேலமாசிவீதி
மு. திருமலைமுத்துப்பிள்ளையவர்க ளியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நற்றமிழ்செய் முனியனையான் சிதம்பரசுவாமியெனும்
நல்லோன் றேர்ந்து
சொற்றதிரு வார்மதுரை மான்மியத்தைக் கடலூர்வாழ்
சுகுணன் கல்வி
கற்றவர்மெய்த் திடுநிபுணன் கண்ணியனைக் கனைக்கிழவன்
களிக்கும் ரூபம்
உற்றிடுசுந் தரநாத நாவலவன் சீர்திருத்தி
யுதவப் பெற்றே.

வாரணிக லாநிதிசேர் வார்சடையா னைப்பணியு
மனத்தான் வாச
வாரணிகன் னியர்மோக னழகர் சாமியென
மகிழ்ந்து கூறும்
போணிகு போசம்பத் துள்ளவனங் கடனகர்
பிறங்குஞ் செல்வன்
பாரணிக டந்தபெரும் புகழோங்கி வளரவச்சிற்
பதித்தான் மன்னே.

உ

சிவமயம்.



திருச்சிற்றம்பலம்.

# திருவாலவாய் என்னும்

# மதுரை மான்மியம்.

காப்பு.

கலிவிருத்தம்.

பத்தி மதுரைப் பரன் திரு வாடல்
முத்தி கருதி மொழிந்திட வொற்று
சித்தி யமைந்த திறம்பரை நல்கும்
அத்தி முகவ னரும்பதப் போதே.

வாழ்த்து கலிவிருத்தம்.

பெய்க வானம் பெருகுக மாநிலம்
மெய்ய நான்மறை மிக்கிட நீடுக
செய்ய மன்னவன் செங்கோல் விளங்குக
ஐய வீச னடியார் துலங்கவே.

## பொருள் வணக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆதியா யநாதி யாகி யருவுரு வெல்லா மாகிச்
சோதியாய் மறைகட் கெல்லாந் தொடர்வருந் தொன்மை யாகி
பேதியா நிலையில் ஞானம் பெருகிய மேலோர்க் கென்றும்
நீதியாய் நிறுவு மந்த நிருமலப் பொருளை யுள்வாம்.

## சத்தி வணக்கம்.

பூமணம் நிகரா வென்றும் பொருந்திட பரனி னீங்கா
தூமணங் கொளவே யைந்தென் றொடர்தரு தொழில்க ளாக்
மாமணங் கமழப் பேதம் மருவிடா திருக்குஞ் சத்தி [கி
பாமணங் கமழும் பாதப் பனிமலர் முடிமேற் கொள்வாம்.

## சோக்கேசர் துதி.

வேறு.

மிக்கபெருங் கைலாயந் தனைநீத்துத் தமிழ்ப்பாண்டி
  வியனன் னாட்டில்
நக்கமதிச் சடைமறைத்து மணிமகுட மணிந்தரச
  நலங்கள் பூண்டு
தக்கவயற் கொடிநிறுத்தி வழுதிமரு மகனாகித்
  தடாதகையைச்
சொக்கனென வந்துமணங் கொண்டுலகு முழுதாண்ட
  துணைத்தாள் போற்றி.

## தடாதகைப் பிராட்டியார் துதி.

பாண்டியனார்க் கொருமகளாய்ப் புவிபோற்ற வந்துதித்துப்
  பாவும் வேதம்
எண்டிசையினுங் கண்டறியா விறைவியருங் கலையுணர்ந்தே
  யிருநிலந்தை
ஆண்டுதிரு முடிபுனைந்தே கோலோச்சி யடியார்க்கிந்தி
  அலங்கல் சூடி
வேண்டியதன் கணவற்கவ் வாசளித்த பெண்ணரசி
  வியன்றாள் போற்றி.



## விநாயகர் துதி.

அறுசீர் நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கங்கைவார் சடையார் தம்பாற் களிப்புட னமர்ந்து நாக
கங்கணந் தனைநீட்டிக் கையினி னளவு காணும்
பொங்கிய மதங்கள் மூன்றும் பொற்புற வழியு ஞானத்
துங்கமால் களிற்றின் பாதத் துகளறக் கருத்திற் கொள்வாம்.

## சுப்பிரமணியர் துதி.

கருவிரு ளிரியக் காலைக் கதிரவ னுதித்தாங் கும்பர்
பொருவறத் துதித்துப் போற்றப் புயனிகர் மயிலின் மீதே
திருவுறை மருமன் பெற்ற திகழ்நுதன் மடவார் சேர[வாம்.
வருமறு முகஞ்சேர் கந்தன் மலர்ப்பதஞ் சிரமேற் கொள்

## நாமகள் துதி.

கலிவிருத்தம்.

புத்தகம் மாலை பொற்புடை வீணை
அத்தமே கொண்ட வாய்வொளிர் மேனி
வித்தக வாணி வியன்பதம் போற்றச்
சித்தமா சோடுந் திருவுறு மன்றே.

## நந்திதேவர் துதி.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

சந்தத மிறைவர் தாளிற் றனித்தனி நெருங்கத் தள்ளி
வந்தரி யயனுந் தேவர் மணியணி மகுடந் தாழ்த்தி
முந்துற விழுவார் தம்மை முதுபிரம் பதனாற் றாக்கிப்
பந்தியாய் நிறுவும் நந்தி பதமலர் பரவி வாழ்வாம்.

## சைவசமயாசிரியர்

நால்வர் துதி.

இழிபுறச் சமய மென்னு மிருப்பிட மழிந்து தேய
வழிவழி யுலகிற் சைவம் வலங்கொடு வளர்ந்தே நிற்க
மொழிதரு பனுவல் செய்த முதுபரன் நிலையைக் கண்ட
அழிவிலாப் புகழ்சேர் நால்வ ரலர்ப்பத மகத்திற் சேர்ப்பாம்.

## தமிழாசிரியர் அகத்தியனார்.

துதி.

ஒப்புயர் விலாத முன்னே றொருமனத் தினத்தில் வேண்டிச்
செப்பருந் தமிழை யோதக் சிவனினை யடைந்து தேவர்
கிப்பிய நெருக்கப் பாரந் தெளிவினில் விலக்கித் தென்பா
லப்புகைப் பொதியத் துற்ற வயர்முனி பதமுட் சேர்ப்பாம்.

அவையடக்கம்.

முப்பொரு ளுணர்ந்த மேலோர் முறைமுறை தமிழை யாய்ந்தோர்
தப்பற மொழிவர் நூல்கள் தழுவிய குருவின் செல்லாக்
கொப்பிய பலருந் தோர வுறாமை யகணித் தொற்றேன்
செப்பருஞ் சிவமே தேமென் றெளிவினை யடைய வென்றே.

நற்குரு மொழியைத் தட்டா நன்பெறச் சிவத்தைப் பற்றி
உற்றுரை கிளக்க வந்தே னுயர்மதி யுடையா ரென்னை
அற்பனென் றறிந்தாற் பின்னு மரன்பத முரைத்தா னீசான்
சொற்படி நடந்தா னென்றே துதிப்பரென் றறிந்து மாதோ.

## நாட்டுச்சிறப்பு.

நீர்வள நிலவளங்களாற் சிறந்ததூஉம், பூமகட்கோர் [illegible]மென விளங்கியதூஉம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலென் [illegible] சொல்லப்படும் நானிலமுந் தழுவி பெருமைச் சிறப்புங்கொண் [illegible] தூஉம், வைகை, தாம்பிரபர்ணி, வைப்பாறுமுதலிய ஆறுகளைத் தன்பாற் மேவப் பெற்றுளதூஉம், செந்தமிழ்த்தலைவனும், தேவர்க ளெல்லாரும் வடதிசைக்கேக வதன்காரணத்தால் வடபுலந்தாழ்ந் து தென்புலமுயர வதனைச் சமப்படுத்துவான் தென்பாலிலனுப்ப [illegible] லனுப்பப்பட்டுவந்து சமப்படுத்தியவனும், மொழிபெயர்க்குங் கவிதைகளாக்கி யுளங்கையிலடக்கி யுண்டிருந்தவனுந் தமிழிலக்கணவரம்பு கண்டவனுமாகிய வகத்திய ரமரும் பொதியமலையும் [illegible] டையதூஉம், வெள்ளிச்சபை, தாம்பிரச்சபையென்னுஞ் [illegible] டையதூஉம், குற்றாலமுதலிய திருப்பதிகளுடையதூஉம், வேற்கைவேள் மேவும்பழநி, திருப்பரங்குன்றம் இடும்பமலை திருச்செந்

# தேவவுற்பத்தி.

வெண்பா.

கங்கைமதிப் பூஞ்சடையார் காதலுமை தன்னோடும்
[illegible]த்தில் கலந்துறைவ மன்னவர்க்கு — தங்குமுடி
சூட்டுநன் செப்பமுறை சொல்லுமுன மூர்த்திக்
கட்டியம்[illegible] செயமாங் குறித்து.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

பரசிவந் தனையுறு பனிமலர் மணமே போல
விரவிய பரமசத்தி விளங்குவ ளவளி னின்றே
மருவரு ளுருவ நாதம் மதிக்கதில் விளையும் விந்து
தருமது சதாசி வந்தான் சதாசிவை யதனின் சத்தி.

வளர்தரு மவர்பாற் றோன்றும் மகேசனும் மகேசை சத்தி
தளர்விலா விவரால் ருத்ரன் தனியுமை யுருவ கின்றோர்
களர்திற லரியுஞ் சத்தி கவின்பொலி தருவர் தந்தார்
விளர்சது முகத்தனை சத்தி வெளிர்கலை மகளைத் தந்தார்.

திசைமுகன் அவ்வா றின்னோர் தெளிவினிற் றரவே யண்டம்
இசைபடப் பலபல் கோடி யெழுந்தன வெழுமா மீதும்
நசைபடு நிலையாம முறை வளிப்பிர விருத்தி காலின்
பசைபடு வழிப தென்பார் பரமனு மூணர்ந்தார் தன்றே.

ஏகமாய் எங்குமாய் எண்குணக் கடலாய் ஆதியாய் அனாதியாய் அளவிறந்த சோதியாய்ச் சொல்லிறந்த சொரூபமாய் மறைமுடிவாய் மறைகளுக்குங் கெட்டாதாய்க் குறியாய்க் குணமாய்க் குறியுங் குணமுங் கடந்ததாய் உருவாய் அருவாய் அருவுருவாய் ஆனந்தமாய்ப் பொன்றுமையாய் அவிநாசியாய் எல்லையாய் அகண்டாகார மனவாக்குக் கெட்டாத பராபரமென்னும், பொருளினிடத்தே பூவின் மணம்போலும், தீயிற் சூடுமை போலும் [illegible] ஒருபொருளாகிப் போலும், இருப்பினும் [illegible] நிற்கும் மூலசத்தி யாகிய பராசத்தி விசிரம்பிக்க நாதந் தோன்றும், அதிலிருந்து விந்து தோன்றும், அதினின்றும் சதாசிவன் தோன்றுவன், அவனுக்குச் சத்தி சதாசிவை, அல்லது மனோன்மணியென்பர்,



அவர்களிடமிருந்து மகேச்சுரனென்பவன் தோன்றுவன், அவனுக்கு சத்தி மகேசை என்பர். இவர்கள் இருவரிடமுமிருந்து அரன் அல்லது உருத்திரன் உதிப்பன், அவனுக்குச் சத்தி உமை இவ்விருவரிடமுமிருந்து அரியுதிப்பன், அன்னவன் றொழிற்குச் சத்தி, லட்சுமி என்பர். இவர்களிடமிருந்தும் பிரமன் உதிப்பன் அவனுக்குச்சத்தி வாணியென்பர். இந்தப் பிரமன் படைக்கப் பலபல அண்டங்களும் அதனுள்ளடங்கிய பொருள்களுந் தோன்றின, இந்தப் பிரமனும் ஆதிசத்தியாகிய பராசத்தியினிடமிருந்து விசிரம்பித்த மூலப்பிரகிருதியின் அனுக்கிரகத்தாலேதான் படைப்பன். படைப்புத்தொழிலொன்றே இவனுக்கு அனுக்கிரகிக்கப்பட்டது. விஷ்ணுவுக்கோ அந்த மூலப்பிரகிருதியின் அனுக்கிரகத்தால் படைத்தற் றொழிலுங் காத்தற் றொழிலு மளிக்கப்பட்டது. உருத்திரனுக்கோ அம்மூலப் பிரகிருதியின் அனுக்கிரகத்தினாலே ஆக்கல், காத்தல், அழித்தல் மூன்று தொழிலு மளிக்கப்பட்டது. இவைகளெல்லாம் பரசிவத்தின் இச்சாமாத்திரத்தினுண்டாகின்றன.

# உலகக் கூறுபாடும்.

காலஅளவையும்.

அரும்பெரு முலகின் பாகும் அமைவுடை நிலையும் மற்றுங்
கரும்பெருங் கடிகை காலந் தழுவிய வினைகள் தன்னைக்
கரும்பெரு மலத்தில் நீங்கிக் கடவுளின் பதத்தைச் சூடும்
விரும்புயர் திருவோர் சொன்ன விளங்குயர் வழியே சொல்வாம்.

சதுமுகன் படைத்த பற்பல கோடியண்டங்களுக்குள் பூலோகமு மொன்று. இப்பூ சற்று நீண்ட வட்டாகாரமான வடிவுடையது. இப்பாரிய உலகந்தன்னை யட்டமாமலைகள் தாங்குவதாகவும், அதனை எட்டியானைகள் * தாங்குவதாகவும், அதனை யாயிரம் பணமகுடங்களையுடைய ஆதிசேடன் றாங்குவதாகவும், அச்சேடன் றன்னை மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய கூர்மந் தாங்குவதாகவும், அக்கூர்மந் தன்னைச் சத்தி தாங்குவதாகவும், அச்சத்தியைப் பரமசிவந் தன் நினைப்பு மாத்திரையாற் றாங்குவதாகவும், கூறப்படுகின்றது. சத்தியுஞ் சிவமுமான ஆதியந்த மற்ற பரம்பர னிச்சைமாத்திரத்தில் அரி பிரமாமுதற் பலவுந்தோன்றி நின்று மறைந்தொடுங்குகின்றன. இத்தோற்ற மொடுக்கமுமாம்

உலகம்பதினான்கு பாகங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கீழேழுலகமும் மேலேழுலகமு மென இருவகையாகும். அவைகளாவன:— அதலம், விதலம், சுதலம், நிதலம்' தராதலம், மகாதலம், பாதாளம், இவைகள் கீழுள்ளன. பூமிக்குமேலே புவர்லோகம், சிவலோகம், மகாலோகம், ஜனலோகம், தபலோகம், சத்தியலோகம் என்பனவுள்ளன. மத்தியில் மகாமேருவிருப்பதாகவும், அதனைச்சுற்றிச் சூழ்விருக்கிற லட்சம் யோசனை விஸ்தாரமுள்ளது, சம்புத்தீவென்றும்; அதனைச்சுற்றி லட்சம் யோசனைக்கு லவண சமுத்திர மிருக்கிறதாகவும் அதற்கப்பால் குச, கிரவுஞ்ச, சாக, சான்மல, பிலட்ச, புஸ்கர, எனுந்தீவுகள் இருப்பதாகவும், அவைகளைச்சூழக் கருப்பஞ்சாறு, தேன், தயிர், பால், நெய், நல்லதண்ணீர் முதலிய சமுத்திரங்கள் சூழவிருப்பதாகவுஞ் சொல்லுகிறார்கள். ஆக வெழுதீவுகள் ஏழுசமுத்திரங்களும் இருப்பதாகப் பெரியோர் கூறுகின்றார்கள். அண்டச்சுவராகிய சக்கரவாள கிரியோடு புறவாழியுந்தழுவிய உதயகிரியில் சூரியன் உதயமாயி மேற்கே அத்தகிரியில் மறைவன்.

## கால அளவை.

—⁂—

| | | |
|---|---|---|
| கண்ணிமை | 2-கொண்டது | கைநொடி. |
| கைநொடி | 2-கொண்டது | மாத்திரை |
| மாத்திரை | 2-கொண்டது | குரு |
| குரு | 2-கொண்டது | உயிர் |
| உயிர் | 6-கொண்டது | க்ஷணிகம் |
| க்ஷணிகம் | 12-கொண்டது | விநாடி. |
| விநாடி | 60-கொண்டது | நாழிகை |
| நாழிகை | 7½-கொண்டது | சாமம் |
| சாமம் | 4-கொண்டது | பொழுது |
| பொழுது | 2-கொண்டது | நாள் |
| நாள் | 15-கொண்டது | பட்சம் |
| பட்சம் | 2-கொண்டது | மாதம் |
| மாதம் | 2-கொண்டது | இருது |
| இருது | 3-கொண்டது | அயனம் |
| அயனம் | 2-கொண்டது | வருஷம் |



இந்த மனுஷ வருஷமென்று சொல்லப்படும். இம்மனுஷ வருஷம் 360-கொண்டது தேவவருஷம் 1.

1-வது கிரேதாயுகம் தேவவருஷம் 4800 மனுஷவருஷம் 1728000.
2-வது திரேதாயுகம் தேவவருஷம் 3600 மனுஷவருஷம் 1296000.
3-வது துவாபரயுகம் தேவவருஷம் 2400 மனுஷவருஷம் 864000.
4-வது கலியுகம் தேவவருஷம் 1200 மனுஷவருஷம் 432000.

மேற்சொல்லிய நான்குயுகங்களுங் கூடின் ஒருசதுர்யுகமாம். ஒரு சதுர்யுகத்திற்குத் தேவவருஷம் 12000 மனுஷவருஷம் 4320000. இவ்வாறு (1000) ஆயிரஞ்சதுர்யுகம் கொண்டது பிரமாவின் பகல் ஒன்றாம். இவ்வாறு (2000) இரண்டாயிரம் சதுர்யுகங்கொண்டது பிரமாவுக் கொருநாளாம். இவ்வாறு 365 நாள்கொண்டது பிரமாவுக் கொருவருஷம். இவ்வாறு நூறுவருஷஞ் சென்றாற் பிரமனுக்கு வயதுமுடியாம். இவ்வாறு பல்லாயிரம் பிரமாக்களும், விஷ்ணுக்களும், ஏனைத்தேவர்களும் மாண்டு மாண்டு அழியினும் காலமிடமற்றெனிருமெம் பெருமானுர்க்கோர் காலமிருப்பதாக வைத்துக் கொள்ளினும் அக் காலக்கடவி லொருதிவலையுங் குறையா; இம்மட்டோ அவர் மேனியிற் படிந்த நாகம் மதியம் முதலியவுஞ் சிறிதுக்தேயா. மேற்சொல்லியாங்கு எத்தனையோகோடி பிரமர்கள் விஷ்ணுக்கள் சிருட்டிக்கப்பட்டனர்.

## தேவாரம்.

நூறு கோடி பிரமர்க ணொந்தினா
ராறு கோடி நாராயண ரங்ஙனே
யேறு கங்கைமண லெண்ணி லிந்திர
ரீறி லாதவ னீச னொருவனே.

அவர்கள் காலமெல்லாம் அளந்துசொல்ல யாந்தரமல்லேம், என்றுமான இறைவரேயறிவர். இதுநிற்க, இப்பொழுதைய பிரமாவுக்கு ஏற்பட்டவயதில் முற்பாதி கழிந்தது. அதாவது:— ஐம்பத்தோராம் வயசுமுதனாட்பகல் இரண்டாஞ்சாமம் ஆறும்நாழிகைபாகும். வைவசுத மனுவுக்கு 28-ஞ்சதுர்யுகமான சுவாதவராககற்பம்.

பிரமன் இவ்வுலகஞ் சிருட்டித்தபின் தான்சிருட்டித்த உலகங்களைக் காக்கவெனப் பதினான்கு மனுக்களை சிருட்டித்தனன். அவர்கள் யாரெனில்? (1) சுவாயம்புமனு. (2) சுவரோசிதமனு.

(3) வாசவமனு. (4) தாபசமனு. (5) சூரியமனு. (6) ரைவதமனு. (7) வைவசுதமனு. (8) தட்சணமனு. (9) அக்கினிமனு. (10) ருத்திரமனு (11) பவுச்சியமனு. (12) பிரம்மமனு. (13) சடசட்சயமனு. (14) தன்மமனு என்பவர்களே.

இவர்களில், முதல்மனுவாகிய சுவாயம்புமனு காலத்தில், சுவாயம்புமனுவுக்கு (1) அக்கினிதிருக்கு. (2) அக்கினபாகு. (3) மேதாவி. (4) ரதுஷமான். (5) துதிமான். (6) கன்னர். (7) வசந்தர் என ஏழுபிள்ளைகள் தோன்றி மேற்சொல்லிய ஏழு தீவுகளையு மரசாண்டு வந்தார்கள். இதில் சுவாயம்புமனு முதற்புத்திரனாகிய அக்கினிதிருக்குக்கு, (1) குரு. (2) இரணியர். (3) அரமியர். (4) பத்திரர். (5) சுவான். (6) பரதன். (7) அரிகேது. (8) மாலி. (9) இளாய் என ஒன்பதுபிள்ளைகள்தோன்றி அக்கினிதிருக்கு ஆண்ட சம்புத்தீவை, ஒன்பது பாகமாக்கித் தந்தம் பெயரால் வழங்கி முறையா யரசாண்டு வந்தார்கள். அப்படியாளப்பட்ட நாடுகளில், இமையமலைக்குத் தெற்கும், கன்னியாகுமரி நதிவரை நீண்டுள்ளதும், கிழக்குமேற்குஞ் சமுத்திரஞ் சூழ்ந்ததுமான நாட்டைப் பரத னரசாண்டான். பரதனாண்ட படியினாலே அந்நாட்டிற்குப் பரதகண்டமெனப் பெயர்வந்தது. அதுவே நமது பாண்டிநாடாகிய மதுரை யமையப்பெற்றுள்ள கண்டம்.

நிற்க, ஒவ்வொரு மனுக்களுக்கும் 71. சதுர்யுகவயதுங் கொடுத்தருளினர். அப்படியே 14- மனுக்களுக்கும், 994- சதுர்யுகங்களாகின்றன. இவ்வாறு (14) பதினான்கு மனுக்களின்காலமுஞ் சென்றால் பிரமாவின் 51-வதுவயது ஆரம்பமுதல் நாட்பகல் கழிய ஆறுசதுர்யுகம் பாக்கியாகும் ஒவ்வொரு மனுவந்தரங்களையும், சந்திகளையுங் கூட்டிக்கழிக்கச், சரியாய் ஆயிரஞ்சதுர்யுக மாகும். பிரம்மனின்முதனாட் பகல்முடிந்திடும்.

---

## முதன்மனுவின் காலம்.

முதன்மனுவின் காலமுதலாக வுலகசிருட்டியினுடனே யுதித்ததாகிய தமிழே, அவர்களுக்குப் பயிலும் மொழியாயிருந்தது காசிபர் தக்கன் மக்கள்களாகிய அதிதி, திதி, மாயையாதியரை மணந்து தேவர், தானவர், மனிதர், விலங்கு முதலியவைகளைப் பெற்ற காலம். நம் பாண்டிநாட்டை முதன்மனுவின் காலமுதற் சந்திர



குலத்தாராகிய பாண்டியர்களே யரசாண்டு வந்தார்கள். இதில் முதன்மனு காலத்தே உலக முதித்ததற்கு முன்னரே முளைத்த சிவலிங்கத்தைத் தேவநாட்டார்கள் வந்து வந்து வணங்கிக்கொண்டிருந்தார்கள்.

---

## இரண்டாவது மனுவின்காலம்.

இரண்டாவது மனுவின் காலத்திலும் அவ்வாறே தேவர்கள் வந்து பூசித்துக்கொண்டிருந்தார்கள். தேவேந்திரனும் புவியிலே நூறு ‡பரிமகமியற்றி யிந்திரப்பட்டம் பெற்ற காலமு மிதுவே.

---

## மூன்றாவது மனுவின் காலம்.

இதுவே இந்திரன், விருத்திராசுரனைக் கொன்ற பழியைக் கடம்பவனத்தலுள்ள சுயம்புலிங்கத்தைப் பூசித்து, விமானஞ் சமைத்துப் புனிதனான காலம் பொற்றாமரையிற் புட்பித்த காலமுமிதுவே.

---

## நான்காவது மனுவின்காலம்.

காசிபர் மக்களாகிய தேவர், தானவர், மனிதர் முதலியவர்கள் தவஞ்செய்தலும், பேருபெற்றலு, மரசாட்சி செய்தலுந், திருப்பாற்கடல் கடந்தமையும், திரிபுரதகனம், சனகாதிமுனிவர்களுக்குபதேசித்தல், மன்மததகனம், முதலிய நடந்தன.

---

## ஐந்தாவது மனுவின்காலம்.

இக்காலத்திற்றான் வெள்ளையானை சாபந்தீர்ந்து சுகமுற்றுத் தன்னையதன் பெயர் விளங்கும் பொருட்டு இந்திரேச்சுரமென்றும் தன் பெயரால் சிவலிங்கப்பிரதிஷ்டை, தடாகமுதலியவை மேற்றிசையிலமைய்க்க நேர்ந்தன.

---

‡ பரிமகம் - அசுவமேதயாகம்.

திருச்சிற்றம்பலம்.

# சுயம்புலிங்கோற்பத்தி.

## சுயம்புலிங்க முளைத்த திருவிளையாடல்.

பூர்வத்தில் உலகம் உற்பத்தியாவதற்குமுன் அம்மையப்பர், மூலப்பிரகிருதியருளாற் றேவர்களைப் படைத்தவர்கட் கிடமும் திருமித்துக் கயிலையங்கிரியில் வீற்றிருந்தருளுஞ் சமையத்திற் றேவர்கள், மாதொருபாகரைப் பார்வைத்த இடையறா அன்பினாற் சிறிதும் பிரிதலாற்றாராய், எங்களுக்கென்றுஞ் சமுகதரிசனமளித் தருளல் வேண்டுமென்று, அஞ்சலிபத்தராய் வேண்டிநிற்க; வெற் றிவேற் காளையைப் பார்த்த கண்ணுதற்கடவுளவர்பாற் கன்றிற் குருகுங் கற்றாப்போலக் கனிந்த வன்புடையராய், நமக்கவ்வண் ணமே செய்வம், நீவிரனைவிரு மெனிகம்மருளாற் பிரமசிருட்டியாற் றோன்றப்போம் பூவுலகில் வேற்றுருவெடுத்திருங்கள், யாமு முன் னரே தோன்றுவமென வருளினர். அவ்வண்ணமே பூமி தோன் றியதும், அவர்கள் குலசேகர பாண்டியரு ளாளப்பட்ட நாட்டின் மேற்காரணியத்திற் கடம்பு, மான், கிளி முதலிய மரவிலங்கு பட்சி களாக மனுக்களோற்பத்திக் காலத்தின் முன்னரே பூமியோ டொட்ட வுதித்தனர். சுவயம் பிரகாசரேறு லைகந் திருட்டிக்குப்பமுன் னரே அவ்விடத்திற் றோன்றியிருந்தார். இவ்வாறு தோன்றிய பின்னர் சில தேவருடங்களாகக் குலசேகர பாண்டிய னரசாட் சிக்குமுன் முதன்மனு காலமாகிய ஆதிசதுர்யுகத்திற் பொன்னுலகி லிருந்து தேவர்கள், புவிக்குவந்து சுயம்புவாகிய ஆதிமூர்த்தியை த் தொழ நீராட வுற்றபோது நன்னீர் கிடையாமையாற் சிவபெரு மானை வேண்டினர். அவர் தன் சூலத்தாற் பூமியைக் கிழித்தார்; உடனே தேவகங்கை கிளர்ந்தெழ, அதின் வேகத்தைத் தடக்கியெல் லைப்படுத்தி யிருக்கிறார். பின்னர் பல்லாயிர தேவவருடங்களாக த் தேவர்கள் புவியில் வந்து வந்து சோதியைச் சுந்தரனை வணங்கிக் கொண்டிருந்தனர். (இக்கதை வச்சிரத்தோணங்கிய கிந்திரற்கு வெகு வெகு முந்தின காலமென மறைவாகவிளங்கத் தோற்றுகின்றது.



1-வது

# தேவேந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்.

திருப்பணிமாலைப் பாட்டு.

எண்ணரிய தானசதுர் யுகந்தனக்கு முன்ன மிந்தவுல கத்த டைந்து கடம்பவனத் தெய்திப், புண்ணியத்தென் னீரம்பொற் றாமரையி லாடிப் பொற்கமலை கொய்துகடம் பாடவிநா யகனைத், தண்ணரியா லருச்சனைசெய் தட்டகசந் தாங்குந் தமனியவிந் திர மான மெனுங்கருப்பக் கிரகம், விண்ணுலகு மண்ணுலகும் பணிந் தேத்த வமைத்தான் விருப்பொடுதே வேந்திரனும் விண்ணவர்நா யகனே.

தேவேந்திரன் தேவபட்டத்திற்கு வந்தபின் வினையிருந்தப டியாகச் செல்வச் செருக்காற் றன் னவைக்கண்ணேவந்த குலகுரு வை மதியாதிருக்கக் குரவன் மனஞ் சினந்துசெல்லவே, செல்வ மெல்லாம் வானதிச்சடையார் முற்பட்டார் முற்பவம்போற்றேயத் தொழிய; ஆற்றானுகி யோர் மகவேள்விசெய்யக் குலகுருவைத் தேடியுங் காணாதாய்ப் பிர்மலோகஞ் சேர்ந்து, பிரமாவிடத்தின் முறையிடத் துவட்டாவைக் குருவாக்கிக்கொண்டு, மகநடத்துக வென; அவனவ்வாறு செய்போது வஞ்சநெஞ்சுடன் வெளிக்குத் தேவர்கட்கே யாக்கங்கூறி, யுள்ளேயசுரர்க்கேயுறுதிசெய்தனைக்கி க் குலிசத்தாற்றுக்கிக் கொன்றனன். உடனே பிரமஹத்தி வந்தெ ய்த, அவற்றைப் பெண், மரம், நீர், நிலத்திற்போக்கி முறையே பூப்பிற்குறுதியும், பிசினும், நுரையும், உவராகவுங்கழிதல்கண்டு சந்தோடமுடையனு யவர்கட்கு முறையே கருப்புற்றபினும், கண வனைச்சேரலும். குறைப்பினும, தளிர்த்தலும். கழுவியமலஞ்சா ராமையும். வடு விரைவில் மறைதலுமாகிய நல்வரமளித்து மகிழ்ந் திருக்குங்காலத்திற் றுவட்டாவின் றந்தை, யிந்திரற்.கோறவெ ன மகஞ்செய்ய, வதன்வாய் விருத்திராசுரன்றோன்ற, வவனைத்ததீசி முனி முதுகென்பாற்செய்த வச்சிரத்தாற் போர் செய்யும்பொழு து, போராற்றாயைக் கடலினுளொழிப்ப, அகத்தியரைக்கொண் டாசமிக்கச்செய் தெஞ்சிநின்ற வசுரனைக்கொன்றான். பின்னர் பிர

## குலசேகர பாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 4100 (நாலாயிரத்து நூறு) க்கு

நடந்த திருவிளையாடல் 1 ஒன்று

# திருநகரங்கண்ட திருவிளையாடல்.

### திருப்பணிமாலைப் பாட்டு.

மலைமகள் கோயிலு நாயகர் கோயிலு மாமதிரு
மலர்கதிர்ச் சூரிய னுதிசண் டேச்சுர னந்தமதா
யிலகிய சுற்றத் திருந்தவர் கோயிலும் யாவுஞ் செய்தான்
பலகலை தேரு முகில்குல சேகர பாண்டியனே.

திட்ட மொடுகடப் பங்காடு வெட்டித் திருத்தியண்ட
மட்டள வுங்கொத் தளக்கோட்டை யுஞ்சக்ர வாளமென
இட்ட முடன்கட்டு வித்திந்த்ர லோக மெனமதுரை
பட்டண முங்கண் டனன்குல சேகர பாண்டியனே.

பரர்சொக்க நாத னுரைப்படி கீழ்த்திசைப் பாங்கபரி
யாபுத் திரன்சத்த மாதாக்கள் தென்றிசை யக்குடபாற்
கருணைப் புயனுத் தரங்காளி கூடலைக் காத்தளிக்கப்
பரிவிற்ப்ர திட்டைசெய் தான்குல சேகர பாண்டியனே.

தனஞ்செயனென்னும் புனிதவணிகன் வாணிபத்தின் பொருட்டு, மேற்றிசைச்சென்று மீளுங்காற், கடம்பவனத்தைச் சமீபிக்கும்பொழுது, பொழுதுபோனமையா லிரவிலங்கே தங்க; அவ்விடத்தி லிரவினிற் பதினாயிரங்கோடி சூரியர்களைப்போல விளங்கும் இந்திரனு லமைக்கப்பெற்ற தேவ விமானத்தையும், அவண் சாரி சாரியாய்த் தேவலோகத்திலிருந்து, பூலோகத்திற்றிறங்கி வருதலையும், போதலையுங் கண்டாச்சரியம் நனியுடைய யவ்விதென்னோ வென வறியச்சென்று நோக்கிச், சோதிமயமணி யிழைத்த கனக

---

நகரமு மியற்றி யமராவதி யமைந்தன. அஃது தற்காலம் அவ்யானையாற் பிரதிட்டைசெய்த சிவலிங்கத்திற்கு, ஐராவதேச்சுரமென்றும். கணேசருக்கு, ஐராவதக் கணேசரென்றும். மருப்பாற் கீண்டுண்டாக்கிய தீர்த்தம் சுயபுட்கரணியென்றும். இந்திரேச்சுரமென்றும் நகரழிந்து ஆனையூரென்றும், பெயர் வழங்கிவருகின்றது.



விமானத்தையும், உள்ளே முளைத்தெழுந்த சிவலிங்கத்தையும், தேவர்கள் பூசித்தலையுங்கண்டு, மீண்டு காலையிற்றன்னகரடைந்து குலசேகரபாண்டியனுக் கறிவிக்க; அவனுங் கனவுகண்டு கனவுக்கேள்வியு மொத்திருந்தபடியாற் கடம்பவனஞ்சென்று காட்சியு மொக்கக்கண் டிறைவனை யிறைஞ்சிப் போற்றிக் காட்டையழித்து நாடாக்கிக் கோயில், மண்டபம், மாடம், கூடம், சாலை, சோலை, கோட்டை, கொத்தளம், கோபுரங்கண் முதலியன வியற்றிப் பொன்னகரினும் பொற்புயர் நகராக்கி, யிந்திரவிமானத்தே யீச்சுரனருளியபடி நிருமித்துத், தன் னிராசதானியை மாற்றிக்கொண் டன்புடன் வசித்தான். இவன் சுவாமிக்கும், அம்மனுக்கு மாபரணங்கள் செய்தணிந்துந், திருவிழாக்க ளியற்றியுந், திருவிழாவிற் காகத் தனமுதலுங் கிராமங்களும் விட்டுவைத்தும், புகழ்பெற்றான். சுவாமியின் சடாடவியிலுறையுஞ் சந்திரனிலுள்ள அமுதத்தை *மழையென மதுரைநகர்முழுதும் பெய்வித்து, மதுரமாக்கியதன்மையால், அந்நாடு "மதுரைமாநகர்" எனப் பெயரெய்தியது. இன்னுங் கோயிலைச்சுற்றி நான்குபுறத்திலுங் கிழக்கே கரியன் சாத்தனையும், மேற்கே விஷ்ணுவையுஞ், சத்த கன்னிகளையும், வடக்கே காளியையும், தெற்கே கன்னியையும் காவல்செய்யும்படி நிருமித்தான். அக்காலத்திற் பாண்டிநாடு வடக்கே வெள்ளாறும், மேற்கே பெருவெளியும், தெற்கே கடல் கொள்ளப்பட்ட கன்னியாறும், கிழக்கே கடலுமாகிய இவைகளைத் தம்மெல்லையாகச் சூழப்பட்டுள்ளது.

வெள்ளாறது வடக்கா மேற்குப் பெருவழியாக்
தென்னார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்கா [illegible] [illegible]
பாண்டிநாட் டெல்லைப் பதி.

*குலசேகரபாண்டியன் அரசாட்சியாரம்பம் 6வது மனுவாகிய வைவதமனுவின் காலத்தில் 24 சதுர்யுகங்கழிந்தபின் 35-வது சதுர்யுக வாரம்பமாகிய கிரேதாயுககாலமே.

குலசேகரபாண்டியன் வடிவமும், தனஞ்செயன் வடிவமும், பொற்றாமரைக் குளத்திற் பாண்டியன்றுறையிற் குடக்குத்தூணிலும், குணக்குத்தூணிலுங் கற்பித்தனர்.

4-வது

## மலையத்துவச பாண்டியன் ஆண்டகாலம்.

தேவ வருடம் 6700 (ஆறாயிரத்தெழுநூறு) க்கு

திருவிளையாடல் 1.

# தடாதகைபிராட்டியார் திருவவதாரம்.

திருப்பணிமாலைப்பாட்டு

சுருப்பணி தார்க்குல சேகர மாறன் றெடுத்தபடித்
திருப்பணி பூசை மதுரே சருக்குஞ் சிறக்கச்செய்து
மருப்பணி சோலை மணலூருக் தந்தனன் வாய்த்தசெம்பொ
பருப்பத மொத்த புயன்மலை யத்வச பாண்டியனே. [ற்

குலசேகர பாண்டியன் மகன் மலையத்துவச பாண்டியன்; இவன்மனைவி, காஞ்சனமாலை. இவன் காலத்திற் றமிழோங்கி வளர்ந்தது. இவற்கு மகப்பேறின்மையால், யாகஞ்செய்து சந்திரசேகரருளால், ஓமகுண்டத் திருந்து மூன்று வயதுடையவளும்; மும்முலை யுடையவளுமாய், அம்மை திருவவதாரஞ் செய்தாள். அதுகண்டு பாண்டிய னொன்றிப் பெண்ணுபினமைக்கும், அதுவு மும்முலையுடனிருப்பதுங் கண்டு, மனவாட்ட முற்றகாலையிலசரீரி வருந்தற்க, ஆண்மகவிற்குச் செய்யுஞ் சடங்குக ளியற்றுக, இவளிறைவியே யிவ்வாறு நின் புண்ணிய மேலீட்டா லுதித்துளாள்; இறைவரே யிவட்குங் கணவனாக வேற்படுவா ரப்பொழுது, மூன்று முலை மறையுமென்று வகுத்துரைத்தருளியது. அதுகேட்டு மனக்களிப்புட னெல்லாச் சடங்குகளு மியற்றிச் சின்றாள்வாழ்ந்து பின் றன்னரசை யம்மைபா லளித்துத் திருவருட்சோதியைக் கலந்தருளினான்.

5-வது

## தடாதகைப்பிராட்டியார் ஆண்டகாலம்.

தேவ வருடம் 1500 (ஆயிரத்தைந்நூறு) க்கு

திருவிளையாடல் 1.

# திருமணம்.

ஆயிரத்தைந்நூறு தேவவருடம் ஆண்டு திக்குவிஜயஞ்செய்து கொண்டு வருகையிற், கைலாயநாதரை வெல்லமுடியாதுங் கண்டவளவில் மூன்றாமுலை மறைந்ததா லவரை மணந்துகொண்டு சோமசுந்தர பாண்டியனென நாமமுஞ்சூட்டித் தன்னரசாட்சியை யளித்தாள்.



6-வது

## சோமசுந்தரபாண்டியன் ஆண்டகாலம்.

தேவ வருடம் 58500 (ஐம்பத்தெண்ணாயிரத்தைந்நூறு) க்கு

திருவிளையாடல்கள் 6.

# வெள்ளியம்பல நடனம்.

திருப்பணிமாலைப்பாட்டு.

சந்திர சேகரர் தென்மது ரேசர்தஞ் சந்நிதியில்
வந்தொரு கோபுர மாமகமேரு வளர்ந்ததெனச்
சுந்தர பாண்டியன் கோபுர மொன்று துலங்கச்செய்தான்
மந்தர நேர்புயன் சுந்தரபாண்டிய மன்னவனே.

அந்தரி யங்கயற் கண்ணு யகிசெம்பொன் னாலயத்துட்
சுந்தர பாண்டிய மண்டபமுஞ் சொக்க ராலயத்தே
சுந்தர மாறன் திருமாமதிலுந் துலங்கச்செய்தான்
பைந்தமிழ் சந்தத முந்தெரி சுந்தர பாண்டியனே.

திருநடு வூர்த்தென் மதுரையிற் செய்த திருநகரின் [யைத்
மருவிய கோயிலொன் றுண்டாக்கி யேயிம் மையினன்மை
தருசிவ லிங்கப் பதிட்டைசெய் தர்ச்சனை தானுஞ்செய்தான்
பருமலை யன்னசெம் பொற்புயன் சுந்தர பாண்டியனே.

திருமண முடிந்தபின்னர் தேவர்கள் யாவருக்குஞ் செய்யவேண்டிய சிறப்புகளைச் செய்து, பொன்னூட்டிற் கனுப்பிவிட்டு மற்றவர்களனைவரையும் நீராடும்படிசொல்ல, முனிவர், கந்தருவர், சாரணர், சித்தர், முதலியோர் மிக்க பசியுடையராய்ப் பொற்றாமரையில் ஸ்நானஞ்செய்து, தங்கள் பூசை முதலியனவைகளை முடித்துக் கடம்பவன லிங்கத்தைத் தொழுது யாவரும் வந்தபின், பதஞ்சலிமுனிவர் வந்து நான் றில்லைநடராசர் திருநடனங் காணு தொருநாளுமுணவருந்தினதில்லையெனச், சோமசுந்தரர் நீர் கடம்பவன லிங்கமாகத் தெரிசிப் மெல்லார்க்குமுன்னே தோன்றிருந்த லிங்கம், அதனை வணங்கி வருகப் பின்பு தெற்கே நடம்புரிவோமென்னச் சொல்லி, வெள்ளியம்பலத்தே சென்று நடனஞ்செய் தருளினார். உடனே முனிவாக ளெல்லாங் கண்களிக்கக் கண்டு, பேரானந்தங் கொண்டு சிறந்த பயன் பெற்றாரெம்பிறைவர்பால் விடைபெற்றுத் தம்மிருப்பிடஞ் சென்றார்கள்.

7-வது

## குண்டோதரனுக்கு அன்னமிட்ட திருவிளையாடல்.

திருமணத்திற்கு வந்த யாவருமுண்டு தந்தமிடஞ் சென்ற பின் அம்மையானவள், சோமசுந்தரப் பெருமானிடம்வந்து பெருமானே! தாங்கள் மிக்க கணங்களோ டெழுந்தருளி, வெள்ளிமலை போல வன்னமு, மேனையமலைகள்போலக் கறிகளுஞ், சமைத்திருக்கின்றவைகளை அமுதுசெய்வீர்கள்; சமைத்த வுணவுகள் சிறிதுங் குறையவில்லை யென வுரைத்தனள். சர்வேச்சுரன் ஓர் திருவிளையாடல் செய்ய நினைத்துத் தனக்குக் குடையெடுக்குங் குறள்வடிவங்கொண்ட குண்டோதரன் வயிற்றில் வடவைத்தீ யுண்டாகவெனநினைத்த மாத்திரத்திற் பசிக்கிறதென்றானுடனே யிச்சிறுவனுக்கன்னமிடென; இட இடச் சோப்பா டெல்லாவற்றையும், அறவுண்டு ஒன்றுமெஞ்சாது, சமைக்க வைத்திருக்கின்ற கறிகளையுங், கனிகளையுந், தானியங்களையு முண்டபின்னும் பசியடங்காதாய், ஈச்சுரனிடத்தில் முறையிட்டான்; அவர் அம்மையாரைவிளித்துப் பரிகாசம் பண்ணலாயினர்.

8-வது

## அன்னக்குழியையும் வைகையையு மழைத்த திருவிளையாடல்.

இச்சிறுவனுக்குன்றே னென்னையளிக்கக் கூடவில்லையே, மற்றையோர்களுக் கெவ்வா றளிப்பாயென, பிராட்டியார் பெருமானை வணங்கிச் சிறியாளிடத்தி லிவ்விளையாட்டுஞ் செய்யலாமோவென, இறைவர்மகிழ்ந்து கபர்த்தன்னனிலைக் கட்டித்தழுவிக்கொண்டு சந்தோஷிப்பித்திருந்தார். அப்போழ்து குண்டோதரன் பசியாற்றாதவனாய் வருந்தி, சோமசுந்தரப் பெருமான் றிருவடி வீழ்ந்து வணங்கிக் குறையிரக்க, அவன்மீது பரிவுகூர்ந்து அன்னக்குழி நான்கு வருவித்தார். அதனை முற்றுமுண்டு ஒருவாறு பசியடங்கி நெற்றிக்



கண்ணுடை நிமலனைத் துதித்துப் போற்றினன். இவ்வண்ணம் நிகழ்ந்ததைக்கண்டு, சிவபிரான் றிருவிளையாடலென வுட்கொண்டுமையவ ளானந்தங்கொண் டிருந்தாள். அப்போழ்து பசியாறிய குண்டோதரன் பின்னும் வெப்பத்தால் நீர்வேட்கையுடையனாய், நாட்டின்கணுள்ள வாவி, மடு, முதலியவற்றை யெல்லாமுண்டுந் தாகந்தீராதவனாய், வெம்பி யலறி யம்புலிச்சடையனா ருடைந்து தனக்குத் தாகங்கொண்டமையைத் தெரிவிக்க, வருண்சுரந்து வைகையெனப் பணித்தனர். உடனே கையைவைத்தா னவ்விடத்தே நதி பெருகச் செய்தனர். அதையுண்டு தாகம் நீங்கித் தெளிவடைந்து களிபூரித்து கண்ணுதலடியை விடாது போற்றிக் களிப்புற்றிருந்தான். இவைகளைப் பிராட்டியார்கண்டு, பெருவியப்பும், விம்மிதமுமுற்று பினாகபாணியைப் பலவிதமாகப் போற்றிப் புகழ்ந்தார். குண்டோதரன் பல குளங்களையும் உண்டாக்கினன். அக்குளங்களுட் கவணமுள்ள வாவியைத் தன்பாற் பெற்ற வூர்க் கவண நல்லூரெனப்படும். ஒரு வாவிக்கரையிற் சடைக்குக் கூறுமீன்ற எழுந்தருளி யிருக்கின்றனர். கையிலோ டாகி நாயக னுலகம் போற்றத் தன்னருள்படிய வினிதரசாண்டிருந்தார்.

9-வது

## எழுகடலழைத்த திருவிளையாடல்.

இவ்வாறு சோமசுந்தர பாண்டியன் மீனம்பிகையோ டரசியற்றி வருங்காலத்துக், காஞ்சனமாலை முனிவர்களிடம் பல வறங்களையும், வேத புராணங்களையு மோதுவித்துக்கேட்டுக்கொண்டிருக்கையிற், கடலிற்படியின் முத்தியுளதென வவர்புகலக் கடல்படிய வேண்டுமெனக் கருத்திற்கொண்டு, தன் செல்வியாகிய அம்பிகையை யழைத்துலகமெலாம் பயந்த தாயே! நின்னை யான் பெற்றதனாற் பெறலரும் பேறுபெற்றேன். நின்னாயகர் சருவலோகங்களுக்குந், தேவர்களுக்கும் நாயகர். அரிபிரமரும், அறியரும், பெரியர், அவர் நினைப்பு மாத்திரையிலெல்லாமாகும், ஆதலின் யான் கடன்மூழ்க வவாக்கொண்டுளேன்; நின் கணவர்க்குணர்த்தி, கடலழைத்திடென்னத் தாயுந் தாயை வணங்கிக் கணவனை மருவித் தன் றாயினுள்ளத்தைத் தெரிவிக்கப் பெருமானார் செவிசாய்க்காதது

போல் வளாயிருக்கக் கௌண்டையங் கன்னியா மன்னையது கண்டு வாட்டமுற்றிருக்கப் பூதநாதன், வாம பாகத் தையலையணைத்து மடிமேலிருத்தி, யின்சொற் புகன்று கவலற்க. இன்னே யொரு கடலன் றேழுகடலும் வருமெனச் சொல்லி வாய்திறமுன்னே அண்டம் பலவு நடுங்கி யென்னைகொமோவென வஞ்சி யேங்கும்படி யெழுகடலு மாகாயத்திற் கிளம்பிவர; வதனை யக்கினி மூலையிற் குளமாகப் படிகெனப்பணித்ததற்கு "எழுகடல்" எனத்திருநாம மிட்டார்.

10 வது

## மலையத்துவசனை யழைத்த திருவிளையாடல்.

மாட்சிமைபெற்ற எழுகடல் களு மொருபடுத்தா யொரு குளனுளடங்கக் காட்டி, மலயத்துவசன் அருந்தவப்புதல்வியே! ஒன்றியகடலொன்றே வேண்டினை உளவாழி யேழு மிப்பா லெய்திய தினி யுனதன்னைபடிந் தாடலாமென்றார். உடனே ஐந் தொழிற் சத்தியா மன்னை, தன தன்னையா லெய்திக் கடலே ழுங் கடிதினி னம்பா லுற்றது, உனக்குளபடியே யுவந்ததிற் படியலாமென்ன; அம்பிகைதன்னை யருமகவெனப்பெற்ற பெருமாட்டி காதன்மகளே! கடவுளாகம்படருங்கொடியே! கடலா டுதல் கொழுநன்கரம்பற்றியானு, மன்றேல் மகவின் பாணிப ற்றியானு, மன்றேல் ஆவின் வால்பற்றியானு மாடல் விதியெ னப் பெரியோர் கூறுகின்றனர். தமியளாகிய யானேது செய்கு வதெனச் சிந்திக்கின்றேனென; அருட்படிவமங்கையா மம்பிகை கருணையங்கடலாகிய சோமசுந்தரர்பாற்சென்று, தாயின் கருத் தினையுணர்த்த, அவருஞ் சிந்தனை வேண்டற் றின்று, இம்மென்று முன்னே நின் னன்னையுடன் கடல்படிய நின் றந்தையாகிய மலை யத்துவசன் முன்னுறத் தோன்றுமென மொழிந்திடு முன்னே தேவர்களு மேனையரு மதிசயிக்க, மலயத்துவசன் புவியிற்றோன் றினன். தோன்றவே யவனைக்கண்டு, புதல்வியுமன்னையும் வணங் கினார்கள். ஈச்சுரனருளாற் காஞ்சனமாலையு மலயத்துவச பா ண்டியனு மொருமிக்கக் கடலாடி யழகிய சொக்கரருளாற் பொன்னுலகடைந்தனர்.



11-வது

## உக்கிரபாண்டியன் திருவவதாரத் திருவிளையாடல்.

இவர்காலத்துந் தமிழ்த்தனைழந்து வந்தது; அம்மையுமழகனு மூலகெல்லாந் தன்னருட்படுத்திச் செங்கோலோச்சிப் புரந்து வரு ங்காலத் தழகுபொருந்திய தமிழும், அருமையாகிய வேதங்களும், யாவரும் பணிந்து வணங்கத்தக்க வேதியர்களும், கோக்களும், மனுநீதியிலொழாதவரும், குணக்கடலெனத் தோன்றியவர்களுமா கிய பாண்டியகுலமுஞ் செழிப்படைந்தன; கடம்பவனச் சொக்க ரருளாற் றடாதகைப் பிராட்டியிடம் விளங்கும், வேற்றடங்கை விளங் கிளையோன் சடையோடு தோன்றினன். தேவர்களும், மனி தர்களு மினியுய்ந்தாரென்று, சங்கவாத்தியங்க ளெங்குஞ் சத்தித் தன; தேவலோகத்திருந்து புஷ்பமழையும் பூமாரிபெய்தது; அந்தண ரந்தயி முதலியன வார்த்தன; யானைந்கண்டு காமிக்கு மழகுட னும் நித்திரம்படுஞ் சர்வ வல்லமைத்துங் கலைகளுக்கும் நிலையமா ய்த்தோன்ற நாளுநம்பி வளர்ந்தனன். ஒப்புயர்வற வளர்ந்த கோனுக்கு நெடுஞ்சடிலம் பிறந்தபடியால் சொக்கநாயகர் சடிலவரு மெனத் திருநாமமிட்டனர்.

12-வது

### உக்கிரபாண்டியன் ஆண்டகாலம்.

தேவ வருடம் 40000 (நாற்பதினாயிரம்)

திருவிளையாடல்கள் 4.

## உக்கிரகுமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த திருவிளையாடல்.

சூரியமரபிலுதித்த காந்திமதியென்னும் பேரழகுடைய பெ ண்ணைத் திருமணம்புரிந்துத் தன்னருட்டை யுனக்காக மகுடஞ் சூட்டிப் பின்னைல் இந்திரன், கடல், மேரு இவை யுனக்குப்பகை யாகவரும், அப்போது அவற்றைச் செய்க்க வேல்; வளை, செண்டு

தருகின்றும் அதனைப்பெற்று, மேருவைச் செண்டாலடித்து, நிலை குலைத்தும், கடலைச் சுவற வேல்விடுத்தும், இந்திரன் முடிதாழ வளையெறிந்தும் வெல்கவென்றளித்துத் தானுந் தையலுங் கோயி லுட்புக்கு தம்மிடமாகிய லிங்கத்துட்கலந்தனர்.

13-வது

## கடல்சுவற வேல்விட்ட திருவிளையாடல்

உக்கிரப் பெருவழுதியின் காலத்துந் தமிழ் தழைத்தது இவ னீர்த்தியோ டரசாளுங் காலத்தே தேவநாட்டாருக்குப் பொறாமை யுற்று மதுரையை யழித்துவிடும்படி யெண்ணி, வருணனைக்கொண் டு மதுரைமாநகரை யழித்திடுகவென, அவனுமதற்குடன்பட்டாழி யையேவ; ஓர்நா ளிராக் கடல்கிளர்ந்து பொங்கிவர ஆலவாயந்தி வண்ணக் கடவுள் கனவினிடைத்தோன்றி "எழுகின்றது கடல் நின்னகரை யழித்திடும் வேலினை யெறிந் தடக்குதி" எனத் துயி லுணர்ந்த கோமா னமைச்சர் சூழ்ந்துசூழ நோக்கச்சென்று புறநக ர் சேர்ந்ததுங் கடல் பெருகி வந்து கொண்டிருப்பதைக் கண்டு கொன்னே நிற்கக் கடவுளே சித்தராய்த்தோன்றி கடல்கடி நகர ழிக்க வெய்தியுஞ், சும்மாவிருத்தலுந் தகுமோ? விடுவிடுவேலெனச் சட்டெனத் தொட்டன னவ்வேல் கடலினுட்புகுந்து கடல் சுவறியது; அம்மட்டோ கடலிறையும் பாண்டியன் காலிற் படிந்து காத்தருளெனத் தஞ்சமிரந்து பின்னுய்ந்து சென்றனன்.

14-வது

## இந்திரன்முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல்.

பாண்டிநாட்டில் வெகுநாள் மழைபெய்தலின்றி நாடு வறண் டமையா, லெல்லோரும் அகத்திய முனிவரிடஞ் சென்று முறை யிட; அவர் சோமவார விரதத்தா லக்குறைநீங்குமென; அவ்வாறே சோமவார விரதத்தை யியற்றிச் சில சிற்றரச ரிந்திரலோகஞ் சென்று மகவானோடு சமவாசனம்பெற் றுயர்ந்திருக்க, மழைபெய் வித்துக்கொண்டு மீண்டார்கள். அச்சமயத்தே யிந்திரன் உக்கிர



ப்பெருவழுதிக்கு வேப்பமாலையணிந்து போற்றினதலால், வே ப்பமாலை யன்றுதொட் டணியலாயினர். பின் சிலகாலமழையின் றி யிருந்தமையால், வேட்டஞ்சென்ற வழுதி யங்கு பொதியமலைச் சாரலிற் புட்கலாவர்த்த முதலிய மேகங்கள் வந்து தங்கியிருக்க வதனைப் பிடித்துக் களிறெனச் சிறையிலிட்டான்; பின்னிந்திரன் றெரிந்து படையெடுத்துவரப் பாண்டிய னிந்திரனை யெதிர்த்து வளையெறிந்து மானபங்கப்படுத்தித் தோல்வியடையச் செய்தான். பின்னரொருவேளாள னிந்திரனுக்காகப் பிணையாகவந்துவேண்ட அவற்காக, அவன்மேல் நம்பிக்கையால் மேகங்களை விடுத்தான். பின்னர் மேகங்கள் முன்போலொழுங்காக வருஷிக்க நாடு, செழித் தோங்கிற்று செங்கோலோங்கியது.

15-வது

## மேருவைச் செண்டாலடித்த திருவிளையாடல்.

இன்னண மிறை பயந்த வெழிற்பாண்டிய னிந்திரனைச் செயி த்து வாகை சூடி யாவருங் கொண்டாட வரசு செய்துகொண் டிரு க்கையில், மழை வளங்குன்றி நாட்டி லிடர் மிகுத்து மாக்கள் வருந் துவதைக் கண் டரசன் வருந்தி ஐமுகக்கடவுளிடம் முறையிட்டுக் கொள்ள, விரவிற் கனவிடை மேரு வில்லாகக்கொண்ட பெருமா னார் சித்தராய்த் தோன்றி, மகாமேருமலைமேல் மிக நிதியமுண் டதனிடஞ் சென் றெடுத்துக்கொண்டு மற்றையவு முன்னதாக முத்தரித்துவருகவென. விடிந்தபின் னரசன் சேனையோடுசென்று மேருவையழைக்க, வரத் தாழ்த்தமையாற் சிகரமிசைச் செண்டா லடிக்க, மேருவு மற்றைய வுலகமும் நடுங்கின; மேருவரசனோடி வந்து வணங்கிப் பிழை பொறுத்தருளென வேண்டிப், பின் றாழ் த்தக் காரணத்தையுங் கூறித் தேடிவந்த நோக்கம் யாதென வின வினன்; உக்கிரப் பெருவழுதியுங் காரணங்கூற; உடனே யழைத்து ச்சென்று நிதியமிருக்கு மிடத்தைக் காட்டி யினி இஃதுன்னதே யிவற்றை யனுபவித்துக்கொள்ளென; பாண்டியன் றனக்குவேண்டு மட்டு மெடுத்துக்கொண்டு, மீந்தவற்றை முன்போல் மூடிந் தன

தெனத் தன் முத்திரையையும் பொறித்து மீண்டு தன்னகர்வந்து சோமசுந்தரத்தையும், மீனாட்சியம்மையையும் வணங்கிச் சுகமே யரசியற்றிக் கொண் டிருக்கையிற், றனக் கோர் குமாரன் பிறந்தன னவனுக்கு வீரபாண்டியனென நாமகரணஞ்செய்து, கலை முதலி யனபயிற்றுவித்துத் தக்க வயதெய்தியவுடனே மகுடஞ்சூட்டித் தந்தையடி சேர்ந் தின்புற்றிருந்தனன்.

---

16-வது

## வீரபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 8400 (எண்ணாயிரத்து நானூறு.)க்கு

### திருவிளையாடல் 1.

## வேதத்திற்குப் பொருளருளிச்செய்த திருவிளையாடல்.

---

இமையவருந் தொழுதுபோற்றும்வீரபாண்டியன் செங்கோ னடாத்துங் காலத்தில், நைமிசாரணிய முனிவர்க ளாயினோர் வேதத்திற்குப் பொருள் விளங்காரா யிடர்ப்பட் டுள்ளம்வாடி யிருக்குங்கால், வியாதனென்னொரு தேவவேதியன் றோன்றி யவர் கள் வாட்டத்தின் காரணமறிந்து ஐயன்மீர்! நீவிர்வாட்டந்தவிர்க, பதிகளிலெல்லா மிக்க கடம்பவன மெய்ப்பதியிறையவனை வேண்டின் அச்சொக்கரே சோகந்தவிர்ப்பாரென; அன்னவருஞ் சரியென வுள ங்கொண்டு கூட லடைந்தங்கப் போற்றுஞ் சொக்கேசர் பெருமான், அன்னவரும் பெருமுனிவர் முன்றோன்றி வேதத்தின் பொருளைச் சிவகுருவோதி யுள்ளசைபக்கத் தெளிவிக் கருட்பெருங் கடலெனும் ஐயர் சோதிலிங்கத்துள் மறைந் தருளினார். இம்முனிவர் யாவருமவி ழ்ந்து பெம்மானு மருள் விளையாட்டினை மெச்சிப் பெரும்பேறு பெற்றோராய்த் தம்பதி மீண்டனர்.

---



17 வது

## அபிஷேகபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருஷம் 4800 (நாலாயிரத்தெண்ணூறு)க்கு

### திருவிளையாடல்கள் 5.

## மாணிக்கம்விற்றதிருவிளையாடல்.

---

வீரபாண்டிய னரசாட்சிசெய்து கொண்டிருக்கும் பொழுது தன் பட்டமகிஷிக்கு மகப்பேறில்லாது, காதற்கிழத்திகள் பாலரும் மைந்தரைப் பெற்றனர்; பின்னர் கரியுரிபோர்த்த கண்ணு தலையுங் கயற்கண்ணம்மையையும் பூசித்த பெரும்பேற்றால் ஓர் ஆண்மகவு பிறந்தது, அதற்குக் கலைமுதலியனவைகள் பயிற்றிக் கண்ணெனக்காத்து வருகையி லொருநாள் வேட்டம் விரும்பின னாய்ச்சென்ற வழுதி புலிவாய்ப்பட்டிறந்தான். காமக்கணிகையரு மவர்தம் மைந்தர்களு மதுவே சமயமாகக் கொண்டு கரிபரி முதலியவும், பொன்னாபரணம், மணிமுடி முதலியவெல்லாங் கவர்ந்து கொண்டகன்றனர்; பின்னர் மந்திரிகள் இராசகுமாரனுக்கு முடிசூட்டநினைத்து வேண்டுவ சித்தஞ்செய்து முடிசூட்டமணி முடிதேடிக்காணாராகி, மிகக்கவன்று முடிசூடுதலை நிறுத்தித் தம் மிட மிருந்து களவுகொள்ளப்பட்ட மணிமுடி, நவமணிப் பூண் முதலியன புதிதாயியற்ற வெண்ணி, நவமணிகள் கிடைக்காமற் சிக்கிரமியாந் தரசற்கு முடிசூட்ட நினைத்து மாணிக்கந் தேடிக் கொணரப்புறப்பட்டனர். அப்பொழுது, அநாதரட்சகரும், ஆபத்பாந்தவருமாகிய ஆலவாயழக ரன்பர்களுக்குதவிப் புரக்கநினைத்து மாணிக்கவியாபாரி போல் வந்து பல அரிய அழகிய விலைமதிக்கக் கூடாத நவமணிகளைக் கொணர்ந்து, விலையின்றிக் கொடுத்து விண்ணிடைகரந்தார். எல்லோருங் கண்டானந்தித்துத் தேசிபாகன் றிருவிளையாட்டென மகிழ்ந்து பாடித்துதித்து முடிமுதலிய ஆபரணங்கள் செய்வித்து முடிசூட்டிப் பெருமானார் திருவரு ளாலபிடேகஞ்செய்தனர். சோமசுந்தரக்கடவுளருளா லபிடேகஞ் செய்யப்பெற்றதனா லபிடேகபாண்டியனென்னும் பேர்பெற் றிலங்கினன்.

18-வது

## வருணன்விட்ட கடலை வற்றச்செய்த திருவிளையாடல்.

அபிஷேகபாண்டியனென்பான் பொன்னிறச்சடைப்புக்கவற்க்கும், அண்ணல்பாகத் தம்மையார்க்கும், பூசையியற்றிக் கற்பூரத் தினை லபிஷேகஞ்செய்து கற்பூரலிங்கர், கற்பூரவல்லியெனத் துதித்து வணங்கிக்கொண்டிருக்கும் பொழுது, இந்திரன் பூசைசெய்ய வந்தபோழ்து பாண்டியன் பூசைசெய்து கொண்டிருந்தமையால் வெளியே சற்றுத் தாமதித்திருந்து பாண்டியன் பூசைமுடித்துச் சென்றபின் றன்பூசைமுடித்துக்கொண்டு பொன்னுலகடைந்தான். குலிசக்கடவுளைக்காண்பான் வந்தடைந்த வருணன் இந்திரன் றாமதத்திற்குக்காரணம் வினவுத றான் புவியிற்சென்று சோமசுந்தரக்கடவுளை வணங்கின விஷயங்களையும், தன்பாவந்தீர்ந்த மகத்துவத்தையு முறையேகூறினன்; வருணன் றன்பெரு வயிற்றுநோய் தீர்க்குமோவென வினவினன். அதிசயங்களாலுந் தீர்க்கொணாத்பிறவிநோயைத் தீர்த்தருளுந் தேவதேவற் கிதுமோ ரருமையோவென, அவனவ்வாறாயி னவர்திறனைச் சோதித்தறிந்து பின்னவரா லென்றெப்பகைத் துப்போவெனச் சென்று கடல்களையேவி மதுரையையழித்திடுமென. அவைகள் பொங்கியெழு பிறநாடழியாதெனுந் தன்மையுடைய மதுரைமேற்பெருகி வர, வரும்வேகங்கண்டு மதுரை யின்றேடழிந்ததென விண்ணவருமஞ்சினர்கள். பாண்டியன் சொக்கர் திருத்தாளில் வீழ்ந்து எம்மைக்காத்தருளல் வேண்டுமென வேண்டப் பேயோடாடும் பெருமான் சடாபாரத்திலுள்ள மேகங்களை யேவ, அவைகள் கடலை வற்றவுண்டு பெருமானார் சடைத்திற் பிறங்கமேவியது. தென்னன் திருவருட் டிறத்தை வியந்து கொண்டாடி மகிழ்ந்து பூசைகளியற்றி யினிதிருந்தான்.



19-வது

## நான்மாடக்கூடலான திருவிளையாடல்.

கங்கைச் சடாடவிக் கண்ணுதற் சடையிற்றங்குங் கொண்டல்கள், கடனீரைமுற்று முண்டதைக்கண்டு, வருணன் கடுங்கோபங்கொண்டு, கண்கள்சிவந்து, தன்பாலுள்ள வேழுமேகங்களையேவி மதுரை யழியும்படி மழைவீழ்த்துகவென. அம்மேகங்களேழு மன்றே யுலகங்கண்முற்று மழிந்ததென வெவருஞ் சொல்லும்படித் தாரை தாரையாய், நீர்வீழ்த்த வாரம்பித்தது; பாண்டியன்முதலோர்கண் டஞ்சிக் கற்பூரலிங்கர் கடிமலர்த் தாளில் வீழ்ந்து வணங்கி, நீயே சரணெனத் துதித்தார்கள். இருநீர்க்கங்கை யெழிற்படுசடைய ரெல்லோரும் படும்பாட்டைக் கண்டு, மனமிரங்கி யஞ்சலென மலர்க்கரங்காட்டித் தன் சடாபாரத்திலுள்ள மேகங்களை மாடமாக வளைந்து, மதுரையைக் காத்திடுமெனவே; அவைகள் சென்று, மதுரையை நான்மாடங்களாக வளைந்து மூடி பொருதுளி யுமுட்புகாது காத்தது. வருண னிதனைக்கண்டு சோமசுந்தரர்வலியறிந் தஞ்சிச், சரண்புகுந்து போற்றித் தன்குற்றத்தைப் பொறுத்தருளல்வேண்டித் தானிந்திரனைக் கண்டதுமுத லெல்லாஞ் சொல்லி, யரிபிரமற்கரியவுன்னைச் சோதிப்பான் றுடங்கிய பிழையைப்பொறுத்தருள்செய் தென்னோயைத் தீர்த்தருளல்வேண்டுமென; இந்திரற்கருளிய விறைவ ரிணங்கி, வழுகடற்றலைவ! பொற்றாமரைத் தடத்தே படி, உன் னோயறுமென; அவனு மன்னணஞ் செய்து நோய்நீங்கப்பெற்றுப் பெருஞ்சுகமடைந்தான். அவ் வருணன், சுந்தரலிங்கத்தைப் பூசித்துத் தன்பெயரா லநேக வாபரணமுதலிய வமைத்துப் புனிதனாய்த் தன்பதிபுக்கான்.

20-

## எல்லாம் வல்லசித்தராய திருவிளையாடல்.

அபிடேகபாண்டியனுங் குடிகளு மெவ்வகைத் துயரினின்று நீங்கிப் பலவகைச் சுகமுடையராய் வாழுநாள், காமனையெரித்த கண்ணுடைக்கடவுள், கூடலார்தம்மை வீடடைதற்கேற்ற மெய்ஞ் ஞான முடையராக்க வெண்ணிய வருளுடையரா யெல்லாம் வல்ல

சித்தராய், மதுரைவீதியிற் றோன்றிச் சிறிதைப் பெரிதாய், பெரிதைச் சிறிதாய், ஆணைப் பெண்ணாய், பெண்ணை யாணாய், முதியரை வாலிபராய், இளைஞரை முதியராய், கிழவியைக் கிழவராகக் காணரிதாம் புதுமைகள்காட்டிக் கொண்டு மதுரையி லேககாலத் தெங்குமா யுலாவினர். இதனைக்கண்டு சிலர்க ளோடோடியும் பாண்டியற்கறிவிக்க, அவன் அச்சித்தரை யழைத்துவம்மினெனச் செப்பினன். அவர்களுஞ் சித்தர்பா லெய்தி, யும்மை யரசன்வர வேண்டினனை; அவர் நம் மரசன்பா லெமக்காக வேண்டிய தொன்றில்லையெனக்கூறி மறுத்து முன்போலச் சித்துக்க ளியற்றிக்கொண்டிருந்தார்.

---

21-வது

## கல்லானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடல்.

§உழைய ரோடோடிச்சென் றரயனிடத்தே சித்தர் செப்பிய வாங்கே செப்ப; அரச னாச்சரியமுடையனாய், உண்மைச் சித்தர்களுக் கரசன்மட்டன் றிந்திராதி தேவர்களாலு மாவதொன்றில்லை, நீவி ருரைப்பதை நோக்குங்கா லிச்சித்த ராலவாய்க் கடவுளே யிவ்வுருவோடு நமக் கருள வந்துளாரென நினைக்கின்றேன், வம்மி னவரைச் சென்று காண்பமென, அமைச்சராதியர் புடைசூழச் சென்று வடதிசையிற் சித்துகளியற்றுங்கண் டரச னவரை வணங்கி, யடிகளெவ்வூர்? இவ்வூர் வந்தகாரணம் யாது? யாதுவேண்டுமென வினவினன்; எல்லாம்வல்லசித்தர் புன்முறுவல் காட்டி, எமக்கோ ரூரொன்றில்லை, எவ்வூரு மெம்மூரே யாயினும் யாமிப்பொழுது காசிமாநகரினின்றும் போந்தனம், சைவத்தலங்கள் பலவுந் தரிசித்து வருகின்றோம். இக் கூடல்கண்ட வளவிற் சீவன்முத்தி தருந் திருவுடைமையா லிவணுற்றனம், எந்த சித்துக்களைப் பலருமறியக்காட்டி வருகின்றோம், யாமோ எல்லாம் வல்லசித்தன். நின்னி யான் பெறக்கூடியதொன்றில்லை, என்னால் நீபெறவேண்டிய பலவுமறிவன விசைத்தார். அச்சமயத்தே யொருவன், கரும்பு கையில் வைத்திருத்தலைக் கண்டு கரும்பை யருளிருகக்கல்

§உழையர்-ஏவல்செய்வோர்.



யானை தின்னச் செய்விரேல் நீரெல்லாம் வல்லசித்தரேயாம், அம்மட்டோ வின்னும் ஆலவாய்க்கடவுளும்நீரே யென்ன; பெருமானு மவ்வாறே செய்வல்காணு மென்னக் கல்யானை மதமொழுகு முயிரியானையாய்க் கைகளைநீட்டிக் கரும்பைப்பறித்துத்தின்றது. பின்னுஞ் சித்தர் கடைக்கண் காட்ட, அவ்வியானை பாண்டியன் கண்டத் தொளிரு மாலையைப்பற்றி யீர்த்தது; உடனேவீரர்சென்று யானையை யடிக்கப் புகுங்கால், சித்தர் சீறுமெனக் கையமர்த்தினர். உடனே ※ஓவியம்போற் சும்மா செயலற்று நின்றுவிட்டனர்.

பின் னபிடேக பாண்டியன் சித்தர் பாதங்களில்வீழ்ந்து வணங்கிக் குற்றத்தை மன்னிக்கவுந் தனக்குப் புத்திரப்பேறுண்டாகும்படி யனுக்கிரகிக்கவும் வேண்டினன். சித்த ரவ்வாறே யாகுமென ஆசிர்வதித்து மறைந்தனர். பின்ன ரபிடேக பாண்டிய னாலவாய்க் கடவுளே யெல்லாம் வல்லசித்தராய் வந்தனரென்று கோயிலெய்தி வணங்கி வந்தனன்; வல்லிசித்தராம் வரைமகள் பாகன் திருவருளால் விக்கிரம பாண்டியன் பிறந்தான். அவனை முறைபெற வளர்த்துக் கலைகள் பலவும் பயிற்றுவித்து, மனு நெறிமுறை தாழா தரசியற்றுவென வணிமணி மகுடஞ்சூட்டிச் சோதிலிங்கா சுந்தரப்பதத் தைக்கியமானான்.

---

22-வது

## விக்கிரமபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 4600 (நாலாயிரத்தறுநூறு) க்கு

திருவிளையாடல்கள் 2.

## யானையெய்த திருவிளையாடல்.

கல்லானை யானதை யெல்லாருங் காணக் கரும்புதந்த
யெல்லாமும் வல்லசித் தர்க்குப்பொற் கோயி லினிதமைத்தான்
வல்லாரில் வல்லவன் சந்த்ர குலேசன் மகாமன்னவன்
பல்லாரும் போற்ற திருக்கூடல் விக்ரம பாண்டியனே.

மட்டா ரலங்கல் புனைசோழன் விட்ட மதகளிற்றைக்
கட்டா ரழல்விழிச் சிங்கக் கணைதொட்டுக் காய்ந்தசொக்கர்க்
கட்டாலை மண்டப முண்டாக்கி ஞானஸ லறந்தழையப்
பட்டாபி டேகம் புனைகூடல் விக்ரம பாண்டியனே.

※ஓவியம்-சித்திரம்

விக்கிரமபாண்டிய னரசாட்சி செய்துகொண்டு வருங்காலத்திற் காஞ்சிமாநகரிலிருந்தோர் சோழன் படையெடுத்துவந்து வெல்லவல்ல னல்லனாய்ப் புறங்காட்டி யோடித் தன்னாடு சென்று, சமண முனிவர்களை வருவித்துப் பாண்டியனை யெவ்வாற்றானு மந்திரவலியாற் செயம் பெறுவித்துத் தருவீரே லந்நாட்டிற்பாதி யுமக்களிப்பனென வாக்களித்தா, னவ்வண்ணமே யவர்களோ ரியாகஞ் செய்தார்கள். அதனின்று மோர் மதக்களி றிருப்புலக்கையுடன் றோன்றிற்று; அதனை மதுரைமேலேவித் தாங்களும் பக்கபலமாய்ச் சென்றனர். பாண்டியன் வேகமாய் வந்த களிற்றையுஞ் சேனையையுங்கண்டு, கூடலமர் குழகனைச் சரண்புகுந்து போற்றி விண்ணப்பித்துக்கொள்ள, கறைமிடற்றண்ணலே யசரீரியாகப் "பாண்டியனே! பயப்படற்க" யாமே நின் சேனைவீரன்போற் சென்று வென்று வருவம்; நீ நெறிமிசை யட்டாலை மண்டப மொன் றியற்றுக, கவலை யொழிகெனப் புகன்று போயினார். பாண்டியனும் அருட்டிறத்தை வியந்து போற்றிச் சிந்தையின்றிக் கோயிலெய்தியிருந்தான். அச்சமயத்து மாயக்களிறும், யமண முனிவர்களும், மாயவே மதுரைநாயகனா னெம்பிரான் விளங்குறு வீரனாய்ச் சென்று, யானையைப் பாணமெய்து கொன்று பழியுடை யமணரை யழிய வதைத்து மறைந்தருளினார். பாணம்பட்டிறந்த யானை, பருத்த மலையா யின்னும் விளங்குகின்றது. செழியன் சிந்தையின்றிச் சிறப்புறு பூசனைக ளியற்றிச் சிம்மாசனமீதிருந் தரசிய னடத்திவந்தான்.

---

23-வது

## விருத்தகுமார பாலரான திருவிளையாடல்.

விக்கிரமபாண்டிய னரசியற்றி வருங்கால், விருபாக்க னென்னுஞ் சிவபக்தியொழுக்க முதலியவற்றிற் சிறிதுங்குன்றாவேதியனு, மவன்மனைவி வடமீன்போலுங் கற்புடைச் சுபவிரதை யென்பவளு, மில்லறநடாத்தி வருகையின், மங்கைபாகர் திருவருளாலொருபுத்திரிபிறந்தாள். அவட்குக், 'கௌரி' யென்றுநாமகரணஞ்செய்து சீராட்டிவளர்த்து வருகையிற், பிறைபோல் வளரும்



பெண்ணை, யொருநாள் தன்னில்லத்திற்கு யாசகத்திற்குவந்த பிரமச்சாரிக்கு, விவாகஞ்செய்தாற்றந்தை பின்குலமுதலியனவைகளுணர்ந்து வருந்தி யெல்லா மாலவனையமர்ந்த வேண்டெய்வமென்றே தேறி, வரிசைகளுட னவளைப் புருஷனுடனனுப்பினன். கண்டோரெல்லாம் யாசகம்புகுந்த பிரமச்சாரிக்குவந்த யோகமேயோகமென வியந்து பேசினார்கள். அவன்வீட்டாரோ வைணவர்களாதலினும், சம்ப ணிபவள் வீட்டுப்பெண்ணென நிந்தித்துக் கூறிப் புறம்பாக வைத்துக் கொடுமையேசெய்து வந்தார்கள். அவர்கள் கொடுமைக்கோ வளவில்லையாயினுங் கற்புடையநங்கையவ், கூற்றையுதைத்த பதங்களையனுதினமுஞ் சிந்தித்துப் பிறப்பறுத்து, முத்திதருவதாகிய விபூதியைப்பணிந்த வடியாரைக்காணுஞ்சமயமின்றி, யன்னோரைக்காணக்கிடைக்குநா ளென்றோவென்று மனம் வாடியிருந்தாள். ஒருநாளப்பெண் றேனைத்தரவந்தா லவன்மாமி முதலியவெல்லோரு மயித்த கிராமத்திற்குத் தம்மினத்தவர் மணத்தின்பொருட்டேகினர், அத்தினத்திலவள் மட்டுந், தனித்திருந்தோர்த்தனு. தனித்திருக்கும்போழ்து தெவரேனுஞ் சிவனடியார்கள் வந்து தரிசனந்தந்து மனக்கவலையமாற்றாரோ வெனச் சிந்தித்திருக்கையி லரிபிரமற்கரியனு, மடியார்க் கெளியனுமாகிய மெய்யன் விருத்தவேடத்தோடு தோன்றி யன்னம் வேண்டுமென, அவள்மனங் கலங்கிச் சுவாமி! யெம்மவர்க ளெல்லாஞ் சிவச்சின்ன முடையவென்னை வெறுத்துப் புறத்தே தள்ளி நிந்தித்து வருகின்றார்கள்; இன்று சமையற் பொருளெல்லா முள்ளறைக்குள் வைத்துக் கபாடபந்தனஞ் செய்துபூட்டியிருக்கின்றார்களென. விருத்தர் நீ கபாடங்க ளருகிற்செல்லிற் றிறக்குமென, அவளருகிற் செல்லக் கபாடங்கள் திறந்தன, உட்சென்று நல்ல பதார்த்தங்களெடுத்துச் சுவையுடைய வமுதாக்கி ஐயனுக்குப் படைத்தனள். உண்டப்பனும் வாலிபராய்விளங்கினர்.

கௌரிகண்டஞ்சி யீதென்ன விந்தையா யிருக்கிறதென் றெண்ணிக் கொண்டிருக்கையில், வீட்டவர் வந்தனர். அதுகண்டு மிகநடுங்கியிருக்கையில், வாலிபராயிருந்தவர், குழந்தையாயினர். உடனே மாமி யிக்குழந்தை யேதென, யாரோ வொருபுருடனு மவன் மனைவியு மிப்பிள்ளையை யிங்கே கிடத்திப் பார்த்துக் கொள்ளெனச் சொல்லிச் சென்றனரென்று பயந்து சொல்லினள். அதுகேட்டுக் கொடுமாமி யுரைக்கிறுத்தனை யாணவமோவென வவளை

யுங் கைக்குழந்தையையும் வெளியே தள்ளிவிட்டனள். உடனே குழந்தையாயிருந்தவர் ரிடபாரூடராய்க் கௌரியுந் தன்னிடப்பாலி லிருக்க விளங்கினர். யாவருங் கண்டு போற்றித் துதிக்க விண்புகுந்தனர். விக்கிரம பாண்டியன். பெம்மானார் திருவிளையாடல் கண்டு மென்மேலும் பத்தியுடையவனாய்ச் செங்கோலோச்சித் தன்மகன் இராசசேகர பாண்டியனுக்கு மகுடஞ்சூட்டிச் சுந்தரனடிநிழ லடைந்து சுகமுற்றான்.

---

24-வது

இராஜசேகரபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 9700 (ஒன்பதினாயிரத் தெழுநூறு)க்கு

திருவிளையாடல் 1.

## மாறியாடின திருவிளையாடல்.

இராஜசேகர பாண்டியன் றில்லையம்பலத்து நடனவிலும் பெரியன். நடனஞ்செய்வதால், அத்தொழிலைத் தானுஞ் செய்வது சரியல்லவென் றெண்ணிப் பரதநூலொழிந்தேனைய நூல்களனைத்துங் கற்று மாசறுமணிபோல் விளங்குநாள், ஒருநாள் சோழநாட்டிற் றிருவானைக் காவி லெழுந்தருளிய நாதர்க் கன்புடைய வொரு புலவன் வந்து, பாண்டியனைக்கண் டெம்மரசன் கரிகாற் பெருவளவனுக் கெல்லாக் கலைகளும் வரும். நினக்குப் பரதநூல் வாராதாதலால், நீ எம்மரசனினுங் குறைந்தவனென்றான். உடனே குறையுடையவனாயிருக்க விரும்பாது, பரதநூல் வல்ல புலவனையழைத்துப் பரதநூன் முற்றுங் கற்றுப் பயிலுதல் சிரமமுடைத்தாயிருத்தலாலுந், தேகவருத்தந் தருதலுங்கண்டு வெள்ளியம்பலத்தே நடம்புரியு மீசற்குப் பாதநோமென மனநொந் தொரு நாளிரவு, நாலு சாமமும் பூசனையியற்றிக் குன்றவில்லியைக் கான்மாறி யாடும்படிச்செய்து, என்றுமே யவ்வண்ணமிருக்க வரம் வேண்டிப் பற்பல பூசனையியற்றிப் பூமகள் மகிழ நல்லரசியற்றித் தன் மகன் குலோத்துங்கனுக்கு முடிசூட்டிச் சோமசுந்தரனிடத் தைக்கியமாயினான்.

---



25-வது

குலோத்துங்கபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 6300 (ஆறாயிரத்து முன்னூறு)க்கு

திருவிளையாடல்கள் 3.

## பழியஞ்சின திருவிளையாடல்.

குலோத்துங்க பாண்டியன் பதினாயிரம் பெண்களை மணந்து சுகமாக வாழ்ந்துகொண் டிருந்தான். ஒவ்வொருவர்க்கு மாறாறுபதினாயிரம் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களி லனந்தகுணனென்னும் பட்டமகிஷி வயிற்றிற் பிறந்தமகன், தாரகணங்களினிடைமதியம்போல விளங்கினன்; மக்க ளின்புறவுலகம் களிக்கவு மாசாண்டு வருங்காலத்தி லொருநா ளொருவேதியன் றிருப்பத்தூரிலிருந்து கருப்பிணியாகிய தன் மனைவியொடும், ஒரு கைக்குழந்தையொடும், மதுரையிலுள்ள தன் மாமனார் வீட்டிற்குவந்து கொண்டிருந்தான், வழியிற் றாகமாக விருக்கிற தென மனைவிகூற வொருபெரிய ஆலமர நீழலிற் குழவியையும், அவளையு மிருக்கவென வியம்பி § உதகங் கொண்ரச் சென்றனன்; திரும்பிவந்து நோக்குங்கால், குழந்தை யழுதுகொண்டிருப்பதையும், பாணந் தன் மனைவி வயிற்றிற் றைக்க மடிந்து கிடப்பதையுங் கண்டு, மிகப் பிரலாபித்து, அழு தரற்றி யொருவாறு தேறி யிது செய்ததாரெனத் தெரிந்துகொள்ளச் சுற்றிப்பார்க்கையின், மரத்தின் பின்பக்கத்தில் வில்லு மம்புமாக வொருவேட னிருப்பதைக்கண் டிவனே கொன்றானெனத் தீர்மானித்து மனைவியை முதுகிற்சுமந்துகொண்டு, குழந்தையைக் கையிற் றாக்கிக்கொண்டு, வேடனை மடிபிடித் திழுத்துக்கொண் டரசன் சமுகத்தே சென்று முறையிட; அரசன் பலவிதத்தும் விசாரித் துண்மை புலப்படா தெம் பெருமானு ரிட முறையிட; அவர் கனவிற்றோன்றி, சமீபத்தி னடக்குங் கலியாண வீட்டில வந்திருந்தா லுண்மை புலப்படுமெனச் சொல்லி மறைந்தார்.

அரசனிவைகளனைத்துஞ் சொக்கேசர் திருவிளையாட்டென வெண்ணி, வேதியனை யழைத்துக் கொண் டக்கனியான வீட்டின் மறைந்திருந்தனர். அப்பொழுது கரியமேனியையுடைய விரண்டு தூதர்கள் பேசுவதுஞ் செய்வதும், ஆலமுண்டவ னருளாற் றோன் றிற்று; அச்சமயத்தின் மணமகனா யிருப்பவனுக்கு வயது முடிவானபடியால், அவனை யழைத்துவரும்படி யெமனா லனுப்பப் பட்டதூதர், தம்முட் பேசிக்கொள்வாராயினர். இவனுயிரை யெவ்வித காரணத்தால் கவர்வதெனவொருவன் கேட்க; இஃதென்ன கடினமா? அடவியிலிருந்த பார்ப்பினியை மரத்தின்மேலிருந்த அம்பினைக் காற்றினலைசைத்துப் பார்ப்பினியைக்கொன்றதுபோற் சமீபத்திற் கட்டியுள்ள பசுவின் றும்பைத் தறித்து, மாட்டின் கொம்பிலிருந் துயிரினைக் கவரல்வேண்டுமென; அதுவே சரியெனத் தேறி, யவ்வாறே செய்து மணமகனுயிரைக்கவர்ந்தனர். இவைகளைக்கண்டு கேட்டிருந்த வேதியனு மரசனுந்தெளிந்து, வேடுவனை வீணில் வருத்தியதற்காக மனம் வருந்தி வேட்டுவனுக்கு மிக்க பரிசு கொடுத்து, வேதியனுக்குப் புதுமணமியற்றிக்கொள்ள பொன்னுங் கொடுத்தனுப்பினான். இவ்வாறீசனருளாற் பழியினின்று நீங்கியதற் கரசன்பேரானந்தங்கொண்டு, சடாடவிச்சங்கரனுக்கு விழாமுதலிய வியற்றிப் பூசித்துவந்தான்.

26-வது

## மாபாதகந்தீர்த்த திருவிளையாடல்.

குலோத்துங்கபாண்டிய னரசியற்றி வருநாட்களி லவந்திநகரத்தொரு வேதியனு மவனழகுடை மனைவியுமாக வாழுநாளி லொரு துர்க்குணமுடைய மகன் பிறந்து வயதடைந்ததுந் தாயினைப் புணர்ந்தினைத்துத் தகப்பனைக் கொன்று, நாட்டிலிருப்பிற் பழிப்பரென வன்னையு மகனு மயற்கிராமஞ் செல்லுகையில், வழியிற்சில கள்வரவனை யடித்துத் துரத்திப் பொருளினையு மவன்றாயையுங் கவர்ந்துகொண்டார்கள். இவனுக்கு மாபாதகந் தொடர்ந்து பல பல நாட்டிற்றிரிந்து பின் கடம்பவனம் வந்ததும் பாதகந்தீர்ந்து பின் வுதித்துச் சொக்கலிங்கரைப் பூசித்துப் புனிதனாயினான். நாட்டாரெல்லாங்கண்டு சுந்தரநாதன் றிருவருளாற் றொலையா மாபாதகந் தீர்ந்தவருமையை யினைத்துப் போற்றித் துதித்திருந்தனர்.



27-வது

## அங்கம்வெட்டின திருவிளையாடல்.

குலோத்துங்கபாண்டிய னீதிவழுவா தரசியற்றி வருநாளிலோர் விருத்தன், வாள்பயிற்றுவித் தநேகரை வல்லவராக்கிப்புகழ் பெற்றிருந்தானதிற் சித்தனென்றொருவன் கற்று யாரினும் வல்லனாய்த்தேறி மீறி தனித்தொருகூடஞ் சமைத் தநேகர்க்குப் பயிற்றுவித்தான். ஆசான்கிழவனாதலான், மாணவர்கள் சித்தனிடமே மிகுதியும் வந்துசேர்ந்து பயின்றுவந்தார்கள். இவன் றுன்மார்க்கனாதலாற் குருபத்தினியை யிச்சித்துத் தினந்தினம்வந்து, குறிப்பித்துக்கொண்டிருந் தொருநாள், வலாத்காரஞ்செய்ய, வம்மாதுசிரோமணி யக்கொடியன் கையிற்றப்பி மனையுட்புக்குத் தாட்கோலிட்டுத்தன்னைக் காத்துக்கொண்டு, கடம்பவன சுந்தரனைப் போற்றித் துதித்துத் தன்குறையனைத்துங் கூறிப்பிரலாபித்தாள். இறைவர்தோன்றி யஞ்சற்கவென் றபயந்தந்து சித்தனைவிளித்து வாட்போர்க்கழைத்து கிழவன்றானே யென றம் வென்றவிடலாமென் றெண்ணியந்த குருபத்தி யில்லாத கபவனைவெட்டிச் சிதைத்தருளினார். இவ்விடைய மூரெலாம் பரந் தாரார் திரியம்பக மேந்திய சுந்தரனைத்துதித்துப் போற்றினர்.

28-வது

### அனந்தகுணபாண்டியன் ஆண்டகாலம்

### தேவவருடம் 4200 (நாலாயிரத்திருநூறு) க்கு

### திருவிளையாடல்கள் 2

## நாகமெய்த திருவிளையாடல்.

குலசேகரபாண்டியன் பல்லாயிர வருட மரசாண்டு, அனந்தகுணசேகர பாண்டியனுக்குப் பட்டஞ்சூட்டி, அயன்றலைக் காத்தறுமுகன்றாதை தாளடைந்துய்தான். அனந்தகுணபாண்டிய னரசாட்சி செய்து வருங்காலத்திற், பற்பலாயிர வமணர் பாண்டியனை யழிக்கவேண்டி வேள்வியியற்றி யதினின்றுமொரு கொடுவிடநாகத்தை யுண்டாக்கி, மதுரையை விழுங்கி வருகவெனவிடுத்தனர்.

எல்லாருங்கண் டஞ்சினார்கள், பாண்டியனே சிறிதுமஞ்சாது போர்க்கோலங் கொண்டு நாகத்தைப் பெய்து கொன்றனன். நாகமிறக்கு மமையத், கொடியவிடத்தைக் கக்கிமதுரைக் கேட்டையுண் டாக்கியது. அதனையீச்சுரன் சடையிலிலங்குஞ் சந்திர னமுதினால் விடக்கொடுமையைநீக்கி, முன்போல் மதுரைமாநகராக்கினார்.

---

29-வது

## மாயப்பசுவைவதைத்த

### திருவிளையாடல்.

சமணர்கள் முன் றுங்களேவிய களிறு மாய்ந்ததுபோலாக மழியக்கண் டெனசெய்வதென யோசித்துப், பாண்டியர்கள் பசுவைக் கொல்லாரென வெண்ணி, யாககுண்டத்திலிருந்து மாயப்பசுவை யுண்டாக்கி மதுரையின்மேலேவ, வதுகண்டுபயந்து மனிதர்களுந் தேவர்களுங் கௌரிபாகனிடந் துதித்துப் பணிந்து முறையிட்டுக்கொள்ள, வரைஞ்சலென வபயங் கொடுத்துத் தன் னந்தியையேவ, வதுசென்ற மாத்திரத்தி னந்தமாயப்பசுமயக்கிக் காமங்கொண்டு வீரியமனைத்துங் கழலவிட்டு வீழ்ந்துயிர்விட்டு மலையாய் விளங்கிற்று.

இக்காலத்திற்றான், சீராமர், இலங்கைக்குப் போகும் பொருட்டு அங்குவந்து, அவ் ‡விடபமலையிற்றங்கி யகத்திய முனிவரா லத்தலமான்மியப் பெருமையைக் கேட்டன்புற்று, எம்பெருமானைப் பூசித்துப், பின் றென்கிழக்குத்திக் கடைந்து கடலிற் சேது கட்டி இலங்கையிற்சென்று, இராவணசம்மார முடித்துச் சீதையைச் சிறைமீட்டிவருங்கால், சேதுவிற் சிவலிங்கப் பிரதிட்டை செய் தயோத்திக்கேகியது.

‡ இடபமலையென, அருணகிரியாராலும், நக்கீரர்முதலியசங்கப் புலவர்களாலும் பாடல்பெற்று, வேற்கைக்குமாரவேட் பெருமான் அறுபடைவீட்டிலொன்றாகி, பழமுதிர் சோலையெனப்பெயர் பெற்றதலத்தில் வழங்கிவந்தன. தற்காலமட்டும், அஃது அழகர்மலை யென்றும், திருமாலிருஞ் சோலையென்றும் வழங்கிவருகிறது.



### குலோத்துங்கபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 7400 (ஏழாயிரத்துநானூறு)

இவர்காலத்துத்திருவிளையாடல்களில்லை.

---

### அனந்தகுணபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 10 100 (பதினாயிரத்துநூறு)

இவர்காலத்துந் திருவிளையாடல்க ளில்லை.

---

### குலபூடணசமபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 6300 (ஆறாயிரத்துமுந்நூறு)

இவர்காலத்துந்திருவிளையாடல்க ளில்லை.

---

### அனந்தவிதகுணபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 5500 (ஐயாயிரத்தைநூறு)

இவர்காலத்துந் திருவிளையாடல்க ளில்லை.

---

30-வது

### குலபூடணபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 3900 (மூவாயிரத்துத்தொளாயிரம்)

### இவர்காலத்துத் திருவிளையாடல்கள் 3.

## மெய்க்காட்டிட்ட திருவிளையாடல்.

குலபூடணபாண்டியன் அரசாட்சிசெய்து வருங்காலத்திற், காட்டரசனாகிய 'சேதிராயன்' மிக வன்மையுடையனாய்ப் பாண்டியற்கு விரோதமாய் மீறுவதைக்கேட்டு, சேனைதிரட்டும்படிச் சாமந்தனென்னுந் தன் சேனைத்தலைவற் களவற்ற பொன்கொடுத்துச் சேனைசேர்க்கச்சொல்லினான். அவன் சிவபத்தனாதலால், வழக்கம்போற் சேனைதிரட்டா தப்பொருளனைத்தையுஞ் சிவனடியார்களுக்குஞ், சிவகைங்கரியத்திற்குஞ் செலவிட்டான். அரச னிஃ

46-வது

## பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கின திருவிளையாடல்.

அன்னையைப்பிரிந் தாயினையிழந்து பாலினையிழக்காத் தாயினையளித்தருளிய, அப்பனார் முலைகொடுத்தருளுற்ற தன்மையாலிருரு பன்றிக்குட்டிகளு மானுடவுடம் பெடுத்துப் பன்றிமுகத்தோடும், கலைகண் முற்றுமுணர்ந்த மிக வழகுடையராகவு மிருந்தனர். சிவபெருமான், பாண்டியன் கனவிலெழுந் தோன்றி, யெம்மன்பினர் பன்னிருவ ரேனமுகத்தோ டெழிற் பருகாளையராய் ஞானமுணர்ந்த வராயிருக்கின்றனர். அவரை நினக்கு மந்திரிகளாக்கிக் கொள்ளென. மன்னன் விழித்தெழுந்தவர்களைத் தேடிக்கண்டு தன்மந்திரிகளாக்கிச் சிறப்புச்செய்து வைத்தான். இப்பன்னிரு மந்திரிகளும் பாண்டியற்கு, நன்மை பலவிளைத்து ஞானகுரிசாய் விளங்கி, பின் கயிலையுற்றுச் சிவகணங்களாகத் திகழ்ந்தார்கள்.

47-வது

சுகுண பாண்டியன் ஆண்டகாலம்.

தேவ வருடம் 5500 (ஐயாயிரத் தைந்நூறு)க்கு

திருவிளையாடல்கள் 2.

## கரிக்குருவிக் குபதேசித்த திருவிளையாடல்.

இராசராச பாண்டியன், விண்ணடைந்து, பொன் கலந்தபாகரோண்மலர்த்தாணைஞ்சலி, பெண்ணைநுந்தகறுற்றான். பின்னவன் மகன் சுகுணபாண்டியன் முடிசூடி, யரசியலாற்றி வந்தான். ஒருவன் றன்பாவத்தாற் "கரிக்குருவி" யாகப்பிறந்து, காகமுதலி யபட்சிகள் தனக்கூறு செய்யவாற்றாதால் வென்செய்வதெனவேங்கியோர் மரக்கிளைமே லிருக்கையிற், பறவைசெய்த முற்றவப்பயனாலொருசிவவேதிய னம்மாநிழலுற்று, கூடலிலே மூர்த்திவிசேடம், தலவிசேடம், தீர்த்தவிசேடமுடையது; கண்டளவின்முத்தி



தருவதென மொழியக்கேட்டு, மெய்ஞ்ஞானமுற் றக்குருவி பொற்றாமரைக் குளத்திற்படிந்து மூன்றுபகல் நோன்புசெய்தது; உடனே சிவபெருமான் றோன்றி 'சிவாமிருத்தஞ்சியா' என்னு மந்திரமுபதேசஞ் செய்தருளினார். கரிக்குருவி பரனைப்போற்றி, பரவித் தன் குறைகளெல்லாம்புகல; ஈசனக்குருவிக்கும், அதினினத்திற்கும். வன்மையையு மீந் தக்குருவிக்கு முத்தியுந் தந்தருளினார்.

48-வது

## நாரைக்கு முத்திகொடுத்த திருவிளையாடல்.

மதுரையி லொரு தாமரைத் தடாகத்தில், ஒருநாரை வசித்துக் கொண்டிருந்தது; அத்தடாகத்திற் றண்ணீர் வற்றியுணர்வற்றதால், நாரை, தபோதனர்கள் வசிக்கும், அதோ தீர்த்தமென்னு மழகிய தடாகத்தில் வந்திருந்து, முனிவ ரவ்விடத்து நீராடிக், கூடலுயகன் கொற்றத் திருவிளையாடற் பெருமைகளை யோதிக் கொண் டிருப்பதைக்கேட் டந்நாரைக்கு, ஞானந்தோன்றிப் பொற்றாமரைக்குளத்தை நாடிச்சென்று, நீராடிக்கரைக்க ணிருந்து பதினைந்து நாள் நோன்புநோற்றது; பதினைந்தாநாட் பசியால் வருந்தியது. அங்கோர் மீன்றுள்ளக்கண்டு பிடித்துண்ண விரும்பி, ஆலவா யம்மான் புனிதத்தீர்த்தத்துள்ள, சீவனைச்சிதைக்க நினைத்தேனே யென மனம்வாடிநிற்கையி லீச்சுரன் றோன்றி, யாதுகாரணம் பற்றிநோற்கின்றாயென. ஐயனே! அற்பப்பிராணியாகிய தமியேன், நின்னலர்ப்பதம் பற்றிப் பிறவிக்கடல் கடந்து, விடெனுங்கரையடைய நோற்கின்றே னென்றது. அதனைக்கேட்ட நஞ்சுண்டகண்டர் மனமகிழ்ந்து, அஃதளித்தன மின்னும்வேண்டும் வரங்கேளென. பரங்கருணைத் தடங்கடலே! கடல்சுவறவிட்ட காலகால! பொற்றாமரைத் தடத்தின் மீன்முதலியன விருப்பதா லென்போலிய பறவைகளுக்கு, நோன்புசெயற் கிடையூறாகின்றன; வாதலினவைகளிலா தாக்கியருளல் வேண்டுமென, வதற்கவர் சம்மதித்து, மீன்முதலியன வின்மையாக்கி மறைந்தருளினார். பின்னர் நாரை, பொன்னுலகரு மடைதற்கரிய கைலாயப் பெரும்பத மடைந்து சிவனையுற்றுச் சிறப்புற வாழ்ந்தது.

## இவர்கள்காலத்துத் திருவிளையாடல்களில்லை.

| | |
|---|---|
| சித்திர மேரு பாண்டியன் தேவவருஷம் | 6200 |
| சுகுண சேகர பாண்டியன் | 6100 |
| சித்திர விரத பாண்டியன் | 8300 |
| சித்திர பூஷண பாண்டியன் | 10600 |
| சித்திரத்துவச பாண்டியன் | 4700 |
| சித்திர வர்ம பாண்டியன் | 5800 |
| சித்திர சேன பாண்டியன் | 7400 |
| சித்திர விக்கிரம பாண்டியன் | 10200 |
| இராச மார்த் தாண்டன் | 9600 |
| இராச சூடா மணி | 8700 |
| இராச சார்த் தூலன் | 6300 |
| துவிசாரச குலோத் துங்கன் | 4400 |
| அயோதனப் பிரவீரன் | 3300 |
| இராச குஞ்சரன் | 5700 |
| இராச பயங் கரன் | 4400 |
| உக்கிர சேன பாண்டியன் | 5800 |
| சத்துரு சயன பாண்டியன் | 4500 |
| வீரபரா க்கிரம பாண்டியன் | 3400 |
| விமத் தோ மன்னன் | 2200 |
| பிரதாப மார்த் தாண்டன் | 5300 |
| விக்கிர மஞ் சுகன் | 7500 |
| சமர கோலா கலன் | 9100 |
| அதுல விக்கிர மன் | 5200 |
| அதுல கீர்த்தி பாண்டியன் | 3400 |
| கீர்த்தி பூஷண பாண்டியன் | 2400 |

ஆகவித்துவரைப் பாண்டியர் பட்டங்கள் ஐம்பத்திமூன்று. இவ்வைம்பத்துமூன்று பாண்டியர்களும், நானூற்றறுபத்தேழாயிரம் தேவவருடம், அரசாண்டார்கள். இவர் ஆண்டும், ஆளாமலுஞ் சென்ற தேவவருடங்கள் பதினேழாயிரம். ஆகவருடம் நானூற்றுநாற்பத்துநாலாயிரத்திற்கு 6-வது மனுவின் சதுர்யுகம் முப்பத்தேழுஞ் சரி. மேற்படி மனுப்பிரளயமாகி 7-வது மனுவாகிய வைவசுதமனு நாளையில், சோமசுந்தரர் திருவருளால், சில அறிகுறிகடவிர மற்றையன வழிந்து காடாகவிருந்தகாலம் தொண்ணூற்றேழாயிரத்து முன்னூறு தேவவருடம்.



### 49-வது

## வங்கியசேகர பாண்டியன் ஆண்டகாலம்.

### தேவ வருடம் 29100 (இருபத்தொன்பதினாயிரத்துநூறு) க்கு திருவிளையாடல்கள் 3.

# ஆலவாயான் திருவிளையாடல்.

கீர்த்திபூடணன் அரசியற்றுநாளில் பிரளயகாலம் வந்தது. அப்பொழுது சத்தசமுத்திரங் கரைகடந் தார்த்துப் பொங்கி, ஒருங்கெழுந் துலகத்தை யழித்தன. சோமசுந்தரக் கடவுளுடைய விமானமும், மீனாட்சியம்மை கோயிலும், இடபமலை, யானைமலை, நாகமலை, பசுமலை, பன்றிமலை முதலியவு மழியாதிருந்தன. வெள்ளம் வற்றியபின் சிவபெருமா னுலகத்தை முன்போலப் படைத்துச் சந்திரன், சூரியன், அக்கினியென்னு மூவருடைய குலத்தினின்றுந் தமிழ்வேந்தர் மூவரையும் படைத்தருளினார்.

அப்பொழுது சந்திரவமிசத்துதித்த வங்கிசசேகர பாண்டியனரசாட்சிசெய்து வருங்காலத்தின் முன்போல மக்களும் பிறவும் பெருக, இடம்போதாதாகிச் சோமசுந்தரரை நோக்கி முன்னிருந்த வெல்லைகாணேன், எங்கோவே! இவர்களுக்கிடமெங்கே வகுப்பது? நகரினெல்லை காட்டவேண்டு மெனப் பன்முறை பரவிவேண்ட; நீரணிசடையார், நீறணிமெய்யர், சீரணிநாகர், போரணிவில்லர், காரணிகண்டர், ஏரணி கருணைகூர்ந்து பேரணியன்பனே! யாம் நாளைக் காலை குறிப்பம், அவ்வண்ணங் கோட்டை கட்டுதியென வியம்பித் தன் சிறுவிரன் மோதிரத்தை யெடுத்தெறிந்தனர். பேரரவாக மாநகரைவளைந்து நிற்க; அவ் வெல்லைக்குக் காடுகளை வெட்டிப் பரஞ்சோதியா ரருளாற் கோட்டைவகுத் தகழியாக்கிப் பொன்னகர் தனினும் பல்லாயிரமடங்கு பொலிவெய்தும்படி செய்து கூடகோபுரம், மாடமாளிகை, சோலைசாலை, செய்குன்று, மணிமரங்கு முதலியன முன்னினும்பிறங்க வாக்கி, வீதிகள் வகுத்து முறைப்படுத்தி, நால்வருணத்தாரையுங் குடியேற்றிக் கடைச்சங்கமென, முன்னோர்போலப் பெருஞ் சங்கமுமியற்றி மலைமகண் மருவியவாமனார் கோயிலைப் பொலிவுடையதாக்கிப் பொன்னணி நவமணிப் பூண்முதலிய வியற்றி, முறைகோடா தரசாண்டுவந்தான். கோட்டையின் வடக்கே யிடபமலையும், தெற்கே பரங்குன்றும், மேற்கே யேடகமும், கிழக்கே பூவணமுமாய வெல்லை தழுவி நிற்கவமைத்து, இந்திரனும் மெள்க வரசியற்றிவந்தான்.

50-வது

## சுந்தரப்பேரம்பெய்த திருவிளையாடல்.

வங்கிய சேகரபாண்டியனரசியற்றி வருங்காற், சோழனயற் புலத்தரசர்தக் துணைக்கொண்டு பாண்டியன்மேற் படையெடுத்து வர; அஃதறிந்த பாண்டியன் பன்னைமையுடைற் பரம்பரன் கோயிற் புக்குப் பரவித் துதித்துக் குறைசொல்லி யிரக்க. அம்மைபாகத் தைமுகக் கடவு ளஞ்சற்க, நீயெதிர்த்துப் போர்செய்க, யாம்வந்து வெற்றி வருவிப்பமெனச் சொல்லி யருளினர். அவ்வணமே பாண்டியன், சோழனை யெதிர்த்துப் போர்புரியச் சோழன், வெற்றி யடைய வெவ்வுங் காலத்து வீரனைப் பாண்டிய னொருவனாய்நின்று போர்செய் தலைட்டுகைபி லந்நிய சோழன், இஃதியாரோ யித்தகைய பாணந் தொடுப்பவனென, மெய்யிற் றைத்த பகழியைப் பிடுங்கி, நோக்குகையிற் 'சுந்தரன்' என வெழுதி யிருக்கக்கண்டு நடுங்கிச் சோமசுந்தரரேயென வோட்டம்பிடிக்க வாரம்பித்தான்; அதுகண்டு துணைவந்த வரசர்கள், சோழனைத் தடுத்து விரைந்தோடு பொருதடைவீர்த்து, மெய் வீடடைந் தனர்கள். பின் சோழன் றோற்றுத் தன்னகரோடி யொழிந்தான்; பின் பாண்டியன் வெற்றியடைந்து, வாகைசூடிச் சுந்தரநாதனை யஞ்சாவிரலைப்ப தோன்றிச் சுந்தரப் பேரம்பெய்து சுந்தரவானை குடச் செய்தானெனப் போற்றித் துதித்தினி தரசாண்டிருந்தான்.

---

51-வது

## சங்கப்பலகைகொடுத்த திருவிளையாடல்

வங்கியசேகர பாண்டிய னரசாட்சி செய்துகொண்டு வருங் காலத்தில், முன்னொருநாட் பிரமனானவன் காசியிற் பத்துப் பரி மகஞ்செய்து கங்கையாடுதற்கு, நாமகள், சாவித்திரி, காயத்திரி யென்னு மடவாரோடு செல்லுகையில், வழியிலோர் விச்சாதரமாது கானம்பண்ணுவது கேட்டுக்கொண்டு நிற்கையில், பிரமனில்லாதுசென்று, கங்கைக்கரையை யடைந்து, வாணியையீநோக்கிக்



கானுமையான் மற்றிரு மடவாரோடும் நீராடிக் கரையேறினன். பின்வந்த வாணி தன்னைவிட்டு நீராடினதற்கு, நாயகன்மேற் சினக்க; திசைமுகன் குற்றமின்னதாக வென்மேற் சினக்கின்றாயிக் குற்றத்திற்கு நீ நாற்பத்தெட்டு மானிடயாக்கை பெற்றுப் பின்னம்மை யடைவென; பின் றன்குற்றமுணர்ந்த வாணி, வேண்டிக்கொள்ள; உன்னுருவாகிய அக்கரமுதலாகிய 48 அக்கரமும் 48 புலவர்களாகும். அப்போழ்து சோமசுந்தரர் 49-ம் புலவராய்த் தோன்றி வந்து கூடவிருப்பர்; பின் னும்வந்து நம் விமோசன மெய்துவமென்றார். அப்பொழுது இறைவர், முற்சங்கங்கடோன்றியதுபோலத் தாமுமொருபுலவராய்த் தோன்றி, யவர்கள் குறைகளை நீக்கிச் சிக்கறுத்து, தமிழ்நூல் தந்தார். பின்னர் பலதேயத்திருந்தும் புலவர்தோன்றி, பலவிதமாக வாதஞ்செய்வதைக்கண்டவர்கள் புலமையை யளவறுக்கவும், சங்கத்தார் வீற்றிருக்கவும், புலவர்கள் வீருத்தம் போக்கவும், அவர்கள் முறைகேட்டொருபலகை யீந்தருளினர். பின்பவர் பண்புடை மதுரைநாயகனைப் போற்றி வந்தார்கள்.

52-வது

## வங்கியசூடாமணி சண்பகபாண்டியன் ஆண்டகாலம்.

### தேவவருடம் 20 000 (இருபதினாயிரம்)

### இவர்காலத்துத் திருவிளையாடல்கள் 4.

## தருமிக்குப் பொற்கிழி யளித்த திருவிளையாடல்.

ஒருநாட் பாண்டியன் றன் னின்புறு தையலோடினிது மேவியிருக்கையிற் றன் னாயகி கூந்தலினின்று, நறுமணங்கமழ; இதனினும் வாசனைவீசு நறும்பூவுமுளதோவென வையுற்று, மனக்கோரை யாப்பில்வைத் திசைப்போர்க் கிது தருவமெனா, ஆயிரம் பொன்னுள வொரு கிழியைச் சங்கமண்டபத்திற் றூக்கிவைத்தான். சங்கப்புலவர் முயன்றுஞ் சித்திபெறாராயினர். இஃதுணர்ந்த 'தருமி' என்னும் பிரமச்சாரி, ஆலவாய்ப் பெருமானார் திருக்கோயிற் றிருப்பணிகொண் டொழுகுவோ னந்தரத்தமரருங்காண சுந்தரன் பாதம்போற்றிக் குறையிரந்துவேண்ட, அவர்

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவைகூந்தலின்
நறியவுமுளவோ நீயறியும்பூவே"

என்னும் பாசுரமருளினர். அதனை யெடுத்துச்சென்று பாண் டியனிடங்காட்ட, அவனுமவ்வாறு சரி சங்கப்புலவரிடங் காட்டென; அங்ஙனங் காட்டக்கண் டவர்களு மிது விழுமிதமாயிருத்தல் பற் றி, வியந்தொப்பினர். பின்னவ் வேதியன், பொற்கிழி யறுக்கப் போகையிற் பொறாமையால், நக்கீரன் செய்யுட் பொருட்குற்ற முடைத்தெனப் புகன்றான். உடனே பிராமணன், அழுதிட முறை யிட; சொக்கரோ புலவுருக்கொடு வந்து கேட்க. மயிரிற்குச் செ யற்கையேயொழிய, இயற்கையான் மணமில்லென. தேவமாதர்க் கோ? வென. அதுவுமப்படியே யென்றான். நீ வணங்குங் கற்பகப் பூங்குழலியார்க்கோ? என்றார். அஃது மவ்வண்ணமே யென்றான். உடனே விரிசடைச் சுந்தரர், நெற்றிக்கண்காட்ட. கீரன் நீர் மேனி யெல்லாங் கண்காட்டினும், பாட்டுக்குற்றமே யென்றான். அப்பொ ழுது தீவெதுப்ப வாற்றானாய் மயிலில்விழுந்தான்.

---

53-வது

## நக்கீரனைக் கரையேற்றின திருவிளையாடல்.

கீரன் முக்கட் செக்கர்மேனிய னுதல்விழி திறக்க, வெம்மை யாற்றப் பொற்றாமரைத் தடத்து வீழ்ந்திருக்க. புலவர்கள் நக்கீர னில்லாமற் பொலிவிழந்தனர், அம்மையொருபாகனிடத் தறிவித்து வேண்ட; அம்மையப்பர் தன் வாமபாகக் கொடியொடும் பொற்றா மரைக்கரையை, நக்கீரன் பிழைபொறுத் தருளும்படி [illegible] [illegible] அருள்சுரந்து காமமுற்றி, [illegible] [illegible] கரை யேற்றினார். உடனே கீரன் [illegible] [illegible] பனுவலால், அம்மையையும், அப்பனையும் துதித்தான்.



54-வது

## நக்கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த திருவிளையாடல்.

நக்கீரன் முப்பொழுதும் பொற்றாமரைக் குளத்தினாடி ஆலா லசுந்தரப்பெருமானை முக்காலமும் அர்ச்சித்துப் பூசித்துவந்தான். அவனன்பிற்குருகி யங்கயற்கண்ணம்மையோடவர் தருள்செய்து பின் னவற் கிலக்கண முபதேசிக்க விரும்பி, என்செய்வதென் றம்மை யாரைக்கேட்க; பண்டிவ்வுலகத் தென்னாட்டைச் சமப்படுத்தவிட் டிருந்தின் குறுங்காற் றமிழ்நாடனென்ற வகத்தியற் குலகத்தோ டொன்றவுதித்துத் தென்பால் வழங்கிவருந் தென்றமிழை யுப தேசித்தருளினீர், அவ்வகத்தியரைக்கொண் டிப்போது கற்பிக் கலாமெனை; அஃதே நலமெனக்கொண் டவரையழைத்து, கீரனுக் கிலக்கணம் போதிக்கச் செய்தார். அவரு மவ்வாறே போதித்துக் கீரனுக்கு, ஞானமுண்டாக்கினார். அவன் முனிவர்பாற் கற்றுத்தே ர்ந்து, தான்செய்தபிழையை நினைத்துவருந்தி முனிவர்பாற் கேட் டபடியே நூல்கள் வகுக்கவாரம்பித்தான்.

---

55-வது

## சங்கத்தார் கலகந்தீர்த்த திருவிளையாடல்.

நாற்பத்தெண்மராய வரும் புலவர்களுந் தந்தஞ் சத்திக்கேற் றவாறு பலவாறு நூல்செய்து, தம்மைத்தாமே வியந்து, தாமே சரி, தாமேசரி யென்றுதருக்கி நின்றார்கள். இச்சிக்கறுக்கப் புலவ ர்கள்சென்று, ஆதிலிங்கமாகிய அறுமுகன்றந்தையை, அகத்தியற் கிங் கன்றமிழுணர்த்திய மங்கைபாகனை, வணங்கி யெம்மவர் பனுவ லின் விழுமிதுந் தாழ்வுஞ் சீர்தூக்கிப் புகன்றருளுமென. சிவபெரு மான் சோதிலிங்கத்தினின்றுந் தோன்றி, நீவிர் தனபதியென்னும் வணிகற்கும், அவன்மனைவி குணசாலியென்பவட்கும், அவர் தவப் பேற்றாற் றெய்வத்தன்மையுள்ள குமாரக்கடவுளை, ஒருவூமைப்

பிள்ளையாகப் பிறந்துளான்; அவன்பாலெய்தி நம் நூலையோதுமின், அவனுலந்தனுளி என்றிது, இது நின்னை காட்டுமென்றார். அவர்களுமைமையன் றருளியசெய்யுளைம் விளக்குமெனத் தாழ்ந்து வேண்ட, அவர் நம் நூனயத்திற்குத்தக்க மெய்ப்பாட்டால் விளக்குமென்றார். அவர்களுமவ்வாறே யச்சேயைக்கொணர்ந்து, பீடத்தேற்றி, மலர்கொடு பூசித்துத் தந்தம் நூலைச் சொல்ல, சிலருக்குத் தலையசைத்தனர். சிலர்க்குமுகமலர்ந்தனர். சிலர்க்கு ஆனந்தக்கண்ணீர் விட்டனர். சிலரைவெறுத்தனர். சிலரை யிகழ்ந்தனர். கீரன், கபிலர், பாணர்முதலியவர்கள் நூல்கேட்டுப் போனைத்துங்கொண்டு பல்லாயிரந்தரந் சிரமசைத்து வெள்ளவெள்ளமாக, ஆனந்தக்கண்ணீர்வடித்தனர். பின்னர் புலவரே தங்கள் தராதரமறிந் தடங்கியிருந்தனர்.

| | தேவ வருடம். |
|---|---|
| பிரதாபசூரியபாண்டியன் | 15000 |
| வங்கிஷத்துவசன் | 13000 |
| [illegible]பாண்டியன் | 12000 |
| சோமவங்கிஷபாண்டியன் | 10000 |
| சேரவங்கிஷபாண்டியன் | 8500 |
| பாண்டிய வங்கிஷன் | 3900 |
| வங்கியசிகாமணி | 8700 |
| பாண்டீச்சுரன் | 6800 |
| குலத்துவசபாண்டியன் | 7800 |
| வங்கியபூஷணபாண்டியன் | 4300 |
| சோமசூடாமணி | 5200 |
| குலசூடாமணி | 3200 |
| இராசசூடாமணி | 4500 |
| [illegible]சூடாமணி | 3600 |



56-வது

## குலேசபாண்டியன் ஆண்டகாலம்.

தேவ வருடம் 6200 (ஆறாயிரத்திருநூறு) க்கு

திருவிளையாடல்கள் 2.

## * இடைக்காடன் பிணக்குத்தீர்த்த திருவிளையாடல்.

குலேசபாண்டியன் முத்தமிழ்க் கடலுமுண்ட முழுநூணர்வுடையவனு யரசுசெய்திருக்கும் போழ்து, கபிலரினேயராகிய இடைக்காடர் வந்து, தாஞ்செய்துள பிரபந்தத்தை வாசிக்கச் செருக்கினுற் சிறிதும் மதியாதிருக்கும் போழ்து, கபிலர் மிகவருத்தமுற்று, சிவபெருமான்கோவிலெய்தி முறையிட்டு நகர்விட்டேகவே, சிவபெருமான், மரகதவல்லியுடன் வடக்கே வைகைக்குத் தென்பாலிருந்தார். விடிந்து கோயிற் சுந்தரரையும், மீனாட்சியையுங் காணுது, வடக்கே சென்றிருத்தல் கேட்டு அவ்விடஞ்சென்று பணிந்து வேண்ட, பின்னர் சோமசுந்தரரையும், அம்பிகையையுங் கோயிலிலிருத்திக் கபிலர் இடைக்காடரையும், மன்னிக்கவேண்டிப் பரிசளித்தும் புகழ்ந்துபோற்றி யாதரித்தான்.

57-வது

## வலைவீசிய திருவிளையாடல்.

சிவபெருமானம்மையாருக்கு வேதப்பொருளுரைக்க; அதனைச் சிறிதசட்டையாகக் கேட்டதினுற் கோபங்கொண்டு, வலையர்மகளாய்ப் பிறக்கவெனச் சபித்தார். இஃதறிந்த விநாயகர், சாத்திரங்களனைத்தையுங் கடலிலெறிந்தார். அவரைச் 'சுறு' வாகவிருந்து புத்தகங்களைக் காக்கவென்றார். சுப்பிரமணிய சிடையேதோ

* இடைக்காடன் பிணக்குத்தீர்த்த திருவிளையாடலில், இடைக்காடனுக் கரசன் சன்மானஞ்செய்யாதிருந்தபோது, சுவாமி கோபித்துக்கொண்டுபோய் வைகைக்குத் தெற்கேயிருந்த இடம், இப்போது மதுரை வெளிவீதியில் பழையசொக்கநாதன்கோயிலென வழங்கிவருகிறது.

ன்றி முறைகெட மொழிந்தமையால், ஊமைச்செட்டியாகென மொழிந்தார். அம்மை நின்னைப்பிரிந்து மூப்பேனேனென வாட்டமுற்றகாலையில்; யாமவந்து மணப்பமெனத் திருவாய்மலர்ந்தருளினார். அவ்வாறே யம்மையானவள், வலையன்மகளாய்ப் பிறந்திருந்தாள். விநாயகர் சுறவாய்ப்பிறந்தார். சோமசுந்தரர் செம்படவனாத்தோன்றி, வலையர்கள் வேண்டுகோளின்படி விநாயகராகிய சுறவைப்பிடித்து வேதங்களைப்பெற்றுக்கொண்டு, லோகமாதாவாகிய அம்பிகையை மணந்து விண்ணின்மறைந்தருளினார். கண்டவர்கள் கனவோ நனவோவெனக் கொண்டாடிச் சோமசுந்தரனைப் பூசித்துப்போற்றினார்கள்.

---

58-வது

## அரிமர்த்தனபாண்டியன் ஆண்டகாலம்.

தேவவருடம் 4250 (நாலாயிரத்திருநூற்றைம்பது) க்கு

திருவிளையாடல்கள் 4.

# திருவாதவூரடிகளுக் குபதேசித்த திருவிளையாடல்.

வேண்டருஞ் சிறப்புடை யரிமர்த்தனபாண்டிய னரசாட்சி நீதிகோடாதியற்றி வருநாட்களில், அவற்குத் திருவாதவூரி லவதரித்த அமாத்தியர்குலத்துத் தோன்றலாகிய ஞானவள்ளல் "வாதவூரார்" என்னு மியற்பெயருடைய பெரியர் மந்திரியாயிருந்தார். பாண்டியன் பரிகளைத்து போயுற்ற மான்பொழிந்தினாலே, வேறுகுதிரைகள்வாங்க, அரசசேகரன் மந்திரியாராகிய வாதவூராரிடம் பொன் பலகோடிகொடுத்துத் துரகங்கொண் டணைதியென விடுத்தான். இவர் விடைபெற்றுச்சென்று, வழியிற் றிருப்பெருந்துறையிற் சிவபெருமா னாசிரியவடிவங் கொண்டுவர. அவரா லுபதேசம்பெற் றவ ருத்தரவின்படிப் பொன்னெலா மடியார்களுக்களித்து, பேசாபெருமையனை மெய்யுணர்ந்ற்றினை மணங்கசிந்துபாடிக்கொண்டிருந்தார். அரசன்மாக்கள் வரமைகண்டு, செய்திகளெல்லாங்கேட்டுத் திருமுகம்விடுக்க. மதிமுடி யண்ணலார்சொற்படி யானாட்சென்றபின்னர், கலிமாக்காணலாகுமெனப் பதில்விடுத்துத்



தானுஞ்சென்று, பாண்டியற்கண்டு, ஒருதினத்திற் குயர்பரிகளெய்துமெனப் புகன்று, அந்தரர் தாள்கள்போற்றித் தொலுவினையறுத்தமேலோன் சிந்தனையற்று நின்றான். பரிதனைக் குறித்தநாளிற் காணாது பாண்டியன் மிகச்சினந்து, திருவாதவூரரை யென்னெனக்கேட்டு.வம்மிவனை யழையாரை விட்டான். அவரும்வந்துகேட்கப்பொழுதிருந் தின்னுமென்று முன்னும் மொழியே மொழிந்தார்.

---

59-வது

# நரியைப் பரியாக்கின திருவிளையாடல்.

அவ்வாறு சின்னாள் பொறும் பொறுமென்றே யென்றுங் கூறுதலைப் பாண்டியன்கேட்டுச் சினந்து, தன்சேவகாரைத்தூண்டியக்கள்வனைக் கல்லெறிந்து துன்புறுத்தியின், சிறைசெய்மினென்ன. அவர்களுமோடிக் கல்லா லெறிந்தார்கள். மணமுருக்கு மணிவாசகப்பெரியோனு மடியார் துன்பகற்று மாலாலசுந்தரன் பாதத்தையே பற்றிநின்றான். அன்பர்க் கெத்துயருந் தோன்றுதிருக்கத்தன்மே லேற்றுக் காத்தருளினார். இம்மட்டோ கொடியர்கள் தூயரைச் சிறையிடைச் செறித்தனர். அங்கே புகுத்தப்பட்ட திருச்சிற்றம்பலமுடையார்க் கடியார்

கலிநிலைத்துறை.

சீரார் சிவனே செல்வா சிறியேன் றுயர்தீராய்
மேரார் சிலையாய் பின்னே ரிடையா ளமைகூறாய்
பாரா ரடியார் பற்றே பயனே பரிவுள்ளாய்
காரார் களனே காண்பாய் கருணை புரிவாயே.

எனப் பலவா றெம்பெருமானைத் துதித்தார். எங்குமுள்ளானும், எல்லாமுணர்வானும், எல்லாம் வல்லானுமாய வெம் பிரானெருண்டனின் றுயர்கண்டு தங் கணநாதர்களைக்கூவி விடயத்தைத் தெரிவித்து, நரிகளைப் பரியாக்கி, அவர்களை யாளாக்கித் தானுந் தலைவனாய்ப் பாண்டியன்முன் றோன்றி, குதிரைகளைச் சேர்ப்பித்தனர். பாண்டியனுனந்தங்கொண்டு, வாகிசரை விடுவித்துச் சிறப்பு

கள்செய்து தங் கோயில்புக் கினிதிருந்தான். சோமசுந்தரமூர்த்தியோ தன்றொண்டன் றுயர்தீர்த்துக் களிப்புடன் றழியிற் றழீஇ யம்மையாருக் கறிவித்திருந்தார்.

---

60-வது

## நரிபரியாகிய திருவிளையாடல்.

இரவினிலர்த்த சாமத்திற் பரிகளாயிருந்தவை பழையபடி நரிகளாகி, ஒன்றுகூடி யூளையிட்டுப் பல்லுயிர்களைச் சிதைத்து, நகரெங்குந் திரிதலைக்கேட்டுங் கண்டும் மனத்துயருற்று, வாதவூரன் செய்த தீச்சதியென வவனை நிந்தித்து, காவலரை யழைத்துச் சிறைசெய்தவன்பாற் பொருள் வாங்குமி னெனச் சொன்னான். காவலருங் கோமகன்பணியைச் சிரமேற்கொண்டு, வாதவூரரைப் பிடித்துத் துன்புறுத்திச் சிறையிட்டார்.

---

61-வது

## பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடல்.

தொண்டரை வாதவூரரைச் சிறைப்படுத்தியதை யுணர்ந்து, கலியாணசுந்தரர், வைகையில் வெள்ள மிருந்துவர வெண்ணினார். அம்மாத்திரையின் மதுரையே நீரிற்படுமையமெனும்படி, கரைகளை யுடைத்துக்கொண்டு வருதல் கண்டு, வழுதி தன்னமைச்சரை யேவி யடிகோலி, நகரத்தவரைக் கொண்டு வைகைப் பெருக்கை யணையிடும்படி யேற்பாடுசெய்யச் சொல்லினன். அவ்வாறு செய்தபோழ்து 'வந்தி' யென்னும் பிறைபோற்கூனி நறைத்த பிட்டுவாணிச்சிக்குக் கூலியாளகப்படாது வருந்தியபோது, ஆபத்பாந்தவராகிய மீனாட்சிசுந்தரர், கூலியாளாகத் தோன்றிப் பிட்டுண்டு தன் வேலையைக் கவனியாதிருந்தமையாற் பாண்டியன் கையாற் பிரம்படிபட்டுப் பட்டவுடு, அரியயன்முதற் றேவர்கள், மனிதர்கள், முனிவர்கள், மற்றைச்சீவகோடிகள், தாவரசங்கமங்க ளெல்லாவற்



றினு மவ்வடியும், வடுவும்படச்செய்து தானேயெல்லாமென்பதையும், சருவமுந் தன்னுள் ளைக்கியமென்பதையும் விளக்கி, தெவ்வந்திக்குத் தெய்விகவிமானத்தைப் புவியிற் கொணர்வித் ததன் வாயிலாய், கைலையிற் றன்கணத்தேற்றி யின்பளித்து முறைபடவாதவூரர் பெருமையையும், பணத்தைத் தானே சிவனடியார்களுக்குச் செலவிடச் சொன்னமையும், நரிகளைப் பரிகளாக்கினமையும் பின் நடுநிசியிற் பரிகள் நரிகளாகிய வற்றையும், பின்னும் வாதவூரரைச் சிறையிட்டமையால் வைகையிற் பெருக்குண்டாக்கியதையும், வந்திக்குக் கூலியாளாகவந்தமையும், பின்வந்திக்கு முத்தியளித்த திருகச்சொல்லி மறைந்தருளினார். பின்பாண்டியன் திரிபுரசுந்தரர் திருவருளைச் சிந்தித் தானந்தக்கண்ணீர்வரத் துதித்துத் திருவாதவூரரை வணங்கிப் போற்றி, வரிசைகளியற்றி, அவர்க்கு வேண்டியவளித்துத் தன் பிழைகளனைத்தையும் பொறுத்தருள வேண்டினன். அவரும் பொறுத்தருளித் தில்லைமுதலிய தலங்கள் சென்று, திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவை முதலியன சிவபெருமானுருவக்க வியற்றி யவரான் மணிவாசகரென்னும் பெயரணியப்பெற்று, வாதுக்குவந்த புத்தரைவென் றூமைப்பெண்ணைப் பேசுவித்து, தில்லைப்பேரொளியிற் கலந்தருளினார். அரிமர்த்தன பாண்டியன் பின் சகநாதபாண்டியனை யீன் றவற்கு முடிசூட்டித் திருவாதவூரரிடம்பெற்ற ஞானோபதேசத்தாற் பெருஞ்சோதியி லொன்றுபட்டார்.

---

சகநாதபாண்டியன் ஆண்டகாலம்
தேவவருடம் 9000 (ஒன்பதினாயிரம்)
இவர்காலத்துத் திருவிளையாடல்களில்லை

வீரவாகு பாண்டியன் ஆண்டகாலம்
தேவவருடம் 7350 (எழாயிரத்துமுன்னூற்றைம்பது)
இவர்காலத்துத் திருவிளையாடல்களில்லை.

விக்கிரமபாகுபாண்டியன் ஆண்டகாலம்
தேவவருடம் 5820 (ஐயாயிரத்தெண்ணூற்றிருபது)
இவர்காலத்துத் திருவிளையாடல்களில்லை.

---

62-வது

கூன்பாண்டியன் ஆண்டகாலம்

தேவவருடம் 6890 (ஆறுயிரத்தெண்ணூற்றுத்தொண்ணூறு)க்கு

திருவிளையாடல்கள் 3.

## பாண்டியன்சுரந்தீர்த்த

## திருவிளையாடல்.

கூடல் மாநகர்க் கூன் பாண்டியன் குறையுறுவண்ணம் அரசாட்சிசெய்து கொண்டு வருகையிற், சமணர் மிகுந் தரசனையுஞ் சமணராக்கினர்; அஃதறிந்து குலச்சிறை நாயனாரும், மங்கையர்க்கரசியாருங் காழிப் பிள்ளையாரென்னுங் கௌணியர் குலத்துதித்த "ஞானசம்பந்தரை" வருவிக்க வெண்ணித் திருமுகம் விடுத்தனர். அதுகண் டவரும்வந்து சைவசமயத்தைப் பிரசங்கித்து வந்தார்; சமணர் கண்டுமுட்டு கேட்டுமுட்டென்று சிலர் நைந்தும், உயிர்துறந்தும், இடம்விட் டோடியும் போயினர். பின், சமணரின்றோ டழிக்கவென வருந்திப் பாண்டியனிடம் முறையிட் டவர் தங்கியிருந்த மடத்திலுந் தீயிட்டார்; பிள்ளையா ரதனைப் பாண்டியன் மேற் செல்கவென விடுக்க; அது பாண்டியனைப் பற்ற. சமணமுனிவர்களால், அந்நோய் தீர்க்கமுடியாது பின், சம்பந்தப்பிள்ளையாரே யவ்வெப்புநோயைத் தீர்த்துச் சைவமே யுண்மையென்பதை நாட்டினார். இன்னும் விபூதியால், வெப்புநோய் தீர்க்க தன்றிக் கூனு நிமிரும்படிச் செய்தார். கூன் பாண்டியனுக்குச் 'சுந்தர மாறன்' என்னும் பேருந்தந்தார். பின்னெல்லாரு மகிழ்ந்துகொண்டாடினர். ஞானப்பிள்ளையாருஞ் சுந்தரேசனை வணங்கித் தன்னிடஞ் சேர்ந்திருந்தார்.

63-வது

## *சமணரைக்கழுவேற்றிய

## திருவிளையாடல்.

மற்றைநாள் எண்ணாயிரஞ் சமணரும், மகாமுனி [illegible] திலே வெல்ல வேண்டுமென வெண்ணி யாக சாலையிற் றருவித்து [illegible] பின் மந்திர வலியால் வெல்லத் தொடங்கி, மந்திரமோட்டை நெருப்பிடைப் பெய்தார், வைகையிடையிட்டும், தம்மேடு [illegible]றுகிறும், சிராற் றேமுக

மடித்துக்கொண்டும் போகப்பட்டுக் காழி ஞானசம்பந்தப்பிள்ளையாரேடே நெருப்பிடை வெந்து கரியாது விளங்குறு தளிர்போல நின்றமையாலும், வைகையை யெதிர்த்துக் காததூரத்திற்கப்பால் "திருவேடகம்" எனப் பின் பேர்வந்த தலத்திற் சிவபெருமானுமேலேயே கொண்டுவந்து தப்பெற்றமையாலும், ஞானசம்பந்தர் வாதில் வென்றாராய்த் தீயராதிய வமணரைக் கழுவேற்றிக், கன்னிநாடரு மேனைநாடரும் போற்றத் தேவாதிதேவனுஞ் சோதிமயலிங்கமே கடவுளெனத் தாபித்தெங்குஞ் சைவவொளிபரப்பித் தம்பதிக்கு மீண்டார்.

---

64-வது

# வன்னியுங், கிணறும், இலிங்கமும்

## அழைத்த திருவிளையாடல்.

மதுரையா நகருக்குச் சேய்மைக் கண்ணுள்ள வொருவாணிகச்செட்டி, இல்லறநடாத்தி வருகையிற், புத்திரப் பேறின்மையாற் சிவபெருமானை வழிபடத் திருவருளா லாண்மகவின்றிப் பெண்மகவாய்ப்பிறக்க. அதுவுஞ் சிவனருளெனவே துணிந்து போற்றிப் பொற்புற வளர்த்து, மதுரையிலுள்ள தன் மருமகனுக் களிப்பதாக வுறுதிசெய்து வருநாளின், மூப்பினாற் றிருவருட் பிரகாசப் பெருநிழலிற் கலந்தான். அவன் மனைவியும் நிழலென விடாது பற்றியும்பர் போற்றக் கணவனை யடைந்தாள். இனத்தவர் வேண்டுவனசெய்து மருமகனுக் கோலை விடுத்தனர்; மருமகனும் அயருற் றொருவாறு தேறிவந்து, நாட்டார் சொற்படி செல்வமெல்லாந் தனதாகத் திருவனைய தையலை நன் மதுரையில் மணமாற்றுவனென் றவளோடு புறப்பட்டு மதுரைநோக்கி வருகையி லணங்கனையார் நடக்க லாற்றாமையாற் றம்மவ ரனைவரையும் பொருளோடு முன்னேகவிடுத்துத் தானுந் தையலுமாய்ப் பின்றொடர்ந்து வழிக்கொள்கையி லிடையே யொருகோயிலும், கிணறும், வன்னிமரமுமிருக்கக் கண்டங்கு சமைத்துச் சாப்பிட்டுவிட்டுக் கோயிலிற் படுத்துறங்குகையி லொரு விடவரவந் தீண்ட, வணிக னிறந்தான். மடக்கொடியும் வணிகனைத் தீண்டா தழுது பிரலாபித்துக் கூடவுயிர்விடத் துணிந்து நிற்கையி லவ்வழியே யடியார்சூழ ஞானசம்பந்தர் வந்து கொண்டிருந்தவர் அழுகையின் காரணத்தை விசாரித்தறிந்து, சிவபெருமான் றிருவருளால் பதிகம்பாடி யுயிர்ப்பித்தங்கேயே வன்னியுங் கிணறுஞ் சிவலிங்கமுஞ் சான்றாக மணந்துகொள்ளச்செய்து, விடைகொடுத் தனுப்பினர். காழியர் கோன் றிருமொழிப்படி மணந்து தம்மூராகிய வரிலவாய்ப் பெரும்பதி யடைந்தனர். பின்னொரு வாண்மகவைப் பெற்று, பிறைபோல வளர்த்துவருநாளில், மூத்தாள் மக்கள் பொறாமையாலடிக்க வழுது வந்த பிள்ளையை யாற்றியவிளையாள், மூத்தாள் பிள்ளையைச் சினந்தாள். மூத்தாள், சில கூறத்தகாத புன்சொற் கூறி நீ நெறிப்பட மணந்தவளன்றே தொடர்ந்த மாது தானே யென, மனமாற்றாளாகிச் சான்றாய்நின்ற வன்னி, கிணறு, லிங்க மிம்மூன்றையுங் ‡கரியழைத்துத் தன் மேன்மையை விளக்கினாள். பின்னெல்லாரு மவள் கற்புக்கும், பெருமைக்குங் கொண்டாடினார்கள். கணவனிஃதறிந்து மூத்தாளைக் கோபித் திளையாளிடம் பேரன்பு காட்டிவந்தான். நாட்டாரெல்லாஞ் சோமசுந்தரி னருள்விளையாட் டிஃதுமொன்றேயெனக் கொண்டாடினார்கள்.

---

* சமணரைக் கழுவேற்றிய திருவிளையாடலில், திருஞானசம்பந்தரும் சமணர்களும் செய்துகொண்டசபதத்தில், சமணர்க ளக்கினியிற்போட்ட ஏடுகள் சாம்பராய்க்கரிந்துபோனவிடம், மதுரைக்குக்கிழக்கே 2-வது மயிலில் சாம்பல்நத்தம் என்னுங்கிராமம் சாமநத்தம் எனவும்.

சம்பந்தசுவாமிகளால் வைகையாற்றி லிடப்பட்ட ஏடுகளெதிர்த்தூர் சென்றுதங்கியவிடம், மதுரைக்குமேற்கே 10-வது மயிலில் திருவேடகம் எனவும்.

பின்னர் சபதத்திற்றோற்ற எண்ணாயிரஞ்சமணர்களைக் கழுவேற்றுவதற்காகக் கீழ்மேலாயூன்றப்பட்ட 8000 கழுமுனைகளிற் கீழ்ப்பக்கத்துக்கழுமுனை நட்டியவிடம், மதுரைக்குக் கிழக்கே 12-வது மயிலில் கழுவேறுபடையென்னும் ஊர் கழுவேறுமடை யெனவும்.

மேல்பக்கத்துக் கழுமுனை நட்டியவிடம் மதுரைக்கு மேற்கே 8-வது மயிலில் மேலக்காலெனவும் இப்போது வழங்கிக்கொண்டு வருகிறது.

‡ கரி - சாட்சி.

## வேறுகுறிப்புகள்.

பின் வங்கிய சேகரபாண்டியன் முதற் கூன் பாண்டியன் வரையுள்ள 30 பாண்டியர்களுக் காளுகை தேவவருஷம் 233500. ஆனாது காடாயிருந்த வருஷம் 97300.

கூன் பாண்டியன் முயாதிக் காரர்களும், அவர்கள் பிள்ளைகளும், சந்திரசேகரபாண்டிய னாதி சித்திராங்கத பாண்டிய னீராகப் பலர் சிலராண்டும் ஆனாதுங் கழிந்த தேவவருஷம் 4000.

ஆகமொத்தம் தேவவருஷம் 334800.
மூன்றுலட்சத்து முப்பத்துநாலாயிரத் தெண்ணூறு தேவவருஷம்.

---

இதுவரை சதுர்யுகம் 27-ம் அதாவது தேவவருஷம் 324000 ம்போக இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் பதினாயிரத்தெண்ணூறு மெஞ்சி நின்றது. இப்பொழுது 7-வது மனுவின் காலம் இருபத்தெட்டாஞ் சதுர்யுகம், துவாபரயுகமாயின, இனி கலிபிறக்க வேண்டியது.

சென்ற துவாபரயுகத்திற்றான், பாரதமுதலியன நடந்தன. மகாவிஷ்ணுவின் பலராம அவதாரமும், கிருட்டிணாவதாரமு நடந்தன. இவைகள் துவாபரயுகத்தின் கடைசியினடந்தன. இன்னும் துவாபரயுகத்தி னாரம்பத்திலேதான் நளன் சனீச்சுர சோதனையி லகப்பட்டகாலம். பாரிசாதன் முதலியவர்கள் காலமு மதோடே தொடர்ந்தே வந்தன.

இன்னும் 6-வது மனுவின்காலம் 71 சதுர்யுகத்தில் முப்பத்தைந்தாஞ்சதுர்யுகம். கிரேதாயுகத்திலிருந்து 7-வது மனுவின் காலம் 71 சதுர்யுகத்தில் 28-வது சதுர்யுகம். துவாபரயுகமுடிய ஆண்ட பாண்டியவரசர்கள், குலசேகரபாண்டியன் முதல் சித்திராங்கத பாண்டிய னீராக எண்பத்துமூன்று பாண்டியர்கள் காலத்துநடந்த திருவிளையாடல்கள், அறுபத்திரண்டு. 4-வது 5-வது மனுவின் காலங்களினடந்த திருவிளையாடல்கள் இரண்டுஞ்சேர 64 திருவிளையாடல்களாயின.

---



இப்பொழுது இவ்வுலகம் படைத்த பிரமாவின் 51-ம் வயது (ஐம்பத்தொன்றும்) முதனாட்பகல் இரண்டாஞ்சாமம் ஆறாம்நாழிகையாகிய 7-வது மனுவாகிய வைவசுத மனுவுக்கு 28-ஞ் சதுர்யுகமான பிரமாதிவருடம் சித்திரைமாதம் முதலாந்தேதி மூலநட்சத்திரம் நவமி வெள்ளிவாரத்து கலியுகம்பிறந்தன.

இந்தக்கலியுகத்தில் விஷ்ணு கலிக்காவதாரமாய்ப் பாதாளவுலகத்திருக்கிறார். பாண்டவர்கள் பரிச்சித்துக்கு முடிசூட்டி வைகுந்தம்புறப்பட்டு விட்டனர்.

இன்னும் 83 பாண்டியர்கள் காலத்து சூர்த்திராயனுருக்குப் பட்டங் கொடுத்தல், சொற்கையான் பொற்கைக்கு நற்கையிந்த திருவிளையாடல், காரியார்பாரியார் பாபகுத்தல், புல்வாய்க்குப் புலிமுலையருத்திய திருவிளையாடல்க ணடந்ததாகவும், பெரியோர்கள் கூறுகின்றார்கள். அவைகள் வருமாறு:—

---

65-வது

## புல்வாய்க்குப் புலிமுலையருளிய திருவிளையாடல்.

கடம்பவனத்தே நகர்க் காண்டதன் முன் புலிகள் மிக விருக்கையி லொருபுதரி லொருமான் கன்றையீன்று வளர்த்துவருநாளிற் றண்ணீர் வேட்கையாற் குளங்களை தேடிச் செல்கையில், வேடன் பாணந்தைக்க விறந்தது. எல்லார்க்குந் தாயாகிய தயாபரன் றண்ணருள்சுரந்து, ஒரு புலியைத் தாயிழந்த புல்வாய்க் குட்டிக்குப் பாலருத்தகவென் றருளினர். அஃது மவ்வாறே யருத்தி வளர்த்து வந்தது. அவ்வாறு சுந்தரனைக் கோயிலொடுங்கண்ட தனஞ்செய னிதனையுங் கண்டதுபோதும் பற்பல வதிசயத்தையுங் கண்டு தென்னனிடஞ்செப்ப; மீனக்கொடி வேந்தனும் வந்து கண்டிவ் விசேடதலத்தே குடிபுகல் வேண்டுமென மணவூரிலிருந்தாங் கன்னிராஜதானியாய் மதுரைப்பதி யுண்டாக்கி யவ்விடமாற்றிக்கொண்டான்.

66-வது

# பொற்கைக்குப் பதிற்கையிந்த திருவிளையாடல்.

குலசேகர பாண்டிய னீதிகோடா தரசியற்றி வருநாட்களி
லோர்நா ளரசன் றன்னீதி, யெவ்வாறு செல்கின்ற தென்பதைக்
கண்ணுறுவான் விரும்பி, மாறுவேடங்கொண்டு நகர்சோதனைசெய்
து வருமளவிற், பிராமணர் வசிக்குந் தெருவழியாய் வந்துகொண்
டிருக்கையில், ஓரில்லின்க ணிரங்கிய சொல் வாக்கேட் டிதென்
னெனச் செவிகொடுத்தான். அஃது காசியாத்திரை செல்ல விரு
ம்பித் தன் னேயரோடும் புறப்படும் வேதியன் விளம்பிய சொற்
கவ னில்லக்கிழத்தி கூறிய கூற்றாகிய "என்னை யிவணிருந்திச் செ
ல்லுத லெனன்று, விடமர்களாகிய பிரமச்சாரிக ளிருக்கிறார்கள்.
என்னை யென்மாதாவகத்திடுமின்" என்றசொற்களும், அதற்கவன்
"அஞ்சற்க வரசனுனை காக்குமென்ற சொல்லுமே" செவிப்பட்
பட்டன. இதனைக்கேட்டதென்னன், அவ்வகத்தை யந்தணன்
முற்கூறியபடிக் கூறித் தழுவிய நண்பரோடு காசிசென்றமையாற்
காவல் காத்துவந்தான்.

ஒருநாளிரவிற் சில பிரமச்சாரிகள். அவளிருந்த மனையுட்புக்
குத் துன்புறுத்தத் துணிந்தகாலத்து, சோமசுந்தர ரருளாலரசன்
கண்டு வாளாலவரைக்கொன்று, வெளியே யெழுத்தெறிந்து போயி
னன். மற்றுந் தினந்தினங் காவல் காத்துக்கொண்டு வருகையில்,
ஒருநா ளம்மனையில் வேறொருவன் குரல்கேட் டேதோவென
வறியக் கதவைத் தட்டினார். அப்போழ்து காசியாத்திரையினின்
று மீண் டவ் வில்லிற்குரிய னுதலால் யாரெனக் கூவினவிறான்.
பாண்டிய னிவ் வீட்டிற்குரியனேயென்று தெளிந்து, அவன் வேறு
விதமாக மனைவிமேற் சந்தேகமுறாவண்ணம், அயலிலுள்ள விருபு
றத்துங் கதவுகளைத் தட்டிவிட்டுப் போயினன். பின் மறுநாள் வே
தியர்க ளனைவரும் பாண்டியனிடத்துவந்து கோவே! நின்னுருகை
யிலுஞ் சில ரெம்மைத் துன்புறுத்துகின்றார்கள். சின்னாட்களுக்கு
முன் வேதிய பிரமச்சாரிகளை வாளாற் றுமித்துக்கொன்றனர்; நே
ற்றிரவெங் கபாடங்களின் மிசையறைந்து சென்றனரென முறை



யிடவதற்குவழுதி வேதியர்களே! கதவைத்தட்டிய கள்வனையாது
செய்வதெனக் கேட்க, அவர்கள் கையினைவாங்கல் வேண்டுமென,
அதுவேசரியெனத்தா னிவ்வாறு நிகழுமெனநினைத்துக் கதவை
த்தட்டிய கைகையை வெட்டிக்கொண்டு நிகழ்ந்தவையெல்லா மா
தியோடந்தமாய்ச் சொன்னான். வேதியர்கள்கேட் டரசனை நீதி
க்கும் புகழ்க் குலருக்குத் தாயேயெனப் போற்றித் தம்மிடஞ்
சென்றனர். மகறன்பின், அக் கைக்குப் பொற்கை செய்துவைத்
துக்கொண் டிருந்தான். இவ்வாறு, அரசாட்சிசெய்து வருகையி
லோர்நாள் சொக்கேசப்பெருமா னரசிபனுக்குவந்து பொற்கைக்
குப்பதிலுள்ளபடி யொருகைமுளைக்கும் படியருள்செய்து மறை
ந்தார். பாண்டியன், சோமேசருட்டிறத்தைவியந்து, திருவிழா
நடத்தி மணிக்கலன்க ளளித்தின்புடன் பூசனையியற்றி யவரடியை
மருவிச் சுகித்திருந்தான்.

67-வது

# மூர்த்தியார்க்கரசளித்த திருவிளையாடல்.

மூர்த்தியாரென்னும் வணிகர், ஒவ்வொருநாளும் விருப்பத்
தோடு தவறிலாது சந்தனஞ் சொக்கர்க்களித்து வந்தார். இவ
ரிவ்வாறுசெய்து வருங்காலத்திற் கருநாடதேயத்தொரு வலிய
வரசன், தென்னனைச் செயித் தரசாண்டுவந்தான். அவ னமணர்
வஞ்சகத்தகப்பட்டுச் சேவகர்களை வெறுத்து வந்தான். இவ்வணி
கரமணரை மதியாது சிவபெருமானை வணங்கி வருதல்கண் டெ
ன்றும்புகழ இவர்செய்துவரு தொண்டைச் சிதைக்க வேண்டிச்
சந்தன மெவரும் விற்காத வண்ணஞ்செய்தான். மூர்த்தியாரிதை
றிந்து வருந்தித்தேடியும் கிட்டாராய்த் தன்முழங்கையைச் சந்த
னக்கட்டையாகத்தேய்க்கப் பெருமான்றோன்றி, யாம்மகிழ்ந்தன
ம் நீயேயினி யிவ்வூர்க்கரசாவாயென வியம்பி மறைந்தார். அன்றி
ரவே கருநாடதேயத்தரசன் மாண்டான். அமைச்சர்கள் ஏதுசெய்
வதென்றுதோன்றாமற் பாண்டியபரம்பரையாரு மின்மையாலொரு
யானையின் கண்ணைக்கட்டி மஞ்சனமு மாலையுங் கொடுத்தனுப்ப,

அந்த மூர்த்திநாயனா ரிருப்பிடந்தேடி யவரைமஞ்சனமாட்டி, மாலை சூட்டி, பட்டத்திற் குரியராக்கியது. நியதிப்படி யவரையரசனாக்கி னார்கள். எல்லாம் வல்லசுந்தர ரருளென்றே யாவருந்துதித்தனர். சமணர்தேய சைவமோங்க யரசியற்றிச் சின்னாட்கழித்துச் சிவ பதங் குறுகிவாழ்ந்தார்.

---

68-வது

## காரியார் பாரியார் பாப்பகுத்த திருவிளையாடல்.

மதுரைக்கண்ணே கடைச்சங்கந் தழைத்தோங்கி வருங்காலத் தில், வடநாட்டின் கண்ணேயிருந்து காரியார் பாரியாரென்னும் பாவலர்கள் மதுரைநாடித் தென்னன்மேற் பாவியற்றிக்கொண்டு பரிசுபெற வந்தார்கள். புறவெல்லையை யண்மியகாட்டி னெறி யுற்றது மாதவன் சாய்ந்து மாலையுறு மமைய மாயினமையான் மாலை மயக்கால் நெறி மயங்கி நிற்கையில், எல்லாம் வல்லசித்தராய விசன், ஆபுரப்பவன்போல நின்று விருத்தவடிவினராய், வேய்ங் குழல் வாசித்துக்கொண்டிருந்தார். அவரைப் பாவலரண்மி நெறி கேட்க வெங்கு போகின்றீரென, அவர் காரணத்தோடு சொல்ல, வதிலோர் பாக்கேட்டேனனஞ் செய்யப் பாவலர்கள், கோமேய்ப் பவ னன்றென வுணர்ந்து, நெறிகாட்டின், பாண்டியனளிக்கும் பொன்னிற் பாதி தருவதாக வுரைக்க, அஃதெனக்கு வேண்டே னெல்லாமுடையே னிப்பாக்களிற் பாதி சோமசுந்தரன்மேற் பாடு கென வோதி மறைந்தருளினார். பாவலர்களும், சோமசுந்தரனே யெனத் தேறி, மறுநாட் காலை, ஆலவாய்ச் சுந்தர ராலயத்துட் சென்று தாம்பாடிய பாவினுட்பாதி, சொக்கேசர்மேற் பாடித் துதித்துப் பாண்டியனிடம் பரிசுபெற்றுச் சென்றார்கள்.

திருவிளையாடல்கள் முற்றுப்பெற்றது.

---



# கலியுகத்தில் அரசாட்சி யும், விசேடங்களும்.

## சோமேசபாண்டியன் ஆண்டமனிதவருடம் 11.

இவன் கலியுகத்திற்குமுந்தி யநேகவருட மரசாட்சிசெய்த வன். இவன்காலத்துந் தமிழ்பெருகி தழைத்தது. இவன்காலத்தே சோமசுந்தரக்கடவுள் கிருபையால, இலங்கையிற் சிலாவக்கடலில், முத்துக்குளித்துத் திரளாகமுத்தெடுத்துச் சுவாமிக்கும், அம் மனுக்கும் முத்தங்கிமுதலியனச் சமைத்தான்.

சோமேச பாண்டியன்முதல் அதிவீரராம பாண்டியன்வரை பட்டம் 246-க்கு மனிதவருடம் 3790.

அதிவீரராமபாண்டியன்முதல் வாளால்விழித்துறங்கும்பராக் கிரமபாண்டியன்வரை பட்டம் 34-க்கு மனிதவருடம் 669.

இவருக்குப்பின்

## ஆதிசுலுத்தான் மலுக்குநபி முதலியோர் ஆண்டவருடம் 48.

ஆதிசுலுத்தான் மலுக்குநபி யென்னுந் துலுக்கப்பிரதானி யானவன், வாளால்விழித்துறங்கும் பராக்கிரமபாண்டியனைத் துர த்திவிட்டுத் தானே மதுரையை யாளுகைசெய்தான். அவனுக்குப் பின் (8) மகமதியர்கள் (48) வருடங்களாக ஆண்டுவந்தார்கள். மு ற்சொல்லிய ஆதிசுலுத்தான்மலுக்குநபி யென்னுங் கொடியனால், மதுரையிற்சனங்கள் கட்டநிட்டூரங்க ளடைந்ததுமன்றி, மீனாட்சி கோயிலின் வெளிப்பிரகாரம், அதைச்சூழ்ந்த (14) கோபுரங்கள், அவைகளையடுத்தக் கட்டிடங்கள் முதலியவும் சிதைந்துபோயின.

## கம்பணவுடையார் ஆண்டவருடம் 12.

திருப்பணிமாலைப்பாட்டு.

பின்னொரு காலத் திருக்காப்பு நீக்கித்தன் பேரன்பினால்
முன்னுள வூர்களும் பின்புதி தாய்விட்டு முக்கணர்க்கு
மன்னிய பூசை திருப்பணி கூடல் வளரச்செய்தான்
கன்னியும்பொன்னியுங் கங்கையுங்கொண்டருள் கம்பணனே.

மதுரைக்கேற்பட்ட கட்ட நீங்குகாலம் வந்ததால், மைசூர் இராஜாவின் சேனாதலைவனாகிய "கம்பணவுடையார்" சேனைசைனியங்களுடன்வந்து அநுலுகர்களைவென்று, அவர்களை வெளிகிட்டோடச்செய்து, மதுரையையரசாளத் தொடங்கினன். துலுக்கரால் இடியுண்டழிந்த கோபுரம், திருமதில் முதலிய கட்டடப்புதுக்கி, கோயிலைத் திறந்துபார்க்கபொழுது மூர்த்திக்கணிவித்த சந்தனம் புஷ்ப முதலியதும் புதியனவாயிருந்தன. குடிகளெல்லாம் உடையாரை வாழ்த்தி தகுந்த மரியாதைகள் செய்துவந்தனர். அவர் கோயிலுக்குக் கிராமங்களும், அர்ச்சகர்களுக்கு பொருட்சகாயமும், குடிகளுக்கு நன்மையும் செய்துவந்தார். பின் அவர்மகன் 'எம்பணவுடையார்' 10, வருடமும் 'பிரகாச வுடையார்' 11. வருடமும் முறையே யாண்டுவந்தார்கள்.

## சுந்தரத்தோளன் மாவலிவாணராயன் ஆண்ட௵ 16

### திருப்பணிமாலைப் பாட்டு.

மன்னான் குலசேகர பாண்டியன்செய்த மாமண்டபம்
பின்னொரு காலத் தரைகுறை தீர்த்துப் பிறங்கச்செய்து
பொன்னின் திருவாபரணம் பலபதி தாகத்தந்தான்
மன்னும் புகழ்த்திரு மாலிருஞ் சோலை மகாவலியே.

மாறுசூழ் சடாடவிவேற் குரிசில்குல சேகரபாண்டியன்றன் செய்த
ஆறுகாற் பீடத்திற் சிலைமேற் கைப்புதிகா வழகிற் செய்து
வீறுசேர் நாயகசந் நிதித்திருக்கா வணப்பத்தி விளங்க வைத்தான்
தேறுசீர்க் கடலெனுஞ் சுந்தரமா வலிசீர்த்திச் செல்வன் றானே.

மந்திர மிக்க கருப்பக்கன்னி சந்நிதி மாமண்டபமுஞ்
செந்திரு வம்மை முற்பிரா காரத் திருமண்டபமுஞ்
சுந்தரப் பள்ளி யறையதுக் தான் முன்ன னாளணங்க
வந்தருளுந்திரு மாலிருஞ் சோலை மகாவலியே.

இவன் பாண்டிய பரம்பரையில் காளையார்கோவில் நாகி அதிராயி வயிற்றிலுதித்தோன் இவன் அதிக சிறப்புடன் அரசாட்சி செய்துவந்தான் இவன் கோயிலுட்புறங்களிற் புதுமையான கட்டடங்களும் சூரியன் சந்திரன் கோவில்களும் பிரகாரங்களும் திருப்பித்தான் சுவாமி யம்மனுக்குத் திருவாபரண முதலிய வமைத்தருளினன்.



## சந்திரசேகரபாண்டியன் ஆண்டவருடம் 7.

வாழையடி வாழையான முந்தினபாண்டிய வம்சத்தில் ஒருவனாகிய இவன் தவறிய சீமையைக் கைக்கொண்டரசாளுகையில் காஞ்சிபுரத்து வீரசேர சோழனென்பான் ஒருவன் படையெடுத்துவந்து பாண்டியனைச் செயித்துத் துரத்திவிட்டுத் தான் இராச்சியத்தைக் கைக்கொண்டான். தேசம்விட்டகன்ற செழியன், அக்காலத்தே பிரபலராச்சியமாய் அட்டதிக்கிலும் செயத்தொனி முழக்கிய விஜயநகரத்து இராயரை அடைந்து சோழனால் தனக்கிழைத்த தீமையாவுந் தெரிவிக்க, அவர் தமது பிரபல சேனாபதியாகிய நாகமநாயக்கனையழைத்து "நீ போய் சோழனைச் செயித்துப் பாண்டியனுக்கு மகுடஞ்சூட்டிவா" எனக் கட்டளையிட்டார். அவனுமப்படியே சென்று சோழனைப் பின்னிடவோட்டிப் பாண்டியதேசத்தைப்பீடிபதற்குத் தானே யரசனாக விளங்கினன். இராயர் இதையறிந்து சினமுமுடையராய் எவன்போய் "அந் நாகமநாயக்கனுடைய சிரசைக் கொய்துவருவான்" என்றரண்மனைக் காரியக்காரருடன் சொல்ல, நாகமநாயக்கனுடைய மகன் "விசுவநாதநாயக்கன்" என்பான் இதோ யான் செல்லுகின்றேனென்று, சுத்தவீரமும் அரசபக்தியும் உடையனாய்த் தளத்துடனேசென்று தன் றந்தையைச் செயித்து, அவனைக் கொலைக்கு இராயரிடங் கொண்டுவந்தபோழ்து அவர், அவன் குற்றத்தை மன்னித்ததுமன்றி விசுவநாதநாயக்கனைப் பார்த்து நீ பாண்டிய தேசத்தை யரசாற்றுவாயெனப் பணித்தனுப்பினர்.

## விசுவநாதநாயக்கன் ஆண்ட௵ 26.

### திருப்பணிமாலைப்பாட்டு.

செஞ்சொற்புனை மதுரேசர் திருவால வாயிறைவர்
திருவுள மகிழ்ந்து புனையச்
செம்பொற் பதக்கமுட னணிவா பரணமுஞ்
சேர்த்தபரி கல மாதருந்
கஞ்சவயல் சூழுகொம் மட்டிமா நகரியின்மேற்
கயல்குறி கொடாத னுருங்

பெரியவீரப்பநாயக்கனென்ற

## வீரப்பநாயக்கன் ஆண்ட வருடம் 25.

திருப்பணிமாலைப்பாட்டு.

கூடலம் பதியிறைவர் முன்வெள்ளி யிமை யமது
குலவிபிட வொரு கல்லினற்
குறடுகோ புரவாயி லிற்கதவு தென்வாயில்
கொள்சுருட் படி பாமணை
ராடுமா மண்டபத் தளவிசை திருப்பள்ளி
யறையதிலுயர் படிக ளுமையா
ளாலயத் தளவிசை திருக்கதவு பல்லக்கொ
டாளவொற் பட்ட மழகா
ரோடைவரும் வீரப்ப னற்றோப்பு மத்தோப்பி
லோங்குமுயர் மணி மண்டபம்
ஓதுமிவை போலினிய பணிவிடை கள்சொக்கருக்
கொருமை யுடனே புதவினான்
மேடையும் மாடமுங் கெங்குமட வார்கள்பயில்
வீதிரும் தானை பதியன்
வேதியர்கள் காவலர்க ளுவலர்கள் வாழ்வரு
விசையன் வீரப்பனே.

இவன்காலத்தே கோபுரவாயில் கபாடம் புதுக்கியும், பல்லக்குமுதலிய ஆபரணங்களியற்றியும், ஒற்றைக்கல்லாற் குறடமைத்தும், சுவாமி பம்மன் சந்நிதி மண்டபத்துத் தலவரிசையிட்டும், பள்ளியறைப் படிகளமைத்தும், வீரப்பன்தோப்பு என்றசோலையும், அதில்மண்டபமுமியற்றி அரசாண்டுவந்தான்.

விசுவப்பநாதநாயக்கன் ஆண்ட ௵ 3.
லிங்ககிருஷ்ணம நாயக்கன் " ௵ 2.

## முத்துக்கிருஷ்ணமநாயக்கன் ஆண்ட ௵ 3.

இவன்காலத்தே சிலதிருப்பணிகளையும் அக்கிரகாரங்களையுங் கட்டினதுமன்றி, மதுரைக்குந் திருப்பரங் குன்றத்திற்கும் இடையில் § பசுமலைக்குத் தென்புறத்தில் முத்துக்கிருஷ்ணபுரமென்ற

§ பசுமலையென்பது பாண்டியர்களின் பசுக்கள் புல்மேய்ந்த இடமாகையால் பசுமலையெனப் பெயருண்டாயது.

பட்டணமுந் தெப்பக்குளமு முண்டாக்கினன். மேலுமிவன் இராமநாதபுரத்து சடைக்கப்பத்தேவருக்கு (2162) கிராமங்களும், (574) பட்டிகளும் அடக்கமானதும், பிறைவடிவாயுங்கிழக்கரை முதல் மேற்கே குலக்கரைமட்டும் எல்லையுள்ளதாயு முள்ள பூமியை விட்டுக்கொடுத்து, இராமேசுரத்து பாதுகாவலனாகிய 'சேதுபதி' என்கிற பட்டமுங்கொடுத்தான். விசயரெகுநாத சேதுபதி பட்டத்திற்கு வந்தபின் றன்மருமகனான 'சசிவர்ணத்தேவருக்கு' தமதிராச்சியத்தில் 5-ல் 2 பங்காகியசிவகங்கைச்சீமையைப் பிரித்துக்கொடுக்கலாயின.

சின்னவிசுவப்பநாயக்கன் ஆண்டது 1.
கஸ்தூரிரெங்கநாயக்கன் ஆண்டது 8.
முத்துவீரப்பநாயக்கன் ஆண்டது 26.

முத்துத்திருமலைநாயக்கரென்ற

## திருமலைநாயக்கர் ஆண்டது 36.

திருப்பணிமாலைப்பாட்டு.

தரணிபுகழ் மேருகிரி பலவுரு வெடுத்தாகற்
சங்கிதா னத்தில் வந்து
தலமுற்ற தென்னாற் றிருபத்து நாலுகா
றன்னிலே யெந்த நாளும்
திரமான புதுமையா மண்டபங் கட்டியே
சித்திரமு மெழுதி யந்தச்
செய்யமண் டபமணியு மாலையென விருபாற்
சிறந்தமண் டபமி யற்றிக்
குரவார் கருங்குழ லங்கயற் கண்ணம்மை
கொன்றையணி சொக்கேச னார்
கூடிவினை யாடியும் வசந்தமெனும் நல்விழாக்
கொண்டருள வேசெய் தனன்
பராச சேகரன் பராச பூஷணன்
பராச ராச திலகன்
பராசர் பணிமுத்து கிருஷ்ணப்ப பூபனருள்
பாலதிரு மலை பூபனே. (க)

மறைமொழி கடம்பாடவாணியன் முனிவர்கையான்
மாறனார் காட்சி வைப்பான்
மாதவ னெளிக்கவமா தாயினைத்திறல்
வருசுப்ர மணியன் வேலால்
தகர்பட்டு வந்தூய மாப்பிள்ளை மாரிதிரு
தாழ்வாசி யுடலம் வற்றித்
தவசட்டு மொருகால நிறைவுற்று மிப்படித்
தளர்ந்து கடை பட்டதற்குப்
புகலரிய சத்தகா வமுமத னெல்லிலே
புவன மெல கண்டவதனும்
பொங்கேறு சிகரமேவு மண்டபமு மதுரேசர்
புகழுறவ மைப்பு வித்தித்
திகழ்செய்திரு மலைநாயகர் சமுத் திருமெய்யின்
தெப்பக்குளங் கண்டனன்
செகரூப பல்விராய சுமுத்துக் கிருஷ்ணாசுத
திருமலை மகீ பாலனே. (உ)

ஏழைக்கெழு நொக்கம் கொடுத்துப் படைத்துதா
னுத்திர முதற் பழங்கள்
கொடுத்தனை சிவசிகை மாலையைத் துக்கமை
பேரமி ரனைகத்தி
பரையதுகன் றுமைபெவல் லைசாறு விட்டுகன்
றுய்க்குவைறுத துக் செங்கதுய
அறிக்காய் பரப்பிக் கலிக்கவொ டாமலக
மரியதான் திக்கா புருஷ்
தொருக்கா லிருக்கா லிடித்துதன் மரீனி
துரிய வடுஞ் சாறுமவிட்டு
பேழிகா லங்களிலு மசையாத வச்சியக்
காரையிட் டோங்கு மம்மை
சிரக்காலம் வாழுமே பிடைட்சி கோயிலுக்
கொப்பாயில் வித்துதன்னுரப்
செய்வித்த புண்ணியருக் நூகோடி புண்ணியத்
திருமலை மகிப னுக்கே. (௩)



முனைவேல் விழியங் கயற்கண்ணி சந்நிதி முன்மடத்து
ளனேவோர்க்கு மன்னமுந் தோழியம் மாட மறைக்குமது
தினமே தினியில் நடக்கும் படிக்கீர் திசையுங்கொண்டான்
புனமேவலி தந்தனன் கச்சித் திருமலை பூபதியே. (௪)

சங்கர செங்கள் மதுரா புரிச்சொக்கர் சந்நிதியிற்
பொங்கு கொடிக்கம்ப மாபலி பீடம்பொன் பூசவித்தான்
செங்கமலத்திரு வாழ்முத்துக் கிருஷ்ணப்பன் செல்வனெங்
கொங்கி வளர்ந்த புகழான் திருமலை பூபதியே. (௫)

நன்னுத லங்கயற் கண்ணி தனக்கு நலம்பெறவே
புன்னது மாகுங் கொடிக்கம்ப மாபலி பீடமுடன்
சொன்ன மளித்துப்பொன் பூசவித் தான்சுகபோகனெங்கள்
மன்னன் திருமலை பூபன் மதுரை வரோதயனே. (௬)

பின்னிய செஞ்சடைச் சொக்கர்தம் மாதுகாற் பீடத்திலு
மின்னெழி லம்மைத னாறுகாற் பீட மிசையினுந்தான்
இன்னருள் பெற்றரு ளுந்தாவார பாலரை யேயமைத்தான்
பொன்னணி தாரார் புயத்தான் திருமலை பூபதியே. (எ)

இவருக்கு கலியுகம்பிறந்த 4724-ல் திரிச்சிராப்பள்ளியிற் றிருமுடிசூட்டி, நால்வகைசேனையும் புடைசூழப் பெருஞ்சிறப்புடனழைத்துக்கொண்டு மதுரைக்கு வருகையில் கன்றுல்வந்துற்றமையால் இடையே திண்டுக்கல்லிற் றங்கினர். திருமலைநாயக்கர் கண்வளருங்கா லோர் விருத்தவேதிய மருத்துவன், கனவிடைத்தோன்றி யருமருந்தொன் றருத்தி யகலக்கண்டு விழித்து நோக்குங்கால், முற்பிறப்பின் றொடர்வினைப்பயனால் நெடுநாள்தொட்டுவந்து வருத்திய கொடுநோ யகன்றொடக்கண்டு, அருமறைக்கெட்டாச் சுயம்புலிங்கேச்சுரனே கனவிடைத்தோன்றி, கொடுநோய்விலக்கி யருளினனென்னத் திடமாய்நினைத் தடனே மதுரைசென்று கோயில் புக்கு, சாஷ்டாங்க நிலனுறப்பணிந்து போற்றித்துதித் தநேகதிருப்பணிக ளியற்றினர். அவைகள் யாவெனை:—

சிற்பசாஸ்திரப்படி 20 அடி உயரமும் 80 அடி அகலமும் 316 அடிநீளமும் 124 கற்தூண்களுமுள்ள புதுமண்டபமொன்றும் பெரியவசந்தமண்டபங்கட்டி, சித்திரங்கள்வரைந்து, மையப்பத்தியின்மேல்பக்கம் கருங்கற்சவுக்கையும், நடுவில் தன்னுடையபட்டமகி

ஷிகள் அறுவருடன்கினங்கும் பாவனையாகவும், தனக்குமுன்னரசாட்சிசெய்த 9 (ஒன்பது) பட்ட அரசர்களின் அருவங்களும் இவ்வையல்வருத்து, வைகாசிமாதம் வசந்தோத்சவமும், மார்கழிமாதம் எண்ணெய்க்காப் புற்சவமும், வருடத்துக்கிருமுறை நடக்கும்படிக்கட்டளையிட்டும்.

சொக்கேசரும் அங்கயற்கண்ணம்மையுந் தெப்பமீதுலாவப் பக்கம் 1க்கு 300 கெஜமாக 4 பக்கமும் 1200 கெஜம் சதுரமுள்ள அருமைத்தெப்பக்குளமொன்று கிலே மண்டபம் பூந்தோலையுடனும். அத்தெப்பக்குளத்தின் நடுபால் முத்திக்காஸிங்கரைப் பிரதிட்டைசெய்து ஓர் பூர்வகோயிலுஞ் சமைத்தும்.

கோயிலுக்குத் தென்மேற்றிசையிற் றனிருந் தரசாட்சிசெய்வதற்கு ஆகாரமுகப்பு, அரங்கவிலாசம், தேவபூசை ஸ்தானம், உத்தியாவனஞ் சூழ்ந்த தடாகம், இராணிகளிருப்பிடமாகிய அந்தப்புரம், நாடகசாலை, ஆயுதசாலை, மல்லுக்கச்செட்டிகளின் யுத்தக்களரி, இராஜவுறமுறையார்வசிக்குஞ் சிங்காரத்தோப்பு, தரிசனைக்குவருகிற அரசர், பாளையகாரர், சந்திக்கும் சபாமண்டபம், சுவர்க்கவிலாச முதலிய அருமையான கட்டடங்களைத் தாங்கிநிற்குந் தூண்கள் 40 அடி உயரமும் 15 அடி சுற்றளவுமுள்ளதாயும், சுவர்க்கவிலாசத்தின் மத்தியிற் றளத்திலிருந்து 60 அடி உயரமும் 80 அடி சுற்றளவுமுள்ள பெரியகுடமும், கிழ்ப்பாரிசம் சதுரமான பெரிய முற்றவெளியும், அனந்த [illegible] வளைவும், கொங்காணி வளைவும், கழித்தாக்குவளைவும், விசித்திரமான ஒப்பரிகைகளில் சிற்பசாஸ்திரப்படி இலாகடைக்கூடு, நடனசாலைக்கூடு, வெளவால்நெற்றிக்கூடு, [illegible]க்கூடு, கல்மட்டக்கூடு, நீண்டகூடு, [illegible]கூடு முதலியதுமமைத்து [illegible] வெல்லமாற்றுடன் கடுக்காய், வெள்ளிக்காய், தான்றிக்காய் பிச்சாற்றையுஞ்சேர்த்தரைத்த சுண்ணாம்புடன் குழைத்து, அடுக்கடுக்காய்ச் செங்கல்லைப் பம்பாய்ப் பூர்த்தி வச்சிரக்கட்டிடமென்னும்படி அரண்மனை கட்டுவித்தும்.

சுவாமிகோயில் அம்மன்கோவில் கொடிக்கம்ப பலிபீடங்கட்குப்பொன்னினாற் பூசினதும், அழகர்பீடங்களிற் றுவாரபாலகரை நிறுத்தியும், கோயிலுக்குப்பூசைகள் நியதியாக 6 (ஆறுகாலமும்) நடக்கும்படி 150 கிராமம் சர்வமானியமாகவிட்டும், வாக்குநிதிகள், திருவாபரணங்கள் சமைத்தும், மதுரைமுதலிய அநேகவூர்க



ளில் 96 ராயகோபுரங்கள் கட்டியும், மதுரை, திருநெல்வேலி, திரிச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், சேலமுதலிய ஜில்லாக்களும், புதுக்கோட்டை, திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒருபாகமும் அடங்கத் தனிபரசாய் நீதிகோடாதரசியற்றிவந்தனர்.

அக்காலத்திற் குமாரக்கடவுள் தொண்டராகிய "குமரகுரு" சுவாமிகளிடம் மதுரை மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்கேட்டுச்சன்மானஞ்செய்தார்.

பிள்ளைப்பெருமாளையங்காரும் நாயக்கர்சமஸ்தான வித்துவானாயிருந்து அஷ்டப்பிரபந்தமுதலிய நூலைச்செய்தனர். பட்டுநூல்காரரெனும் வர்ணத்தாரும் சௌராட்டிர தேசத்திருந்து மதுரைக்குக்குடியாக வந்தார்கள்.

---

## சின்னமுத்துவீரப்ப நாயக்கன் ஆண்டது 1

இவன்காலஞ்சென்றபின் இவன்மகன்

## சொக்கப்பநாதநாயக்கன் ஆண்டது 4.

இவனுக்குப்பின்

## ரெங்ககிருஷ்ணம நாயக்கன் ஆண்டது 3.

இவனுக்குப்பின்

## மங்கம்மாளென்னு முத்தம்மாள்

## ஆண்டது 18.

இவள்செய்த நீதியான வரசாட்சியுந், தரும விஷயங்களும் நாளதுவரைக்கு மறக்கத்தக்கதன்று. பிராமணருக்குச் சருவமானியங்களைவிட்டு, பலசத்திரஞ் சாவடிகளைக்கட்டுவித்து, அவைகளிற் றானங்கள் நடப்பித்து, மதுரையிலிருந்து நான்குதிசைகளுக்குஞ் செல்கின்ற வழிகளில் சாலைகள்வைத்து, தண்ணீர்ப்பந்தல்கள் கட்டவுமேற்பாடுசெய்து "மகாராசிமங்கம்மாள் வைத்தசாலை" என்று வாழ்த்தும்படியரசியற்றி வந்தாள். இவளுக்குப்பின்

## விஜயரங்கசொக்கநாத நாயக்கன் ஆண்டவருஷம் 28.

இவன் மனைவி

## மீனாட்சியம்மாள் ஆண்டவருஷம் 5.

இவர்களிருவர்களால் தருமச்சத்திரம், சாவடி, சாலைமுதலி
யீதியற்றிக் கோயிலிற் றிருக்கலியாண மண்டபம், பொற்றாமரை
யின் மேற்கருகில் சந்தியாவந்தன மண்டபமுங்கட்டி, சுவாமிகோ
யிற் சுற்றுப்பிரகாரத் தூயத்தம்பங்கள் தங்கவிளாயிட்டுப் பிரதிட்
டைசெய்து, ஊஞ்சற்றிருநாள் கார்த்திகைத்திருநாள் நடக்கும்படி
கிராமங்களும், அறைக்கட்டளையும்விட்டு, ஆபரணாதிகளுங்கொடுத்
து, ஆறுகாலப்பூசை அபிஷேகாதிகளுஞ் சரியாய் நடந்துவந்தன.

## முராரிராயர், அப்பாஜிராயர் ஆண்டவருஷம் 5.

பகைவர்கள்கலகத்தில் நாயக்கர்வம்மிசத்தவர்கள் மதுரையை
விட்டுத் தங்களுக்குச்சிபாயிருந்த சேதுபதிநாட்டிற்போய்ப் புகுந்
தண்டிவாழ்ந்தார்கள். அந்நாளில், ஐதராபாத்து நவாப்பு நிஜாமல்லி
சாயபு ராஜுவமாகவந்த வீரர் எக்கோஜிபத்தேசிக்கு என்னுமிரா
ட்டியர் தஞ்சாவூரைப்பிடித்துக்கொண்டு தன்வகையில் திரிசிரபுர
த்தே முராரிராயரையும், மதுரையில் அப்பாஜிராயரையும் நியமி
த்து அதிகாரஞ்செய்து வருகையில், இரண்டு வருடங்களுக்குமுன்
பேபகைவர் கல்கங்களுக்கஞ்சி வாளரவிர மதுரைக்குப்போன இந்
நாட்டார் தானிகர்களை வரவழைத்துக் கோயில்சம்ரட்சணைசெய்து
முன்போல நடத்திவந்தார்கள்.

## கூக்குசாய்பு ஆண்டவருஷம் 1.

அப்பாஜிராயர் அரசாட்சி செய்துவருங்காலத்தே, அரசாண்
டுவருமைசூர் ராஜாவின் தளக்கர்த்தன் கூக்குசாய்புவந்திவர்களை
ச்சேயித்து, இவனதிகாரஞ்செய்துவந்தான்.

## வங்காருதிருமலைநாயக்கன் ஆண்டவருஷம் 2.

கூக்குசாய்பு அரசாண்டுவரும்போது, இராமநா சது
பதிவாசல் தளக்கர்த்தன் சுனைத்தின வெள்ளையன் வைகார



னும், பிரதானி தாண்டவராயபிள்ளையுஞ் சதுரங்கசேனையுடனே
படையெடுத்துவந்து, பதினாறுநாள் கடினமான யுத்தஞ்செய்து
வென்று மதுரையைப்பிடித்துத் தங்கள்வசம் முன்புவர் தண்டின
வடுக மீனாட்சியம்மாள் தெத்துப்புத்திரனான வங்காரு திருமலைநா
யக்கனுக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் நாச்சியாரம்மன் கோயிலில் இவன்
பாட்டன் "முத்துத்திருமலைநாயக்கரால்" முன்னியற்றிய சுக்கிர
வாரமண்டபத்தில் வைத்து மகுடஞ்சூட்டி, அரசில்வைத்துத்தம
மிடஞ்சென்றனர். இவன் மதுரையை மிகச்சிறப்புற வரசாண்டு
வந்தனன்.

## மாபோசிகான் சாயபு ஆண்டவருஷம் 3.

மேற்சொல்லிய வங்காரு திருமலைநாயக்கன் அரசாட்சிசெய்
து, இரண்டுவருட மானதும் ஆர்க்காடுநவாப்பின் றம்பி மாபோசி
கான் சாயபு, மம்மதலிகான்சாயபு முதலிய பலர் நால்வகைச்சேனை
யுடன் வந்து தந்திரமாகநாயக்கனை வெள்ளிக்குறிச்சிக்கனுப்பிவிட்
டு, இவர்களும், இவர்களினத்தி னவாப்புக்களு மரசாண்டுவந்தார்
கள்.

### மம்மதலிகான் சாயபு ஆண்டவருஷம் 2.

### அமுலாகி முகான்சாயபு ஆண்டவருஷம் 2.

### மயினுமியா ஆண்டவருஷம் 1.

### மக்கியியா ஆண்டவருஷம் 1.

## சந்தாசாயபு, படேசாயபு ஆண்டவருஷம் 22.

சந்தாசாயபு, படேசாயபு, சப்தரலிசாயபுவி னுடைய மைத்
துனன்காலத்து முத்தம்பலமுதலியார், தாணப்பமுதலியார், கே
னேரியப்பமுதலியார், தளவாய் முதலியார், வெங்கடாசலமுதலி
யா ரின்னுஞ்சிலர்கள் அதிகாரம்பெற்று, சோமசுந்தர ராலயத்தி
ற்குத் திருப்பணிமுதலியன கவனித்து, ஒழுங்குபடுத்தி வந்தார்க
ள். ஒவ்வொருவரும் தந்தம்பெயரால் அக்கிரகாரங்கட்டியும், வை
கைநடுவே மண்டபங்கட்டியும், சந்நிதானத்திற்கருகில் குடியிருந்த
துலுக்கர ாஜியார்தெருவிற் குடியேற்றியுஞ் செம்மையுற வர
சாண்டு

## கான்சாயபும், மீனாட்சிநாதபிள்ளைமகன் முத்தழகப்பிள்ளையும் ஆண்ட௵ 2.

கான்சாயபும் திரிசிரபுரம் மீனாட்சிநாதபிள்ளைமகன் முத்தழகப்பிள்ளையுஞ் சிலகாலமரசாண்டு புகழ்பெற்றுவந்தார்கள். இவர்காலத்தும் ஆலவாயமர்ந்த ஆதிமூர்த்திக் கருந்திருப்பணிகணடந்தன.

---

## கான்சாயபு (வகையரு) ஆண்ட௵ 12.

கான்சாயபென்பவன் தன்னோடு கூட்டாக வரசாட்சிசெய்த முத்தழகப்பிள்ளையை வஞ்சித்துப் பன்னீராயிரம்பொன் வருமானம் வரத்தக்கக் கிராமங் கோயிற்றிருப்பணிக்காக விடுத்து, அரசாட்சியைத்தன்னதாக்கிக்கொண் டரசாளத் தொடங்கினான். பின் பகையுண்டாயிற்று. இவ்வாறு கலக மதிகப்படவே பொறுமையுடன் காலம் பார்த்திருக்கையில், கடலூரைப்பிடித்த காப்டன்கோப் துரையைப் பழக்கப் படுத்திக்கொள்ள தொண்டமான் சேதுபதி முதலியவர்கள் மூலமாகச்சென்று விஷயங்களைத்தெரிவித்து சென்னபட்டண நவாப்பையும், ஊமையனையும், மருதப்ப சேருவைகாரனையும் வென்ற கர்னல் லயிட்டன் துரையோடு சேனைத்திரட்களையுஞ் சேர்த்துவந்து, மதுரையைச் செயித்து 500 (ஐநூறுரூபாய்) செலவுசெய்து கோயிலைப்பிராயச்சித்தஞ்செய்து முன்போல பூஜை முதலியவைகள் ஒழுங்காக நடக்கும்வண்ணம் தேவஸ்தானத்தைச் சீர்ப்படுத்தித் தங்கள்கையிலாசனையபித்தரசாண்டுவந்தார்கள்.

---

## அப்தரால் கான்சாயபு ஆண்ட௵ 6.

மேஜர்கர்னல் பிட்டன்துரை ஜெயித்தவுடன் தன்வகையாகவுங் குடிகளுக் கநுகூலஞ்செய்யத் தக்கவனுமான அப்தரால்கான் சாயபுக்கு முடிசூட்டினான்.

## மொய்தீன்சாயபு ஆண்ட௵ 6.

அப்தரால்கான் சாயபுக்குப்பின்னால் மொய்தீன்சாயபு சனங்கள்மகிழ அரசாட்சிசெய்து, அழகியகொக்க ராலயத்திற் கநுகூலங்கள் செய்துவந்தான்.

---



## மல்லாரிராவ் ஆண்ட௵ 5.

மொய்தீன்சாயபுக்குப்பின் மல்லாரிராவ் அரசாளத்தொடங்கினான், இவனுக்குக் கத்திகட்டி வீரசூர மல்லாரிராவ் எனப்பெயருண்டு.

## ரங்காராவ் ஆண்ட௵ 1.

மல்லாரிராவுக்குப்பின் ரங்காராவ் அரசாளத்தொடங்கினான். அச்சமயம் இங்கிலீஷாருக்கு ஒப்பந்தப்பட்டுள்ள வாலாசாயபு நவாப்பைக்கொண்டு, கம்பெனியார் ஜில்லாக்களாகச்சீமையைப் பிரித்தார்.

இவர்களுக்குப்பின்

## கோயிலுக்கதிகாரிகளாயிருந்துகாரியாதிபார்த்தவர்கள் பெயரும், வருடமும்.

| | |
|---|---|
| நெல்லூர் வெங்கட்ட ஐயர் ௵ | 2. |
| ஷேக்முகம்மதுசாயபு | 1. |
| சுப்பாராயர் | 3. |
| இராமசாமி ஐயர் | 1. |
| முத்திருளப்பபிள்ளை | 1. |
| கோபாலகிருஷ்ண ஐயர் | 1. |
| பீர்காதர் சாயபு | 1. |
| முகம்மதுசெல்லி சாயபு | 1. |
| இராமசாமி ஐயர். | 1. |
| வெங்கட்ட ராயர் | 1. |
| நாராயண ராவ் | 1. |
| அருணாசலம்பிள்ளை | 1. |
| பட்டாபி ராமையர் | 1. |
| வெங்கட்ட ராவ் | 1. |
| வரதபண்டிதர் | 2. |

மேற்சொல்லிய ஒவ்வொருவரும் தங்கடங்கள் காலத்தின் கோயிலின்காரியாதிகளைச் சரியாய்நடாத்தி தங்கடங்களாற்செய்யக்கூடிய கைங்கரியங்களையுஞ் செய்து வந்ததின்பின், இங்கிலீஷ் 1801௵த்துக்குக் கலியுகம் 4902-ல் திண்டுக்கல்மார்க்கமாய் 'ஆர்டிஸ்துரை' என்னுங் கலெக்டர் மதுரைக்குவந்து தெப்பக்குளம் மீனாட்சிவிலாசம் பங்களா [illegible] ஙகினார்,

இதைக்கேள்வியுற்ற கோயில் ஸ்தானீகராதியோர் மேளதாளத்துடனெதிர்சென்று பூமாலை சந்தனாதி பிரசாதங்களைக் கொடுக்கப்பெற்று, கோயிற்கணக்குகளைச் சொக்கலிங்கராயர் சோமசுந்தரராய ரென்னுங் கணக்கப்பிள்ளைகள் கையாலேற்று, தன்னால் தாசில்தார் நியமித்து கோயிற்காரியாதிகள் பார்க்கும்படிசெய்து சரியாய் நடந்துவந்தன. இவர்மதுரையில் கலெக்ட்டருத்தியோகம்பார்த்த வருடம் 3.

பின் 2-வது கலெக்ட்டராகவந்த பேரிஸ்துரை காலத்தும், ஆர்டிஸ்துரைகாலத்து நடந்தவண்ணமே கோயிற்காரியாதிகள் நடந்துவந்தன. இவருத்தியோகம்பார்த்த வருடம் 7.

மூன்றாவது கலெக்ட்டராகப் 'பீற்றர்துரை' மதுரைக்குவந்ததிகாரஞ்செய்து முன்னடந்ததுபோலக் கோயிற் கவரால் சரியான அதிகாரிகள் நியமித்து கோயில் வரவுசெலவு கணக்குகள்பார்த்து வரும்போழ்து, ஒருநாளிரவு துரையானவர் பங்களாவிற்படுத்து நித்திரைசெய்தார். அவர்செய்த நன்மைக்கிரங்கிப் பின்வருகின்ற தீமையைவிலக்கும்பொருட்டு, மீனாம்பிகை துரையின்சொர்ப்பனத்திற்றோன்றி "நீ யிக்ஷணமே யிவ்விடத்தைவிட்டகல்வாயாக" என்றருளிச்செய்து திருவுருக்கரந்தாள். உடனே நித்திரைவிழித்துச் சோதிக்கும்பொருட்டவ்விடத்தைவிட்டகன்றனர். அப்பொழுதே யவ்வீடிடிந்துவிழுந்தன. அதைக்கண்டதுரை புளகாங்கிதராய் நம்மை யிரட்சிக்கக் கனவிடை தோன்றியவள் மீனாட்சியம்மையேயென நிச்சயித்து, அன்றுமுதல் அம்பிகைவிஷயத்தில் அதிபத்திவிசுவாசமுடையவராயிருந்து கோயிலுள்ளே பெரியவாயில்கள் முன்னிலையில் திருவாச்சித்தோரணவிளக்காதிகளுஞ்செய்துவைத்தும், மழைபெய்யக் குறைந்தகாலத்திற் பிராம்மணர்களைப் பொற்றாமரைக் கரையிலிருந்து வருணஜெபஞ்செபிக்கும்படிசெய்து மழைதருவித்தும், அவர்களுக் கநேகமா யன்னதானச் சமாராதனை நடத்தியும், சில திருப்பணிகள் புதுக்கியும், அம்மையின்கோயில்விமானம் எப்பொழுதுந் தெரிசனைசெய்யும்படி கன்னிமூலையில், மேலாவணிமூலவீதியும், தெற்காவணிமூலவீதியுஞ் சந்திப்பாயுள்ளவிடத்திற் கல்லறைகட்டி யதிற்சமாதியா யம்மையின்பதமலர்நிழலடைந்தார். இவருத்தியோகம் பார்த்தவருடம் 16.



## ஆர்டிஸ் துரைமுதல் வைவால்ஸ் துரைவரை கோயில் தாசில்வேலை பார்த்தவர்கள் பெயரும், வருடமும்.

| | |
|---|---|
| சர்ஜென்ராயமுதலி | 1. |
| சாம்பசதாசிவராயர் | 3. |
| புன்னாச்சி நாராயணராவ் | 2. |
| துளசராயடு | 7. |
| வெங்கட்டரமண ஐயர் | 4. |
| சைபதிஸ்மால்ராயடு | 7. |
| இராமசாமி ஐயர் | 2. |
| வெங்கிட்டவரத ஐயங்கார் | 1. |
| வெங்கடாசல நாயக்கர் | 3. |

"பிளாக்பர்ன்" என்னுந்துரை கலெக்ட்டராக மதுரைக்குவந்ததிகாரஞ்செய்யுங்காலத்தே இடமடங்கிய கோட்டைமேடுகளை யிடித்துத்திருத்தியும், வீதிகடோறுஞ் சலதாரைகட்டியும், வீதிவிசமைப்புப் பட்டணத்தைச்சிங்காரித்தும், காலியாயிருந்த இடங்களை வீடில்லாதவர்களுக்குக் கொடுத்தும், பிரதானமாகக் கீழமாசிவீதியும் தெற்குமாசிவீதிஞ்சேர்ந்த முகப்பான இடத்திலும் பெரியவிளக்குஸ்தம்பங்கள் நிறுத்தி, மற்றவீதிகடோறும் சின்ன விளக்குஸ்தம்பங்க ளூன்றித் தீபமேற்றச்செய்தும், மார்க்கட்டுகள் கட்டியும், வைகையாற்றைப் பாரவண்டிகள் வருத்தமில்லாது கடக்குமாறு கருங்கற்பாவியும், கோயிலின் தேவஸ்தானத்தைப் பிரிவுசெய்து மானேஜர்கள் காரியாதிகள் கிரமமாக நடக்கும்படிசெய்தும், ஜனோபகாரமாய் கீர்த்தியாயிருந்துவந்தனர்.

இவருத்தியோகம்பார்த்தவருடம் 18.

இவர்வந்த காலமுதல் 10-வது கலெக்ட்டர் விலிஞ்சித்துரைவரை கோயிலில் சீனிவாசராயர், வெங்கிடராயர், முத்துச்செல்லச்சேதுபதி, தண்சிங்குதுவேதிஐயர், புக்காராயதுவேதிஐயர், கணபதிஐயர், குப்பையர் முதலானவர்கள் மானேஜர்களாயிருந்துவந்த பின் ஷெடிவிகிநிசித்துரையால் 1864௵-த்தில் 5 கமிட்டிமெம்பர்களையும், அவர்களுக்குதவியாய் மானேஜர்முதலிய காரியஸ்தர்களையும்நியமித்து, சரியாய்நடந்துவந்தன.

இவர்க்குப்பின்

## ஆர்பத்நட்துரை 4.

12-வது கலெக்டராக வந்த மாக்வேதுரை காலத்தில் தேவிகோட்டை முத்துராமன்செட்டியார் குமாரர் குட்டை ஐயாவென்பூவர் சிவ திருப்பணியிற் சிந்தையுடையராய் முதல் வள்ளற்றன்மைபொருந்திய நாராயணன் செட்டியாரிடந் தனதெண்ணந் தெரிவித்தவுடனவர் 6000 தங்கப்பவுன் கொடுக்க, அத்துடனநேக திரவியஞ் சம்பாதித்து மதுரையில் சுவாமி சந்நிதி துயஸ்தம்ப மண்டப மாதிகளைக் கட்டி முடித்தற்கு பிரசோற்பத்தி ௵ தை ௴ 9௳ முகூர்த்த ஸ்தம்பம் நாட்டி, துயஸ்தம்பம், விமானமுதலியவைக்குத் தங்கத்தகடு பொதிந்து நந்திதேற்றிதள வரிசையிட்டு திருப்பணிவேலை குறைவறமுடித்து 15-வது கலெக்டர் ஸ்டோக்ஸ் துரைகாலத்தில் சுக்ல-௵ தை-௴ 27௳ வியாழக்கிழமை சுபமுகூர்த்தத்தில் அட்டபந்தன விமான துயஸ்தம்ப விடங்காதி திருவுருவுகள் கும்பாபிஷேகப் பிரதிட்டைசம்பிரமமாகநிறைவேறின.

வெகுதானிய௵ மாயாண்டிசெட்டியார் என்பவர் சீழ்புறமிருந்த தண்டாயுதபாணியை கோயிலுக்கு வடபுறம் கிழக்கு முகமாக ரூ 7000 செலவளித்துப் பிரதிட்டைசெய்து கும்பாபிஷேக முடித்தனர்.

இவர்களுக்குப் பின் க்ரோல்துரையென்னுங் கலெக்டர் மதுரைக்குவந்து, கோயிலைச்சுற்றி நான்குபுறமு மிருக்கின்ற சித்திரை வீதியில் நந்தவனத்திற்குக் குறைவாயிருக்கும் நிலங்களை வாங்கிவிட்டு இருப்புக்கிராதிகள் போட்டும், ஜனங்களின் சௌகரியத்தைக்கருதி வைகையாற்றினீரை குழாய்வழி தருவித்தும், தமுக்கம்பங்களாவில் விநோதருாதன சாலையும் நந்தவனமுமியற்றியும், மழைகாலத்தில் வைகையாற்றில் வெள்ளம் வரும்பொழுது நகர ஜனங்கள் அக்கரைக்குச் செல்லமார்க்கமில்லாது கஷ்டப்படுவதை நிவர்த்திசெய்யும் பொருட்டு 1882-௵த்தில் பாலங்கட்டுவதற்கு முயற்சித்து கல்லவேலையில் முகூர்த்தம் செய்து நீதியாக 4 வருஷமிருந்தார்.



## கோயில் உற்சவாதிகள்.

| | |
|---|---|
| சித்திரை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் | துவஜாரோஹணம். |
| எட்டாநாளிரவு | மலையத்துவஜ பாண்டியன் தடாதகைப்பிராட்டியாருக்குச் செங்கோல்கொடுத்துப் பட்டாபிஷேகஞ் செய்தல். |
| ஒன்பதாநாளிரவு | தடாதகைப்பிராட்டியார் அட்டதிக்குப்பாலர்களைச் செயித்தல் முதலியன. |
| பத்தாநாள் | உத்திர நட்சத்திரத்தில் தடாதகைப்பிராட்டியார் திருமணம். |
| பதினோராநாள் | இரதோற்சவம். |
| பனிரண்டாநாள் | சித்திராபவுரணையும், சித்திரைநட்சத்திரமுங்கூடிய தினத்தில், உற்சவபூர்த்தி. இந்திரன் பழிதீர்த்தபடலத்தின்படி இந்திரன்பூசை. |
| வைகாசி௴ திருவாதிரைநட்சத்திரமுதல் | மஞ்சணீர் வசந்தோற்சவம் விசாக மீறாகப் பத்துநாள்நடக்கும். |
| ஆனி௴ மகநட்சத்திரமுதல் | ஊஞ்சலுற்சவம் உத்திரதெரிசனமாதி மூல மீறாகப் பத்துநாள் நடக்கும். |
| ஆடி௴ ஆயிலிய நட்சத்திரமுதல் | முளைக்கொட்டுற்சவங் கேட்டை மீறாகப் பத்துநாள் நடக்கும். |
| ஆவணிமாசம் | திருவாதிரைநட்சத்திரத்தில்பிட்டுற்சவத்திற்கு துவஜாரோஹணஞ் செய்து, சந்திரசேகரப்பெருமானுக்கு ஆறுநாளுற்சவம்போக ஏழாவதுதினம் உத்திரநட்சத்திரதினத்தில் சோமாஸ்கந்த ரெழுந்தளியாதல், கரிக்குருவிக்குபதேசம், நாரைக்குமுத்தி, மாணிக்கம்விற்றல், தருமிக்குப் பொற்கிழி யளித்தல், உலவாக்கோட்டையருளல், அங்கம்வெட்டல், அன்றிரவு கழுவேற்றல், மறுநாள் வளையல்விற்றல், அன்றிரவு சோமசுந்தரபாண்டியனுக்குத் தடாதகைப்பிராட்டியார் பட்டஞ்சூட்டல், எட்டாநாள் மூலநட்சத்திரத்தில் குதிரை கயிறுமாறல், பூராடநட்சத்திரத்தில் மண்சுமந்தல், அடுத்த நாள் விறகுவிற்றல், மறுதினம் ரதோற்சவம், அவிட்டநட்சத்திரத்தில் உற்சவபூர்த்தி. |

| | |
|---|---|
| புரட்டாசிமீ | சுக்கிலபட்சப் பிரதமை தினம் நவராத்திரி கொலுவாரம்பம், அட்டமியில் மயிடாசுரசங்காரம், நவமியில் சிவபூசை. |
| ஐப்பசிமாதம் | சுக்கிலபட்சப் பிரதமைமுதல் கோலாட்ட உற்சவம் பத்துநாள்நடக்கும். |
| கார்த்திகைமீ | சதைய நட்சத்திரத்தில் துவஜாரோஹணம். எழுநாள் கார்த்திகை நட்சத்திரத்தில் அக்கினி சொருபங் காட்டல், திருவாதிரையில் உற்சவ பூர்த்தி. |
| மார்கழிமாதம் | எண்ணெய்க்காப்புற்சவம் திருவெம்பாவை முதல் ஆருத்திராதெரிசன மீறாகப் பத்துநாள்நடக்கும். |
| டிமாதம் | அமரபட்ச அட்டமித் திதியன்று சோமசுந்தரப்பெருமான் அம்மை சமேதராய் சௌவந்திமலர்ச் சப்பரத்திலாரோஹணித்து, கோட்டைவீதியென்னும் வெளிவீதி பிரதட்சணஞ்செய்து சகல ஆன்மகோடிகளுக்கும் படியளத்தல். |
| தை மாதம் | சங்கராந்தியில் கல்லானைக்குக்கரும்பளித்தல் |
| சதையநட்சத்திரத்தில் | துவஜாரோஹணம், எட்டாந்திருவிழா வலைவீசுதல், பனிரண்டாந்திருவிழா தெப்போற்சவதினத்தில் ஆனையெய்தல். |
| மாசிமாதம் | மண்டலவுற்சவம் மகநட்சத்திரத்திலாரம்பம்<br>விநாயகருக்கு வேளை 9.<br>சுப்பிரமணியருக்கு வேளை 9.<br>முதலிமூவர் வேளை 5.<br>சந்திரசேகரர் வேளை 11.<br>சோமாஸ்கந்தர் நாள் 10. வீதிவலம் மகத்தில் தீர்த்தம்.<br>சோமாஸ்கந்தர் சுத்தமவுனம் நாள் 3.<br>சந்திரசேகரர்சுத்தமவுனம் நாள் 3.<br>சண்டேசுவரர் உற்சவம் நாள் 3. |
| பங்குனி மாதம் | கார்த்திகைநட்சத்திரமுதல் உத்திரநட்சத்திரம்வரை சோலை வசந்தவுற்சவம் பத்துநாள் நடக்கும். |



## முதற் சங்கம்.

முதற்றமிழ்ச்சங்கந் தோன்றிய காலத்து கடல்கொள்ளப்பட்டகுமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கு மத்தியிற் பரந்துள்ளநாற்பத்தொன்பது நாடே சிறந்ததாய் அவற்றுள் மணிமலையையடுத்த நகரமே சிறந்த இராஜதானியாயிருந்தது. பிறநகரங்களுமுண்டு. செங்கோ, வண்கைவிரக்கோ முதலிய அரசர்களரசாண்டுவந்தார்கள். ஏழ்தெங்கநாடு, பெருவளநாடு, முத்தூர், பேராற்றுநெடுந்துறையூர், குணப்பகடியூர், மூரஞ்சியூர் நாடுகளும் மணிமலைமுதலியமலைகளுமிருந்து கடல்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் நீலகண்டனிமலனும், ஒள்வேற்காளையும், வடதிசைக்கிழவனும், இந்திரனும், மூரஞ்சியூர் முடிநாகராயரும், முத்துராகத்தியருஞ் சங்கப்புலவர்களாயிருந்தார்கள். அவர்கள்காலத்தே பல்லாயிரம் பனுவல்களாலும், பற்பலபாவினங்களாலும், ஒவ்வொருவருந் தந்தம்பெயராலுநூற்களியற்றினர். அவைகளிற் சிலவற்றின் பெயர்களே தெரியலாயின. அவைகள்யாவன:— பரிபாடல், முதுநாரை, பேரிற்று நெடுந்துறையன் பெருநூல், முதுகுருகு, களரியாவிரையிவைகளே யென்பன.

அக்காலத்து இலக்கணம் சிவபெருமானாலும், சுப்பிரமணியராலும், குபேரனாலும், இந்திரனாலும், இயற்றப்பட்டவிலக்கணங்களே. இவற்றுள் பெரும்பால். கடல்கொண்டபோது மறைந்து போயின.

## இரண்டாஞ்சங்கம்.

இரண்டாஞ் சங்கக் காலத்து கபாடபுரமே ராஜதானியாயிருந்தது. அதில் இடைச்சங்க மேற்பட்டு, அகத்தியரும், அவருடைய பன்னிருமாணவர்களும், சிறுபாண்டரங்கனார், திரையன்மாறனார், துவரைக்கோமான், கீரந்தையார்முதலிய அரும் பெரும் புலவருஞ் சங்கப் புலவராக வீற்றிருந்தார்கள். இவர்கள் காலத்தில் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை பாண்டியர்களரசாண்டு வந்தார்கள். இவர்கள் காலத்து பாடப்பட்டன கலியுங் குருகும், வெண்டாளியும், வியாழமாலையும், அகவலுமென்பன

அக்காலத்து நூல் அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம் என்பவைகள். இதனையும்பின் மனுவந்தரத்தில்கடல் கொள்ளப்பட்டபோது தமிழ்நாடுசெய்தவப் பேற்றாற் றமிழ்நூல்களிற் சில அழியாதெஞ்சி நின்றன.

## மூன்றாஞ்சங்கம்.

மூன்றாஞ்சங்கம்; மதுரைப் பதியினை இராஜதானியாகக்கொண்டு அரசுபுரிந்தவரும் இரண்டாஞ்சங்கம் கடல்கொண்டபோது தமிழின் சுவையை நினைந்து அடிக்கடி உள்ளுருகி அந்நினைப்பே தலைக்கொண்டவராகயிருந்து மூன்றாஞ்சங்கத்திற்கு முதற்பாண்டியனைத் தோன்றியவருமாகிய முடித்திருமாறனென்ப. இச்சங்கக் கடைக்காலத்திருந்த அரசன்; பாண்டியன் உக்கிரப்பெருவழுதியாகும். இவ்வவைக் களத்துத் தலைமைவாய்ந்து புலமைநடாத்தியவர் கபிலர், பாணர், பூதஞ்சேந்தனார், நக்கீரனாராதியாக நாற்றொன்பதின்மராகும் இவர்கள் காலத்துப் பாடியசெய்யுள்கள் முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, வரிப்பாடல், பதிற்றுப்பத்து ஐந்திணையம்பது, திணைமாலை நூற்[illegible] பரிபாடல், குறுங்கலிமுதலியனவாகும் என்று ஆ[illegible]

திருவா[illegible]யென்னும்

மதுரை மான்மியம்

முற்றிற்று.